

கல்கி
KALKI 27.12.1959
30 காசு



பாண்ட்ஸ்

கோல்டு க்ரீம்

* சுத்தம் செய்கிறது
* அழகுபடுத்துகிறது
* பாதுகாப்பளிக்கிறது



தினமும் இரவில் உங்கள் முகத்தில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை அழுத்தித் தடவுங்கள். அது சருமத்தில் ஊடுருவிச்சென்று அழுக்கை அகற்றி சருமத்தை சுத்தமாகவும் மென்மையாகவும் வைக்கும். சருமத்திற்கு போஷாக்களிக்கும் இந்த கோல்டு க்ரீமை பிரதிதினமும் உபயோகித்து வந்தால் உங்கள் முகம் பொலிவுடனும் அழகுடனும் விளங்கும்.

வானிஷிங் க்ரீம்

பவுடர் கலையாமலிருப்பதற்கு பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை தடவி பவுடர் போட்டுக் கொள்ளுங்கள். எண்ணெய் பசையற்ற இந்த க்ரீம், பவுடரை மணிக்கணக்காக படிந்திருக்கச் செய்யும். உங்கள் அழகையும் பாதுகாக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது)

கல்கி

பொருளடக்கம்

டிசம்பர் 27, 1959

நமது வெளிநாட்டுக் கொள்கை (தலையங்கம்)	ராஜாஜி	...	3
சென்னையில் சங்கீத சீஸன்	...	...	4
சிறையில் சிநேகம்!	விஜி	...	5
என்ன சேதி?	...	..	6
அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு	...	...	9
அக்கப்போர் அப்பு	...	...	12
மதுரகான மணி	...	...	15
பாராளுமன்றத்தில் படத்திறப்பு விழா	கப்புடு	...	19
குழந்தைக் குலம் குதூகலிக்கிறது	ஆனந்தி	...	21
தெய்வம் சிரித்தது	ஜ. சாமிநாதன்	...	29
வேங்கையின் மைந்தன்	அகிலன்	...	35
சகோதரி	காந்தன்	...	45
அமரதாரா (நாடகம்)	...	...	46
டென்னிஸ் விருந்து	குண்டுமணி	...	48
நாட்டு வைத்தியம்	ஸ்ரீஹரி	...	49
உத்தரமேரூர் சுந்தர வரதன்	தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்	...	53
தேன்கூடு	ஆர்வி	...	57
கண்கள் உறங்காவோ?	மாயாவி	...	67
அவல வடிவம்	வே. கோவிந்தராஜன்	...	76
பிறந்த மண்	'பிலஹரி'	...	82
பலூன் வெடித்தது	கபாஸ்ரீ	...	91

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 19 இதழ் 22	தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்	விகாரி ஆம் மார்கழி 12உ

நமது வெளிநாட்டுக் கொள்கை

ராஜாஜி

சீனாவின் பிடிவாதமான போக்குக்கு மருந்து போர் அல்ல; நல்ல தற்காப்பும் கூட்டணி ஏற்படுத்திக் கொள்வதுந்தான். சீனாவின் இந்த ஆக்கிரமிப்புகளின் நோக்கம் இந்திய நாட்டைப் படையெடுத்துத் தலைதாக்கிக் கொள்ளலாம் என்கிற பைத்தியக் காரத்தனமல்ல. ஹிமாலயச் சாரலை யொட்டியுள்ள நேபாளம், பூடான், சிக்கிம் முதலிய நாடுகள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்புகளை நீக்கி இந்தியாவின் செல்வாக்கைக் குறைத்துத் தன் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்வதுதான் சீனாவின் நோக்கம். இந்த நோக்கத்தில் சீனா இதற்குள்ளாகவே ஓரளவு வெற்றி பெற்றுவிட்டது. நாம் தக்க சமயத்தில் சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததால் இந்த நிலை ஏற்பட்டது. இவ்விஷயத்தில் இதற்கு மேல் விரித்துப் பேசுவது உசிதமல்ல. இனி குறைந்துபோன செல்வாக்கை ஓரளவேனும் நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்க வேண்டும்.

இந்தியாவை நம்புவதைவிடச் சீனாவை நம்புவது மேல் என்ற எண்ணத்தை இமாலய நாடுகளிடயே ஏற்பட இடம் கொடுக்கக் கூடாது. இந்தப் புது உறவு வளர விடுவது தற்கொலைக்கு ஒப்பாகும்.

தில்லி மக்கட் சபையிலும், வெளியில் பொது மேடைகளிலும் அந்நாடுகளிடம் நமக்குள்ள சிநேகப்பற்றைப் பாடிவருவது மட்டும் போதாது. பிரத்தியட்ச நிலைமையைச் சமாளிக்க வாய் வார்த்தை உதவாது. நவீன நாகரிக வாழ்வில் இந்த இமயமலைச் சாரல் மக்களைவிட நாம் முன்னேறியவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் விஷயம் தெரியாதவர்களல்ல; எல்லாம் நன்றாகத் தெரியும். நாம் புது பலத்தோடு இருக்கிறோம் என்று தெரிந்தால்தான் அவர்கள் நம்மை மதிப்பார்கள், நமக்குள் இருந்து வரும் பண்டை நெடுந் தொடர்பு உறுதிப்படும்.

அப்படியானால் 'புது பலம் சம்பாதித்துக் கொள்வது எப்படி?' என்கிற கேள்வி எழுகிறது. ஆயுதங்களையும் தளவாடங்களையும் வாங்குவதில் மட்டும் பலன் ஏற்படாது. கம்யூனிஸ சார்பற்ற ஆசிய நாடுகளுடன் புது ஒப்பந்தம் செய்துகொண்டு கூட்டுப் பலம் வளர்க்க வேண்டும். இத்தகைய ஒப்பந்தம் செய்து கொள்வதுதான் சாமர்த்தியமாகும். கூட்டுப் பாதுகாப்பு செய்துகொள்ளலாம் என்று அயல்நாடு ஒன்று கை நீட்டினால் அதை உதறித் தள்ளுவது புத்திசாலித்தனமல்ல.

அமெரிக்க ஜனாதிபதி காண்பித்த நேசப்பான்மையைக் கண்டு இப்போது பெருமிதம் அடைந்தோம். அமெரிக்கர்களுக்கு நம்மிடத்தில் எப்போதுமே சிநேகபாவம் உண்டு. அது இல்லை என்று எப்பொழுதாகிலும் எண்ணியிருந்தால் அது தவறு. அதைக் கண்டு திருப்தி பட்டுப் போனால் போதாது. அமெரிக்க உதவியைப் பெற வேண்டுமானால் பக்க பலத்தோடும் செல்வாக்குடனும் அமெரிக்காவிடம் சென்று பெறவேண்டும். கஷ்டத்திலிருக்கும் ஏழை உறவினனைப்போல் உதவி பெறுவதில் பொருளில்லை.

கீதை வெகு காலத்திற்கு முன்பே மனத்தில் கஷ்டப்பட்டுக் கொடுக்கும் தானம், மரியாதையின்றி மனத்தில் வெறுப்புடன் அளிக்கும் தானங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்திருக்கிறது. அமெரிக்கா அளிக்கப் போகும் ராணுவ உதவியோ, பொருளாதார உதவியோ மேலே குறிப்பிட்ட முறையிலிருக்கும் என்று நான் சொல்லவில்லை. ஆனபோதிலும் சாஸ்திரத்தின் எச்சரிக்கையை

மனத்தில் கொள்வது நலம். மேற்கத்திய நாடுகளின் உதவிபெற வேண்டியது அவசியம் என்று ஏற்பட்ட பிறகு புது பலத்துடன் நெருங்குவதே உசிதம். இந்தப் புது பலத்தைக் கம்யூனிஸ ஆட்சியை விரும்பாத ஆசிய நாடுகளின் ஒத்துழைப்பைக் கோரிப் பெறுவதன் மூலம் அடையலாம். பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் நாம் நம் பழைய பூசல்களை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். இரு நாடுகளுக்குமே ஒரு பெரிய எதிரி வந்துள்ள நிலையில், அதுதான் முக்கியமானதாகக் கருதவேண்டுமே யொழிய, சில்லறை விஷயங்களை மறந்துவிட வேண்டும்.

சீனாவை நாம் எவ்வளவோ கேட்டுக் கொண்டும், அது பிடிவாதமாகவே நடந்து கொண்டு வந்திருக்கிறது. இதனால் ஆசியாவில் நமது கௌரவம் குறைந்து போயிற்று. ஆகவே இனி நாம் கிழக்கும் மேற்கும் நோக்கிக் கூட்டுறவு சம்பாதிக்க வேண்டும். அவ்வாறு சம்பாதித்து, பழுதுபட்ட கௌரவத்தை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு புது பலம் பெற்றுக்கொண்டபின் அமெரிக்காவிடம் உதவிக்குச் சென்றால் ஏழை உறவினன் போல் கருதாமல் நம்மாலும் அவர்களுக்குப் பயனுண்டு என்ற எண்ணத்துடன் உதவும்.

ஆகவே, நமது அந்நிய நாட்டுக் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். பழுதுபட்டுப் போனதைச் சுலபமாகச் சீர்ப்படுத்திவிட முடியாது. ஆயினும் உடனடியாகச் செய்ய வேண்டியதைச் செய்தே தீர வேண்டும். தன்னந் தனியாக நின்று இரண்டு விரோதிகளைச் சமாளிக்க முடியாது. உள்நாட்டுப் பிரச்னைகளைச் சமாளிப்பதே பெரும் பிரச்னையாக இருக்கும் இச்சமயத்தில் இரண்டு வெளி விரோதிகளை வைத்துக் கொள்வது தவறாகும். நம்முடன் நட்பு கொள்ள முன் வருபவர்களை நாம் வரவேற்க வேண்டும். பழைய அருவருப்புகளைக் கட்டிவைத்துத்தான் தீரவேண்டும். அதனால் நமது கௌரவத்துக்கு ஒருவித ஹானியும் உண்டாகாது. பாகிஸ்தானின் சார்பில் சொல்லப்படும் யோசனைகளைத் தீரப் பரிசீலிப்பது கடமை.

ருஷ்யத் தலைவர்கள் ஏதேனும் சமரச பாவனையுடன் முயற்சி செய்வார்கள் என்று இருந்த நம்பிக்கை இல்லை என்று முடிந்துவிட்டது. ஆனபடியால் நாம் நடுநிலைமையிலிருந்து அகன்றதாக நம்மேல் குறை சொல்வதற்கு இடமில்லை.

இந்தியா வகுத்துக் கொண்ட 'வல்லரசு கோஷ்டி எதனுடனும் சேருவதில்லை' என்ற நடுநிலைமைக் கொள்கைக்குக் காரணம் இருந்தது. பயமும் அஸ்திஜுரமும் உலகத்தைப் பாழ்படுத்தி வருவதற்கு நாமும் சேர்ந்து வியாதியை அதிகப்படுத்தலாகாது என்று அந்தக் கொள்கையை வகுத்துக் கொண்டோம். வல்லரசுக் கோஷ்டி நாடுகளிலேயே ஒன்று இப்பொழுது எக்கட்சியிலும் சேராத இந்தியாவின் மீது ஆக்கிரமிப்பு செய்துள்ள போது 'கோஷ்டிப் பூசலில் சேர்ந்துகொள்ள வேண்டாம்' என்னும் நடுநிலைமைக் கொள்கைக்குப் பொருள் இல்லை. நம் நாட்டின் மேல் ஆக்கிரமிப்பு நடக்கும்போது தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாமல் சும்மா இருந்தால் நடுநிலைமைக் கொள்கை என்பது பரிகாசமாக முடியும்!

சென்னையில் சங்கீத சீஸன்

சென்னை சங்கீத ரசிகர்களெல்லாம் காதைத் தீட்டிக் கொண்டு இசையமுதைப் பருக, " எப்போது வரும், எப்போது வரும், " என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்த சங்கீத சீஸன் இவ்வாரத்தில் வழக்கமான கோலாகலத்துடன் ஆரம்பமாகிறது.

சென்னை வித்வத் சபையின் இவ் வருஷத்திய மகாநாடு சொந்தக் கட்டடத்தில் நடத்த வசதிகள் பூர்த்தியாகாத காரணத்தால் பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள பிரத்தியேக அலங்காரப் பந்தலில்தான் நடைபெறுகிறது. மத்திய சர்க்கார் கலைத்துறை அமைச்சர் ஹுமாயூன் கபீர் மகாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார். சங்கீதத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட அகில இந்திய ரேடியோ டைரக்டர் ஜெனரல் திரு ஜே. வி. மாத்தூர் அவர்கள் வித்வத் ஸதஸுக்குத் தலைமை தாங்கப் போகிறார். இசை விழாக்களுக்கும், சர்ச்சைகளுக்கும் வித்வான் மதுரை மணி அய்யர் தலைமை தாங்கிச் சிறப்பிக்கிறார்.

தமிழ் இசைச் சங்கத்தின் பதினேழாவது ஆண்டு விழா வழக்கம்போல் அண்ணாமலை மன்றத்தில் 24-ந் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்கு அமோகமாக நடக்கவிருக்கிறது. மத்திய அமைச்சர் குழுவில் தென்னாட்டின் பிரதிநிதியாக விளங்கும் டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் விழாவைத் துவக்கி வைக்கிறார். நீதிபதி எஸ். கணபதியா பிள்ளை அவர்கள் தலைமையில் இவ் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நடைபெற விருக்கின்றன. தமிழ் இசைச் சங்கத்தின் தனிச் சிறப்பாக விளங்கும் பண் ஆராய்ச்சியின் பத்தாவது கூட்டம் இம் மகாநாட்டில் நடைபெற விருக்கிறது. தமிழகத்தின் தனிப்பெரும் இசைக் கருவியாம் நாகசுரத்தில் மகா வித்வான் என விளங்கும் திருவிடைமருதூர் திரு பி. எஸ். வீருசாமி பிள்ளை அவர்கள் இப்பண் ஆராய்ச்சிக்குத் தலைமை தாங்கி நிர்வகிக்கப் போகிறார். கர்நாடக சங்கீத சுத்தத்துக்கும் கம்பீரமான நடைக்கும், வித்வத் புலமைக்கும் திரு வீருசாமியின் நாகசுரம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அவருடைய தலைமையில் நடக்கும் பண் ஆராய்ச்சி வழிகாட்டியாக அமையக் கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

இவை தவிர, சென்னை பைன் ஆர்ட் சொஸைட்டியும், கலாக்ஷேத்ர ஸ்தாபனமும் அவரவர்களுக்குரிய சிறப்பான அம்சங்களுக்கு எவ்விதக் குறைவுமின்றி விழாக்கள் நடத்தவிருக்கிறார்கள். இப்படி எங்கும் சங்கீதமும் நாட்டியமும் பரிணமிக்கும் இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப நமது ஓவியர் விஜயா நாட்டியமாடும் அணங்கு ஒருத்தி ஒரு பாட்டுக்கு அபிநயம் பிடிக்கும் காட்சியையே இவ்விதழ் அட்டைச் சித்திரமாக வழங்கியிருக்கிறார்.

சீனாவின் சிநேகம்!

—விஜி



அன்று
ஹிந்தி சீனி
பாய் பாய்!
பஞ்ச சீலம் வாழ்க!
பின்னர்
இந்தியாவல்ல
சீனப் பகுதி
நேரு ஒன்றும் சொல்ல மாட்டார்!
இந்திய காவல்
லடாக் பகுதியில் சீன துருப்புகள் நிகழ்த்திய படுகொலை.
கைது செய்து இந்திய துருப்புகளைக் கொடுமைப் படுத்தினர்.
திபெத்திலிருந்து இந்திய வர்த்தகர்களை வெளியேற்றினர்.
பீகிங்கிலுள்ள இந்திய தூதரைப் பார்க்க மறுத்து அவமானப் படுத்தினர்.
பார்க்க முடியாது
இன்று
"நேருஜீயே! பக்கத்தில் வாருங்கள்! நீங்கள் நல்லவர். எல்லாம் மேற்கத்தியர்களின் விஷமம்!"



காங்கிரஸ் 'கொறடா' விஷயம்!

நமது அரசியல் சட்டத்துக்கு எட்டாவது திருத்தம் மீது சமீபத்தில் பார்லிமெண்டில் வோட்டு எடுத்தபோது, போதிய அங்கத்தினர்கள் புதுடில்லியில் இருந்தும், வாக்கெடுப்பு சமயம் ஆஜராக இல்லாததால், திருத்தம் தோல்வியுறும் நிலைமையிலிருந்தது. ஜனநாயக முறைப்படி வாக்கெடுப்பு அன்று நடந்திருந்தால் தீர்மானம் நிறைவேறாமல் போயிருக்கும். அவ்வாறு நேர்ந்திருந்தால் நமது ஆளும் கட்சியின் செல்வாக்கு என்ன ஆவது? ஒரு அபூர்வ யோசனை அவர்களுக்குத் தோன்றியது. வோட்டுக்களைக் கணக்கெடுக்கும் யந்திரம் பழுதடைந்து விட்டதால் வாக்கெடுப்பை அடுத்த நாளைக்கு ஒத்திப் போட்டு அங்கத்தினர்களையெல்லாம் 'கொறடா'வினால் பற்றி இழுத்து வந்து, மெஜாரிட்டி திரட்டித் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்!

இதைக் கண்டு நாடு சிரித்தது. கட்சி பலத்தைக் கொண்டு சட்ட முறைகளைத் தங்களிஷ்டம்போல் பயன்படுத்திக் கொள்ளும் கோலத்தைக் கண்டு சிரித்தது! கதை அத்துடன் முடிந்து விடவில்லை. முதல் நாள் வோட்டெடுப்புச் சமயத்தில் வரத் தவறிய எம். பி.க்களுக்கு தலா ரூ. 21 வீதம் காங்கிரஸ் கட்சி அபராதம் விதித்திருக்கிறது. கடமை தவறியதற்காக இந்த அபராதம்! நமது எம். பி.க்களின் நடத்தை ஒருபுறமிருக்க; அவர்கள் ஆஜராக இருந்திருந்தால் அபராதம் இருக்காது. ஆனால் பழுதடைந்த யந்திரம்கூட முதல் நாளே சரியாக வேலை செய்திருக்குமா? வேலை செய்திருக்குமானால் யந்திரம் தவறிவிட்டது என்பது கட்டுக் கதைதானே! யந்திரம் எப்படியும் பழுதாய்த்தானிருந்தது என்றால் ஆஜராகாமலிருந்ததற்கு அபராதம் ஏன்? நமது காங்கிரஸ் கட்சியின் ஜனநாயகமே அலாதியாக இருக்கிறது.

பயனற்ற சட்டம்

"வரதட்சிணை கொடுத்தால்தான் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வேன்!" என்று ஒரு ஆண் மகன் கூறுவது வெட்கக் கேடு.

ஏழைமை நிலையிலுள்ள பெண்களின் பெற்றோர்கள் இந்த வரதட்சிணைக் கொடுமையினால் படும் அல்லல்கள் கொஞ்சமல்ல. தங்கள் பெண்களுக்குக் கல்யாணம் செய்து வைக்க முடியவில்லையே என்று ஏக்கம் கொள்கின்றனர் பெற்றோர். இதைக் கண்டு சில பெண்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

இந்திய சர்க்கார் தங்களுடைய சீர்திருத்த மனப்பான்மையைக் காட்டிக்கொள்ள வரதட்சிணைத் தடை மசோதாவை மக்கட் சபையில் கொண்டு வந்திருக்கின்றனர்.

நல்லோர் உபதேசத்தால் போக்கக்கூடிய இந்தக் கெடுதலைச் சட்டத்தின் மூலமாகப் போக்க முயல்வது முடியாத காரியம் என்பது இந்திய சர்க்காருக்கே தெரிந்திருக்க வேண்டும்.

மக்கட் சபையில் இந்தப் பயித்தியக்கார சட்டம் மிதமான தோரணையில் அமைந்தது. நிதானித்து யோசிப்பவர்கள் என்று பெயர் பெற்ற ராஜ்ய சபையினரோ இச் சட்டத்தில் 'தீவிர' மாறுதல்களைச் செய்யச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறார்கள். 'தண்டனையைக் கடுமையாக்க வேண்டும், கல்யாணத்தில் ஓதியிட்டுக் கொடுக்கப்படும் பரிசுகளைக்கூட வரதட்சிணையாகக் கருதித் தண்டிக்க வேண்டும்' என்றும் இன்னும் இதைப் போன்ற சில தீவிர யோசனைகளை வெளியிட்டிருக்கிறார்கள். பெண் குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்து வைக்கவேண்டும் என்று ஆத்திரப்படும் பெற்றோர்களுக்கு இந்தச் சட்டத்தினால் ஒரு பயனுமில்லை. கல்யாண விஷயத்திலும் கறுப்பு மார்க்கெட் வந்து சேரும். பலவித புது மோசங்களும் நடக்க இடம் ஏற்படும். பொய் விவாதங்களும்கூட கோர்ட்டுகளில் விசாரிக்க வேண்டியதாகும். சம்பந்திக்குக் கொடுக்கும் வரதட்சிணை போக, குறுக்கே சம்பந்தப்பட்ட வேறு சிலருக்கும் கொடுக்க வேண்டியதாகும். இந்த மசோதாவினால் வரதட்சிணைப் பழக்கம் தீரப் போவதில்லை.

பிரசாரத்தினாலும், விவாக தர்மத்தைச் சரியாக எடுத்துரைப்பதாலும் தைரியத்தினாலும் தீர்க்க வேண்டிய பிரச்னை, இந்த வரதட்சிணைப் பழக்கம். சட்டத்தினால் இதைப் போக்க முயன்றால், வரதட்சிணை — கள்ளத்தனமாகக் கேட்பதில் போய் முடியும். அது பெற்றோர்களுக்கு இன்னும் பன்மடங்கு சோதனையாக முடியும். கல்யாணங்கள் இன்னும் அதிகமாகத் தடைப்பட நேரும். ஆகவே, சர்க்கார் தரப்பினர் இந்த மசோதாவை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும்.

தலாய் லாமா

புத்தரின் அவதாரம் என்றும், நடமாடும் புத்தர் என்றும் கருதப்படும் தலாய்லாமாவும் அவருடைய கோஷ்டியினரும் இதுவரை தங்கியிருந்த முஸ்லோரி நகரத்தை விட்டு இப்போது சென்னைக்கு வந்திருக்கிறார்கள். தெய்வ வழிபாட்டுக்கும் சீரிய பண்புக்கும் உறைவிடமாக விளங்கும் தமிழகத்திலுள்ள புனித தலங்களைக் கண்டு தரிசிக்க யாத்திரை தொடங்கியிருக்கிறார். அவருடைய வருகை நல்வரவாகுக!


தலாய் லாமா

அவர் சென்னைக்கு வந்ததும் அடையாறு கலாக்ஷேத்திரத்தில் அவருக்கு வரவேற்பு உபசாரம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் ராஜாஜி, டாக்டர் சி. பி. ராமசுவாமி அய்யர் முதலியவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார்

இந்த நூற்றாண்டில் தமிழ்மொழிக்குப் பெருந்தொண்டாற்றிய புலவர் பெருமக்களில் பசுமலை நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரும் ஒருவர் ஆவார். நிறைந்த வருவாயும், புகழும் கொடுத்துக்கொண்டிருந்த வழக்கறிஞர் தொழிலை விட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றச் சென்ற பெருமை நாவலர் பாரதியாருக்கு உண்டு.



திரு சோமசுந்தர பாரதி

நாவலர் பாரதியார் 27-7-1879ல் திருநெல்வேலியில் தோன்றியவர். அவருடைய சொந்த ஊர் எட்டயபுரம் ஆகும். எட்டயபுரம் அரச குடும்பத்தில் அன்பும், ஆதரவும், தொடர்பும் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்து வளர்ந்தார் பாரதியார். கவி சுப்பிரமணிய பாரதியாருடன் நெருங்கிப் பழகிய சிறப்பும் நமது நாவலர் பாரதியாருக்கு உண்டு.

'சேரர் தாய முறை,' 'திருவள்ளுவர்' 'தசரதன் குறையும் கைகேயியின் நிறையும்' 'மாரிவாயில்' ஆகிய நூல்களும், அவர் எழுதிய தொல்காப்பிய ஆராய்ச்சிப் பகுதிகளும் தமிழகம் உள்ளவரை அவருடைய புகழைப் பரப்பிக் கொண்டே இருக்கும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவர் தமிழ்த் தலைமை பூண்டு பணியாற்றியதும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் செயலாளராயிருந்து, தொண்டுறவு பூண்டு அவர் செய்த தொண்டுகளும் மறக்க இயலாதவை.

நாவலர் பாரதியாருக்கு மூன்று பெண்களும் இரண்டு ஆண் மக்களும் உள்ளனர். நாவலருடைய பெண்களில் மூத்தவரான திருமதி இலட்சுமி பாரதி அவர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்களின் மனைவியாராவார்.

மறைமலையடிகள், திரு வி.க. வைப்போன்று பெரும் புகழும் பெற்ற தமிழ் நாட்டின் முதுபெரும் தமிழறிஞர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் டிசம்பர் 14ம் தேதி மதுரையில் அரசினர் வைத்தியக் கல்லூரியில் காலமானார் என்னும் செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டாபியின் மறைவு

டாக்டர் பட்டாபி சீதாராமய்யா காங்கிரஸ் பெருந்தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். ஆரம்ப நாட்களில் தேச பக்தியினால் உந்தப்பெற்று, காங்கிரஸில் ஒரு தொண்டனாகச் சேர்ந்த பட்டாபி, மற்றக் காங்கிரஸ் தலைவர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராகி காங்கிரஸ் அக்கிராசனர் பதவிக்கு உயர்ந்தார். ஒரு தடவை, காங்கிரஸ் அக்கிராசனர் பதவிக்கு சுபாஷ் போஸுடன் போட்டியிட்டுத் தோல்வி யுற்றபோது, காந்திஜி "பட்டாபியின் தோல்வி என் தோல்வி!" என்றார். இந்த மொழிகளை விடச் சிறந்த வெற்றி வாகை பட்டாபிக்கு வேறு என்ன இருக்க முடியும்?

சுதேச சமஸ்தானங்களிலிருந்த மக்களுக்குத் தேசபக்தி யுணர்ச்சியூட்டி அவர்களைச் சுதந்திர சூரியனை வரவேற்கச் செய்யும் பணியில் வெகுகாலம் ஈடுபட்டிருந்தார். ஆந்திர மாகாணப் பிரிவினைப் பிரச்னை எழுந்தபோது, சென்னையை நீக்கி, ஆந்திர மாகாணங்களைச் சேர்த்து ஒரு மாகாணமாக்கலாம் என்று ஜவாஹர், வல்லபாய் இவர்களுடன் சேர்ந்து நடுநிலைமையான ஓர் அறிக்கை வெளியிட்டார். இவ்வறிக்கைக்கு ஜே. வி. பி. ரிப்போர்ட் என்று பெயர். இந்த ஜே. வி. பி. ரிப்போர்ட்டினால் பட்டாபி ஆந்திர மக்களில் சிலருடைய அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டாலும், அவர்மீதிருந்த பக்தி சிறிதும் குறையவில்லை.



பட்டாபி சீதாராமய்யா

பட்டாபி சிறந்த தேசபக்தர். நல்ல அறிஞர். அவரது மறைவு இந்திய நாட்டுக்குப் பெருத்த நஷ்டமாகும்.


அது எவ்வளவு நன்றாக இருந்தது…
எனக்கு பிரியமான டூமெக்ஸ் பேபி புட்!
டூமெக்ஸ் பிரைவேட் லிமிடெட், பம்பாய் 1

அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு

தமிழ்த் தாய்க்குச் சென்ற வாரம் பெருமை மிகுந்த வாரமாகும்.

அகில இந்திய எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் இவ்வாண்டு சென்னையில் நடந்த இரண்டாவது மகாநாட்டுக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் எழுத்தாளர்கள் வந்திருந்தார்கள்.

பஞ்சாப் முதல் அஸ்ஸாம் வரையிலும், இமயம் முதல் இலங்கை வரையிலும் பன் மொழிகள் வழங்கும் பகுதிகளிலிருந்து முக்கிய எழுத்தாளர்கள் வந்திருந்தனர்.

மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய வங்காள நாவலாசிரியர் ஸ்ரீ தாராசங்கர் பானர்ஜி அவர்கள் "எது உயிருள்ள இலக்கியம்?" என்பதை நன்கு விளக்கியுள்ளார்.

"நமது இலக்கியங்களையும் படைப்புக்களையும் மேனாட்டு அளவுகோல் கொண்டு அளப்பதே வழக்கமாகி விட்டது. நாம் மேனாட்டாரை விடச் சில அம்சங்களில் சிறந்து விளங்கலாம் என்ற உணர்ச்சியே அற்றுப் போய் விட்டது.

"இந்தியாவுக்கு வந்த கிரேக்கர்கள், ஹூணர்கள், துருக்கியர்கள், மொகலாயர்கள் இவர்களிடமிருந்தெல்லாம் பல நல்ல அம்சங்களை வாங்கிக் கொண்டு இந்தியப் பண்பாடு தனித்துச் சிறப்புற்று வாழ்ந்து வந்திருக்கிறது. இப்பொழுது அரசியல் சுதந்திரம் பெற்ற பின் நமது பண்பாட்டுச் சுதந்திரத்தை இழந்துவிடப் போகிறோமா என்பதே கேள்வி" என்றார்.

இந்த மகாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் மந்திரி திரு பக்தவத்சலம் அவர்கள் எழுத்தாளர்களின் பொறுப்பை மிக நல்ல முறையில் விரிவாக எடுத்துரைத்தார்.




ஸ்ரீ தாராசங்கர் பானர்ஜி

அன்று மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்களும் "பொது லட்சியத்தைக் காப்பதில் எழுத்தாளர்கள் விட்டுக் கொடுக்கக் கூடாது" என்று சொன்னார். இன்றையத் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றியும் குறிப்பிட்டார்.

"எந்த விஷயத்தைப் பற்றி எழுதினாலும் எவ்வித கதையோ கட்டுரையோ எழுதினாலும் அதனால் மக்களின் உள்ளத்தில் தர்மம் சத்தியம் ஒட்டிய உணர்ச்சிகள் எழும்படி எழுத வேண்டும்" என்று ராஜாஜி இம்மகாநாட்டில் எடுத்துரைத்தார்.










இம்மாதம் 9ந் தேதி புதுதில்லிக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவருக்குச் சரித்திரம் காணாத வகையில் வரவேற்பு அளித்தார்கள் பாரத மக்கள்.

1. விமான நிலையத்தில் ராணுவ மரியாதை. 2. ஜனாதிபதி ராஜன் பாபு அளித்த வரவேற்புரைக்குப் பதிலளிக்கிறார். 3. மக்களின் அன்புப் பிரவாகம். 4. ராஜகட்டத்தில் மகாத்மாவின் நினைவைப் போற்றுகிறார். 5. ஐஸன்ஹோவரின் மருமகள் பார்பரா பாரத நாட்டின் உடை அலங்காரங்களைப் பார்த்து மகிழ்கிறார். 6. விவசாயப் பொருட்காட்சி சாலையின் அமெரிக்கப் பகுதியைத் திறந்துவைக்கிறார். 7. அங்கே அணுசக்தி 'ரியாக்ட'ரை இயங்கச் செய்கிறார். 8. ராம்லீலா மைதானத்தில் ஐஸன்ஹோவர். 9. புகழ்பெற்ற செங்கோட்டைக்கு












முன்னால் ஜனாதிபதியின் மோட்டார் விரைகிறது. 10. டில்லி சர்வகலாசாலை அளித்த கௌரவ டாக்டர் பட்டத்தை ஏற்கிறார். 11. தாஜ்மகாலைப் பார்த்து மகிழ்கிறார். 12. அமெரிக்க ஸ்தானிகராலயத்துக்கும் விஜயம் செய்தார். 13. ஆக்ராவுக்கருகே கிராம மக்களையும் கண்டு களிக்கிறார். 14. அமெரிக்க ஜனாதிபதியும் பாரதப் பிரதமர் நேருஜியும்.











அக்கப்போர் அப்பு



அப்பு : இந்த மார்கழி மாதம் கிறிஸ்துவர்களுக்கும் முக்கியமானது. இது தெரியுமா உமக்கு கோவிந்தசாமி?

கோவி : அது எப்படி முக்கியமாகும்?

அப்பு : மார்கழியிலேதான் கிறிஸ்தவர்களுக்கு முக்கியமான டிசம்பர் மாதமும் பிறக்கிறது. அவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடுகிறார்கள்!

கோவி: ஆமாம்! ஆமாம். இது கிறிஸ்துமஸ் மாதம் என்பதை மறந்து விட்டேன், மார்கழி மாத வெண் பொங்கல் நினைவில்.

அப்பு : இந்தக் கிறிஸ்துமஸ் மாதத்தில், போனவாரம்சென்னையிலுள்ளகிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் சமூகப் பிரதிநிதிகள் கூடி, ராஜாஜிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் மனமார வாழ்த்துக் கூறினார்கள்.

கோவி: ஊம்! சொல்லும் நல்ல செய்தியை!

அப்பு: தலைமை வகித்த திரு லோபோ பிரபு காங்கிரஸ் ஆட்சியில் கிறிஸ்தவர்கள் அடைந்துவரும் துயரங்களைப் போக்கச் சுதந்திரக் கட்சி உதவி செய்ய வேண்டுமென்றார்.

கோவி: எல்லோருக்கும் உதவிசெய்யத்தானே அது தோன்றியிருக்கிறது.

அப்பு: தனி மனிதன் சுதந்திரம் பறி போகிறது. தனி உடைமை பொதுவுடைமையாகிறது. கூட்டுப்பண்ணை விவசாயம் வருகிறது. சோஷலிஸம் திணிக்கப்படுகிறது. ஜனத்தொகைக்குக்கூட உச்சவரம்பு கட்டப்படுகிறது. சாமி, கடவுள் இதிலே நம்பிக்கை இல்லை என்று சொல்லப்படுகிறது.

கோவி: கம்யூனிஸ்டு நாடுகளில் நடப்பதைத்தானே சொல்லுகிறீர்கள்?

அப்பு: இல்லை. இல்லை. இங்கே நடந்து வரும் காங்கிரஸ் நிர்வாகப் பலன்களைத்தான் சொல்கிறேன். அன்று டாக்டர் சந்தோஷம் சாதி வித்தியாசத்தைக் காங்கிரஸ்காரர்கள் தான் வளர்த்து வருகிறார்கள் என்றார்.

கோவி : உண்மை! உண்மை! பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலே கூட இவ்வளவு சாதி, மொழி துவேஷம் வளரவில்லை. பம்பாயிலே குஜராத்தி, மராத்தி வித்தியாசத்தைப் பாருங்களேன்!

அப்பு : அப்புறம் பார்க்கலாம். இதைக் கேளும். அந்தக் கூட்டத்திலே லோபோ பிரபு மதுவிலக்குச் சட்டம் தோற்று விட்டதால் அதைச் சுதந்திரக் கட்சி ரத்து செய்ய வேண்டுமென்றார். ராஜாஜி இதற்கு அன்புடன் பதிலளித்தார் பாருங்கள்:

''மக்களின் நன்மைக்காகவே மதுவிலக்கு கொண்டு வந்தேன். மதுவிலக்கு போன்ற விஷயங்களில் தனிப்பட்டவர்கள் தங்கள் கருத்துக்களைத் தாராளமாகச் சட்டசபைகளில் வெளியிடலாம். ஜனப்பிரதிநிதிகள் பெரும்பாலோர் 'மதுவிலக்கு வேண்டாம்' என்று தீர்மானித்தால் தீர்மானிக்கட்டும். ஆனால், நான் அதை ரத்து செய்வதற்கு ஒரு போதும் சம்மதியேன், இதற்காகக் கிறிஸ்தவ மக்கள் என்னைக் கைவிடமாட்டார்கள் என்று நம்புகிறேன்'' என்றார் ராஜாஜி. ராஜாஜிக்கு ஸ்ரீ ஸிவாட், ஸ்ரீ சந்தோஷம் முதலியவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துக் கூறினார்கள்.

கோவி: திரு ஸிவாட் என்பவர் பேசினதைச் சொல்லவில்லையே!

அப்பு : அவசரப்படாதேயும். அவர் பேசவில்லை. ஆனால் கிறிஸ்தவ சமூகத்தைக் கோபித்துக் கொண்டார் என்றே சொல்வேன்!

கோவி: ஏன் கோபித்துக் கொண்டார்?

அப்பு : ''பன்னிரண்டு வருடங்களாகக் காங்கிரஸ் ஆட்சி மோசமாக நடப்பதை அறிந்தும் அதை ஒழித்துக்கட்ட முயற்சி செய்யாமல் ஏன் தூங்கிக் கொண்டிருந்தீர்கள்? எப்படி நீங்கள் அலட்சியமாயிருக்கலாம்?'' என்று கோபித்துக் கொண்டார். பிறகு சாந்தியடைந்து ''போகட்டும்! சுதந்திரக் கட்சியின் சங்கநாதம் கேட்டு இப்போதாவது விழித்துக் கொண்டீர்களே!'' என்று அவர்களைப் பாராட்டினார்.

கோவி : இந்த மார்கழி மாதத்தில் கும்பகர்ணன்களும் கூட சுதந்திரோதயம் காண விழிப்படைவார்கள்.

அப்பு : நாடு முழுமைக்குமே இது நல்ல மாதம். விழிப்படைய வேண்டிய மாதம்.

கோவி : இந்த மாதத்தில், விடியற்காலம் பொங்கல் கிடைக்கப் பெறாதவர்கள், இட்லி சாம்பார் சாப்பிடலாமா?

அப்பு : இட்லி சாம்பாருக்கும் நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டியதுதான். அமெரிக்காவிலிருந்து வந்த ஐஸன்ஹோவருக்கு என்னவெல்லாமோ பரிசளித்தார்கள். நம் இட்லி சாம்பாரை நானும் குப்புவும் சென்று அளிக்காமல் போனோம். திரு ஐஸன்ஹோவர் மட்டும் அதை ருசி பார்த்திருந்தால் நம் நாட்டுக்கு இன்னும் அதிக உதவி 'சாங்ஷன்' செய்வார் அல்லவா?

— ''கொக்கி''


தத்ரூபமான நாதம், நம்பகமான சேவை
அளிக்கும் இந்தப் புதிய உயர்தரமான
ரேடியோ டெலிராட் வர்க்கத்திற்கு
இன்னும் ஓர் புதிய அணிகலன்.

விசேஷ நுணுக்கமறிந்தவர்களைக்கூட திருப்தி செய்ய...

TELERAD

ஜெர்மன் தொழில் முறை அறிந்த
இன்ஜினீயர்களால் தயாரிக்கப்பட்ட
டெலிராட் ரேடியோ ஒன்றுதான் உங்கள்
பணத்திற்குகந்த மதிப்பளிக்கிறது.

உங்கள் டெலிராட் டீலரிடம் இந்த
ரேடியோவை வைக்கச் சொல்லி கேளுங்கள்
இந்த விலைக்கு இதைவிட நல்ல ரேடியோ
வாங்க முடியாது என்பதை உணர்வீர்கள்.



Model D 639	WK	GWK	BK	
	AC	AC-DC	Battery	Price Rs. 330/- plus taxes

★ 6 வால்வுகள்
★ 11 முதல் 560 மீட்டர்கள்
★ 4 வாட்ஸ் அவுட்புட்
★ பிளை - வீல் டியூனிங்
★ விசிறி போன்ற மாஜிக் ஐ

★ உட்புற ஏரியல்
★ அதிகப்படி ஸ்பீக்கர்களுக்கும் பிக்-அப்புக்கும் இணைப்பு வசதிகள்
★ அழகான வினீர் மர காபினெட்
★ இந்திய சீதோஷ்ண நிலைக்கேற்றது

சென்னை ஆந்திர ராஜ்யங்களுக்குப் பூரண விநியோகஸ்தர்கள் :

ஓபுல் ரெட்டி (மதராஸ்) பிரைவேட் லிமிடெட்
31, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை - 2 — போன் : 84830

சென்னை ராஜ்ய ஜில்லா விற்பனையாளர்கள் :

ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (சவுத் இந்தியா) லிமிடெட், கோயமுத்தூர் ★ ஜெர்மன் ரேடியோ ஹவுஸ், திருச்சி ★ பாலு ரேடியோ சர்வீஸ், மதுரை ★ ஆர். சுந்தரேசன் & கோ., சேலம் & கிருஷ்ணகிரி ★ மூர்த்தி ரேடியோஸ், கும்பகோணம் ★ ஆர். கே. எலெக்ட்ரானிக்ஸ் திருநெல்வேலி ★ ஏ. சுப்பன் & கோ., வேலூர் ★ ஜார்ஜ் ஓக்ஸ் பிரைவேட் லிமிடெட் உதகமண்டலம் ★ டி. என். எஸ். சுந்தரராஜ பாகவதர் & சன்ஸ், பாண்டிச்சேரி

விற்பனையாளர்கள்:

பீபிள்ஸ் ரேடியோ கம்பெனி, காஞ்சீபுரம் ★ செட்டிநாடு எஜென்ஸீஸ், தஞ்சாவூர் ★ தாமரை ரேடியோ ஹவுஸ், ஜோலார்பேட்டை ★ நாராட் & கோ., சோளிங்கபுரம் ★ நாமக்கல் ரேடியோ ஹவுஸ், நாமக்கல் ★ நேஷனல் ரேடியோ ஹவுஸ், துறையூர் ★ ஈகிள் ரேடியோ ஹவுஸ் திருவண்ணாமலை ★ ஆர். கே. ரேடியோஸ், கரூர் ★ பாரமவுண்ட் எலெக்ட்ரிகல்ஸ், தூத்துக்குடி நடராஜா ரேடியோ ஹோம், சிதம்பரம் ★ ஜெமினி ரேடியோஸ், போடிநாயக்கனூர் பி. என். வைத்தியநாத், பொள்ளாச்சி ★ கிங் ரேடியோ சர்வீஸ், ராஜபாளையம் அருண எலெக்ட்ரானிக்ஸ், தென்காசி ★ ரேடியோனிக்ஸ், வுட்ஸ் ரோட், சென்னை - 2 ஜே. எம். பதி & பிரதர்ஸ், சென்னை - 17

TELERAD PVT. LTD., Bombay-10



மதுரகான மணி

சாஸ்திரீய சங்கீதத்துக்கும் சம்பிரதாயமான புலமைக்கும் பெயர் பெற்ற சென்னை சங்கீத வித்வத் சபையின் 33-வது ஆண்டு சங்கீத மகாநாடு இம்மாதம் 24-ந் தேதியன்று தொடங்குகிறது. மகாநாட்டுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பணி ஒன்றே எந்த சங்கீத ஸ்தாபனத்துக்கும் கவலையளிக்க வல்லது. அதிலும் 32 வருஷங்கள் உயர்பணி புரிந்துள்ள ஒரு ஸ்தாபனம், பல சிறந்த வித்வான்களை இதுவரையில் தேர்ந்தெடுத்த பின்னர் புது வித்வான்களைப் பொறுக்க வேண்டிய நிலைமையில், அவர்கள் எவ்வளவு நாட்கள் சிந்தித்து, ஆலோசித்து ஆண்டு தோறும் ஒரு முடிவு செய்ய வேண்டியிருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். முடிவு செய்து அறிக்கை வெளியிடும்போது ரசிகர்களுக்கெல்லாம் ஒருமுகமாகத் திருப்தி ஏற்படுகிறது. இதுதான் எல்லா ஆண்டுகளிலும் ஏற்படும் அனுபவம். தேர்வுக் குழுவினரின் திறமைக்கு இது ஒன்றே சான்று. இவ்வாண்டின் நியமனமும் இதற்கு விலக்கல்ல.

கான கலாதர மதுரை மணி அய்யர் அவர்களை மகாநாட்டுக்குத் தலைமை வகித்து இசை விழாக்களைப் பூர்த்தி செய்விக்கத் தேர்ந்தெடுத்திருப்பது மிக மிகப் பொருத்தமானது. வித்வத் சபையின் கௌரவத்துக்கும் ரசிகர்களின் கலாரசனையின் தரத்துக்கும் எவ்விதத்திலும் ஏற்றது. வித்வத்திலும் பண்பிலும் நீண்ட கால அனுபவத்திலும் மதுரை மணி அய்யர் இவ்விழாவுக்குத் தலைமை தாங்கத் தகுதியுள்ளவர். 47 வயதுதான் ஆகிறதென்றாலும் சுமார் 28 வருஷங்களாகக் கச்சேரி செய்து வருகிறார். அத்துடன் சீனியர் வித்வான்கள் வரிசையில் வருஷக்கணக்காக இடம் பெற்றுள்ளார். தம்முடைய பதின்மூன்றாவது வயதிலேயே கச்சேரி செய்ய ஆரம்பித்தவர் என்றால் அவரைச் சங்கீதத்தில் பிறவி மேதை என்றே சொல்ல வேண்டும். சங்கீத சிம்மம் என்று மங்காத புகழ் பெற்ற காலஞ்சென்ற மதுரை புஷ்பவனம் அய்யருடைய தமையனார் குமாரர் என்ற பரம்பரைப் புகழுடன், எட்டாவது வயதிலேயே மதுரை ராஜம் பாகவதரிடமும், பிறகு பத்தாவது வயதிலிருந்து காயகசிகாமணி ஹரிகேசநல்லூர் முத்தய்ய பாகவதரிடமும் சங்கீத வித்தையை

அப்பியாசம் செய்தார். மேலும் பிரபல வித்வான்களாக விளங்கிய செம்மங்குடி நாராயண ஸ்வாமி அய்யருடைய பிடிலையும், அழக நம்பியா பிள்ளையின் மிருதங்கத்தையும் பக்க வாத்தியங்களாகக் கொண்டு 1925-ம் ஆண்டிலேயே கச்சேரி செய்து புகழுடைந்தவர். 'புகழுடைந்தவர்' என்று மரியாதைக்காகச் சொல்வதற்கில்லை. அப்போதே நளினகாந்தி போன்ற அபூர்வராகங்களை அதிலாகவமாக ஆலாபனை செய்யும் சாமர்த்தியமும், ரஞ்சகமாக ஸ்வரம் பாடும் திறமும் பெற்றிருந்தார். அவர் குந்தலவராளி போன்ற ராகங்களைப் பாடும் போது, காலஞ்சென்ற புஷ்பவனத்தின் பாட்டைக் கேட்டவர்கள் அவருடைய ஞாபகம் வருவதைக் கண்டு அகமகிழ்வார்கள். காலப்போக்கில் தமது வித்வத்தின் அபிவிருத்திக்கும், சாரீர வசதிக்கும் ஒப்பத் தமக்கென்று ஒரு தனிப்பாணியை அமைத்துக் கொண்டார். ரசிகப் பெருமக்களிடையே "மணியின் விசிறிகள்" என்று ஒரு தனி கோஷ்டி இருப்பதே அவருடைய சங்கீதம் மக்களை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறதென்பதற்கு ஒருசான்று.

ஏற்கனவே 1925ம் ஆண்டில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளிடமிருந்து ஆசியும் பதக்கமும் பெற்று, 1927ம் ஆண்டில் சென்னையில் நடந்த சங்கீத மகாநாட்டில் ஒரு பதக்கமும் பெற்று, பின்னர் 1943ல் ரசிகர்களால் 'கான கலாதரர்' என்ற பட்டமும் வழங்கப் பெற்றுப் புகழுடைத்துள்ள மதுரை மணி அய்யர் தலைமையில் இவ்வாண்டு மகாநாடும் கச்சேரி வைபவங்களும் அமோகமாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.



ஆகாச வெடி

"காங்கிரஸ் அக்கிராசனர் பதவி ஏற்ற நான் கதர்க்குல்லாய் அணியவேண்டிய அவசியமில்லை."

—திரு சஞ்சீவி ரெட்டி

புது அக்கிராசனர் தலையிடாத விஷயம் குல்லாய் என்று இனி கூறி விடலாம்.

★

"தேங்கிக்கிடக்கும் கரும்புகளை விவசாயிகள் மக்களுக்கு இனமாகக் கொடுக்கிறார்கள்."

— செய்தி

கரும்பு தின்னக் கூலி கேளாமலிருப்பது அம்மக்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துகிறது.

★

"நாட்டில் ஒவ்வொரு மாகாணத்திலும், காங்கிரஸ் முன்னேற்றத்துக்கு 'ஒரு காமராஜ்' தேவை."

—திரு சஞ்சீவி ரெட்டி

ஆந்திரத்தில் தாம் இருப்பதால் அங்கு மட்டும் வேண்டாமென்று கருதுகிறாரா ?

★

"திருவனந்தபுரம் அதிகாரிக்கு வந்த ஒரு அநாமதேயத் தபாலில், செத்த பாம்பின் தலை வைக்கப்பட்டிருந்தது."

—செய்தி

"தலை வந்தது, உடலை அனுப்பு" என்று அவர் பதிலுக்கு அநாமதேயக் கடிதம் எழுதியிருக்க வேண்டும்.

★

"முன்பு இரண்டணு கூலி வாங்கியவர்கள், இப்போது ஒன்னேகால் ரூபாய் வாங்குவதால் பண்டங்கள் விலை உயர்வது தவறு அல்ல!"

—நிதி மந்திரி சுப்பிரமணியம்

"விலை உயர்வுக்கு இதுதான் காங்கிரஸின் பதிலென்றால், வரும் தேர்தலில் வோட்டு விலையும் அதிகரிக்கும்" என்று ஒரு வாக்காளர் எச்சரிக்கிறார்.

★

"என் வருகைக்காக நீண்டகாலம், கட்டி முடித்த பள்ளிக்கூடத்தைத் திறக்காமல் வைத்திருந்தது சரியல்ல."

-பள்ளி திறப்பு விழாவில் ஒரு சென்னை மந்திரி

மந்திரி வராமலிருக்கட்டும் என்று பள்ளியை மூடி வைத்திருந்தால் அதுவும் தவறாகுமா ?

★

"ஒரு முக்கியமான விவாத நாளில், பார்லிமெண்டு கூட்டத்திற்கு வராமலிருந்த 130 காங்கிரஸ் எம். பி.க்களுக்கும் அபராதம் விதிப்பதென்று கட்சி கொறடா தீர்மானித்திருக்கிறது."

— செய்தி

"அபராதத்தைச் செலுத்தவாவது அவர்கள் வரமாட்டார்களா?" என்று கொறடா நினைத்தது போலும் !

இப்பொழுது நடைபெறுகிறது




சென்னை காஸினோ, பிரபாத், சரஸ்வதி

மற்றும் தென்னடெங்கும்

மாசற்றதும் மலரின் மென்மையான தோற்றத்திற்கும்...



கவர்ன்மெண்ட் சோப் பேக்டரி, பெங்களூர்-3



பாராளுமன்றத்தில் படத்திறப்பு விழா

பொன்னான புதன்கிழமை. பொன்னு டைய்திய சேலம் பழம் பெரும் காங்கிரஸ்வாதி ஸி. விஜயராகவாச்சாரியாரின் திருவுருவப் படம் பாராளுமன்றத்தை அலங்கரித்தது. கூடவே ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடுவின் திருவுருவப்படமும், மௌலானா ஆஸாதின் படமும் திறந்து வைக்கப்பட்டன. ராஷ்டிரபதி ராஜேந்திரப்பிரஸாத் பிரசன்னமாகி, இப் புனித கைங்கரியத்தை நடத்திவைத்தார்.

தென்னாட்டின் சார்பில் திரு விஜயராகவாச்சாரியாரின் படத்தைச் சமர்ப்பிக்கும் பாக்கியம் கனம் சுப்பராயன் அவர்களுக்குக் கிட்டியது ஒருவகையில் சாலப் பொருத்தமாய் அமைந்தது. ரத்தினச் சுருக்கமாய் அமைந்த அவர் உரையில் ருசிகரமான சில குடும்ப வரலாறுகள் வெளிப்பட்டன. சுப்பராயன் அவர்களின் மாமனாரின் வக்கீலாக ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் பணியாற்றி வந்ததோடு குடும்பத்தில் ஒரு பெரியவராகப் பாவிக்கப்பட்டு வந்தார். விஜயராகவாச்சாரியாரின் மீது சதி வழக்கு நடந்தபோது, அவர் ஜேபியில், திரு சுப்பராயனின் மாமனார் எழுதிய கடிதம் ஒன்று கிடைக்கவே போலீஸார் அன்னாரையும் கிட்டத்தட்ட உள்ளே தள்ள இருந்தார்களாம்! பின்னர், ராஷ்டிரபதி பேசியது உன்னத்தைத் தொடுவதாய் அமைந்தது. அவர் முக்கியமாக வலியுறுத்திச் சொன்ன அம்சம் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் கடைப்பிடித்த தர்மநெறி. தர்மத்தினின்றும் வழுவாமல் அதர்மத்தை எதிர்த்துப் போராடியவர் என்று வலியுறுத்தினர்.

ஒரு மின்சார விசையை அழுத்த, படங்களை மூடியிருந்த திரைகள் விலகின. இறுதியில் பேசிய ராஷ்டிரபதி இதை ''வஸ்திராபரணம்'' என்று குறிப்பிட்டதாக என்ஞாபகம். இந்தச் சொற்றொடர் உடனே மஹாபாரதத்தை நினைவுறுத்துகிற தல்லவா! வேறு வழியில்லை. பாஷை இப்போது தானே உருவாகி வருகிறது. பொறுத்தார் பூமியாள்வார்!

''தெற்கு தேய்கிறது'' என்று தென்னாட்டில் ஒரு கோஷ்டி கூவி வருகிற தல்லவா? அதன் உண்மை எனக்குத் தெரிகிறது. ஆனல் இந்தப் படத்திறப்பு விழாவில் தெற்கிலிருந்து வந்த படம் தேய்ந்து வெறும் வீட்டில் மாட்ட வேண்டிய அளவுக்கு உருவாக்கப்பட் டிருந்தது. ஸரோஜினி தேவியாரும் மௌலானாவும் ஆறடிக்கு மேல் ஆஜானுபாகுவாய் வார்க்கப்பட்டிருந்தார்கள். நமது சேலம் கிழவர் அதில் கால்வாசிகூட இல்லை. படம் எழுதிய சந்தானராஜுவை யான் குறை கூறவில்லை. வைபவத்துக்குத் தகுந்தவாறு இருந்திருந்தால் நிரம்பவும் சோபிதமாயிருந்திருக்கும்.

நான் எழுதுவானேன்? படங்கள் மூன்றையும் பார்த்து நீங்களே முடிவுக்கு வாருங்கள்.

சுப சகுனம்

மதராஸி உயர்நிலைப் பள்ளியின் வருடாந்திரக் கூட்டம் காரசாரமான விவாதங்களுடன் நடைபெற்றது. தலைமை தாங்கிய டாக்டர் சுப்பராயன் அவர்கள் வெகு அழகாகச் சபாநாயகம் செய்து பார்ப்போரைப் பிரமிக்க வைத்தார். கடந்த ஒரு ஆண்டில் அவர் தலைமையில் பல நல்ல காரியங்கள் நடைபெற்றன. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் ஸ்ரீமதி எம். எஸ். ஸின் கச்சேரி நடந்து ரூபாய் 50,000 ரொக்கமாய்க் கைவசம் கிடைத்தது. சென்னை சர்க்கார் மறுபடியும் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளார்கள் என்று கேள்வி. மந்திரி பதவி ஏற்றபின் தனிநபர்கள் நடத்தும் பள்ளி ஸ்தாபனங்களுக்குத் தலைமை வகிப்பது அநுசிதமானதால் டாக்டர் சுப்பராயன் அவர்கள் தலைமைப் பதவியிலிருந்து ஓய்வு எடுத்துக்கொள்வது அவசியமாகி விட்டது. ஆனல் அன்னாரின் இல்லக்கிழத்தியார் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் அந்த ஸ்தானத்தில் ஏகமனதாகப் பிரேரேபிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இல்லிவாழ் தென்னிந்திய சமூகத்தினருக்கு இச்செய்தி மட்டற்ற மகிழ்ச்சியை அளித்திருக்கிறது. பொதுஜன சேவையில் வாணுளெல்லாம் கழித்து வந்திருக்கும் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் மதராஸி உயர்நிலைப் பள்ளியை, தம் ஊக்கத்தினுலும் ஆக்கத்தினுலும் விரைவில் கல்லூரி ஸ்தானத்துக்கு உயர்த்தி விடுவார். —சுப்புடு.


ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன்

அவள் தவமும் பலித்த தம்மா! ...

ஒளி பிறந்துவிட்டது மீண்டும் அவள் வாழ்விலே. பிழைத்தெழுந்து விட்ட தனது அன்புக் கணவரைக் காண, இன்பத் துடிப்பு அவள் நெஞ்சிலே. எத்தகைய பாக்கியம், பத்தினி யவள் தவமும் பலித்ததம்மா......

தீராத நோய்களினால் பீடிக்கப்பட்டவருக்கும் குணம் பெறும் வசதியை ஏற்படுத்தியுள்ளது வைத்திய விஞ்ஞானம். இதய நோயின் கடுமையை வெல்லும் வகையில் நோயாளிகளுக்கு உதவியளிக்கும் மருந்துத் தயாரிப்புக்கள் இன்று கிடைக்கின்றன. அத்தகைய உதவியை ஈடேறச் செய்பவர் டாக்டர் ஒருவர்தான். அவருடைய பலவருட அறிவும் அனுபவமும் மக்களுக்கு வாய்த்த நற்பலனே.

கலந்து கொள்ளுங்கள்
உங்கள் டாக்டரை.

அலெம்பிக் கெமிகல் வொர்க்ஸ் கம்பெனி
லிமிடெட், பரோடா-3.



குழந்தைக் குலம் குதூகலிக்கிறது



நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் படம் வரைந்துகொண்டிருந்தான். அதைப் பார்த்த பெரியவர் ஒருவர், "ஆட்டுக்குட்டிக்குச் சிவப்பு வர்ணம் கொடுத்திருக்கிறாயே? ஆடு சிவப்பாகவா இருக்கும்?" என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுவன் "ஆடு சிவப்பாக இருக்காது என்று எனக்குத் தெரியும். இந்த ஆட்டுக்கு மேலே தொங்குகிற மரக்கிளை எட்டவில்லை என்று கோபம் வந்திருக்கிறது. அதனால்தான் சிவப்பாக இருக்கிறது" என்று கூறினான்.

குழந்தையின் கற்பனா சக்தியும் சாதுரியமும் அவரைப் பரவசப்படுத்தின. இந்தப் பதிலைக் கேட்டு ஆனந்தப்பட்டவர் டாக்டர் அருண்டேல் அவர்கள்.

குழந்தைகளின் உள்ளம் பூவைப் போல் மென்மையானது. பெரியவர்களான நாம் பார்ப்பதுபோல் சிறு குழந்தைகள் எதையும் பார்ப்பதில்லை. எந்தப் பொருளிலும் அவர்களுக்கு ஒரு புதுமை தென்படுகிறது.

வர்ணம் தீட்டிப் பழகிக்கொண்டிருந்தார்கள் சில குழந்தைகள். உபாத்தியாயர், "நீங்கள் பார்த்த பொருள் எதையாவது வரையுங்கள்" என்று சொல்லிவிட்டார்.

ஒரு சிறுவன் ஒரு பக்கம் முழுவதும் கறுப்பு வர்ணம் தீட்டிவிட்டான்.

அதைப் பார்த்த ஆசிரியர் "என்னப்பா இது? ஒரே கறுப்பாக வர்ணம் பூசிவிட்டாயே?" என்று கேட்டார்.

"நீங்கள்தான் என்னவென்று கண்டு பிடியுங்களேன்" என்றான் சிறுவன்.

ஆசிரியருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "நீயே சொல்லு" என்றார்.

"நான் வரும்போது ரோடில் தார் போட்டுக்கொண்டிருந்தார்கள், ஸார்! நான் அதைத்தான் படமாக வரைந்திருக்கிறேன்" என்றான் சிறுவன்.

ஆசிரியரால் ஒன்றுமே பதில் சொல்ல முடியவில்லை. குழந்தையின் கற்பனா சக்தி என்னும் வற்றாத ஊற்றைக் கண்டு வியக்கத்தான் முடிந்தது.

இப்படி ஒரு அற்புதமான சக்தியுடைய குழந்தையின் மனத்தைப் பண்படுத்துவதும், குழந்தையின் எண்ணங்கள், செயல்கள் இவற்றை நல்ல முறையில் வளரச் செய்வதும் ஆசிரியர்களுடைய மாபெரும் பொறுப்பாகும்.

தற்காலத்தில் வேறு எந்த வேலைக்கும் லாயக்கில்லாதவர்கள் உபாத்தியாயராகிவிடுவது என்ற நிலை நம் நாட்டுக்கு நேர்ந்திருக்கிறது. குழந்தையின் மீது அன்பு செலுத்தி, உண்மையாகவே குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் மகிழ்ச்சியும், பெருமிதமும், மன நிறைவும் அடையும் ஆசிரியர்களைப் பார்ப்பதே அரிதாக இருக்கிறது. அதிலும் ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள அத்தனை பேரும் இப்படி இலட்சிய ஆசிரியர்களாக இருப்பதைக் காணவே முடிவதில்லை.



குழந்தைகளின், உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி உள்ளத்தின் வளர்ச்சி ஆகிய மூன்றிலும் அக்கறை செலுத்தி நாட்டுக்குச் சேவை செய்யும் ஆதர்ச புருஷர்களாகவும், இலட்சியப் பெண்களாகவும் வளர்ப்பதற்குப் பாடுபடும் ஒரு ஸ்தாபனம் எங்கேயாவது இருக்கிறதா என்று கேட்டால், "இதோ இருக்கிறது வஸந்த பாடசாலை" (Besant Theosophical High School) என்று தைரியமாகச் சொல்லலாம்.

டாக்டர் அருண்டேல் அவர்களால் 1934-ல்



குழந்தைகளின் மத்தியில் குதூகலத்துக்குக் குறைவேது? — ஸ்ரீ சங்கர மேனன்.

ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பள்ளிக்கூடம் இன்று இந்தியாவிலேயே சிறந்த பள்ளிக் கூடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. டாக்டர் பெஸண்ட் அம்மையாரின் ஞாபகார்த்தமாக அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நடத்தப் பட்டுவருகிறது. முப்பது மாணவர்கள், ஐந்து உபாத்தியாயர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு சிறு கொட்டகைகளில் நடத்தப் பட்டு வந்த இந்தப் பாடசாலை இன்று அதன் வெள்ளி விழா நடக்கும் சமயத்தில் 715 மாண வர்கள்படிக்கும் பள்ளியாக வளர்ந்திருக்கிறது.

சிறு குழந்தைகளையும், இளம் மாணவர் களையும் வகுப்புக்களில் அடைத்து வறண்ட விஷயங்களை மூளையில் புகுத்தி, அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாழாக அடித்து, பள்ளிக் கூடப் படிப்பு முடிவதற்குள்ளாக அவர்கள் எதற்கும் உபயோகமற்றவர்களாக ஆகி விடு வதைக் கண்டு மனம் வருந்தினார் பெஸண்ட் அம்மையார்.

அந்தக் காலத்துக் கல்வி முறை மாணவர்க ளைக் குமாஸ்தா வேலை தவிர எதுவும் செய்யத் தகுதியற்றவர்களாகச் செய்து வந்தது. அதை யும் மீறி முன்னுக்கு வந்தவர்களும் ஆங்கில நாகரிக மோகத்தில் ஆழ்ந்து நமது பண் பாடுகளை மறந்துவந்தனர். நமது கலாசாரமே அடியோடு மறைந்து விடுமோ என்ற ஒரு கவலைக்கிடமான நிலை ஏற்பட்டிருந்த சமயத் தில் டாக்டர் பெஸண்ட் அம்மையார் தேசியக் கல்வி முறை நாட்டுக்கு அவசியம் என்பதை வற்புறுத்தினார். ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜில் அதை நடத்தியும் காட்டினார்.

அவரோடு அப்போது ஒத்துழைத்த டாக்டர் அருண்டேல் அவர்கள் டாக்டர் பெஸண்ட் அம்மையாரின் ஞாபகார்த்தமாக இலட்சியப் பள்ளிக் கூடமாக இதை நடத்த வேண்டு மென்று விரும்பினார். தற்சமயம் பிரும்ம ஞான சங்கத்தின் தலைவராக இருக்கும் ஸ்ரீ ஸ்ரீராம், ஸ்ரீமதி ருக்மிணி தேவி, இப்பொழுது இந்தப் பள்ளி யின் டைரக்டரும், வஸந்த பாடசாலை யின் முதல் தலைமை ஆசிரியருமான ஸ்ரீ சங்கர மேனன் முதலியோர் உதவி செய்ய முன் வந்தார்கள்.

பள்ளிக்கூடம் ஆரம்பித்துச் சில வருடங்கள் வரையில் நித்ய கண்ட மாகத்தான் நடந்து வந்தது. 1937ம் ஆண்டில் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூடப் பணமில் லாமல் ஒரு நெருக்கடியான நிலை ஏற் பட்டது. டாக்டர் அருண்டேலின் மேல் பார்வையில் சேவை செய்வ தைத் தங்கள் பாக்கியமாகக் கருதி வந்த உபாத்தியாயர்கள் பள்ளிக் கூடத்தை மூடிவிடக் கூடாது என்ப தற்காகத் தங்கள் சம்பளங்களில் ஒரு பாகத்தைத் தியாகம் செய்ய முன் வந்தார்கள். எப்படியாவது பள்ளிக் கூடத்தை நடத்தியே தீர வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டார்கள்.

அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் ஸ்ரீமதி ருக்மிணிதேவி வஸந்த பாடசாலையின் பொறுப்பை ஏற்க முன் வந்தார். அதுவரை தம்முடைய ஆத்ம திருப்திக்காக நாட்டியம் பயின்று வந்தவர், முதன்முதலில் பள்ளிக் கூடத்துக்கு நிதி திரட்டுவதற்காகவே கச்சேரி செய்ய ஆரம்பித்தார். சில நாடகங்களை யும் தயார் செய்து நடத்தினார். இவைகளின் மூலம் வருவான தொகை முழுவதையும் பள்ளிக்கே அளித்து அதற்குப் புத்துயிர் அளித்தார்.

பள்ளிக்கூடம் நிதி விஷயத்தில் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் மிகச் சிறப்பாக நடை பெற்று வந்தது. வேறு எந்தப் பள்ளியிலும் கிடைக்காத சலுகைகள் இங்கு மாணவர் களுக்குக் கிடைத்தன. டாக்டர் அருண்டே லுக்குப் பள்ளி மாணவர்கள் எல்லாரும் செல்லப் பிள்ளைகளாக இருந்தார்கள். இயற்கை அன்னையின் மடியில் விளையாடி மகிழும் வாய்ப்பு வஸந்த பாடசாலை மாணவர் களுக்கெல்லாம் கிடைத்தது.

ஒரு சமயம் மாணவர்கள் பள்ளிக்கூடப் பத்திரிகை நடத்த வேண்டுமென்று ஆசைப் பட்டார்கள். அதற்கு நிதி திரட்டுவதற்காக ஒரு நாடகம் போடவும் தீர்மானித்தார்கள். உபாத்தியாயர்களைக் கலந்து ஆலோசனை செய்யாமலே டாக்டர் அருண்டேலுக்கு அழைப்பும் அனுப்பி விட்டார்கள்.

நாடகம் முடிந்ததும் அவர் பள்ளிக்கூடப் பத்திரிகைக்காக ஐம்பது ரூபாய் நன்கொடை

அளித்து, நாடகத்தைத் தாம் மிகவும் ரசித்ததாகக் கூறிப் பாராட்டிவிட்டுச் சென்றார். குழந்தைகளுடைய காரியங்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் கொடுப்பதை அவர் ஒரு கலையாகவே கையாண்டு வந்தார். அவர் காட்டிய உதாரணத்தைப் பின்பற்றி இப்பொழுதும் அங்குள்ள உபாத்தியாயர்கள், உபாத்தியாயினிகள் எல்லாரும் குழந்தைகள் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும்படி செய்து வருகிறார்கள்.

பள்ளிப் படிப்பு வேறு, கலைப் பயிற்சி வேறு, தொழில் கற்பது வேறு என்று எல்லாரும் கருதி வந்த காலத்தில் இந்த மூன்றும் ஒன்றாகவே குழந்தைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டினார் டாக்டர் அருண்டேல். உபாத்தியாயர்களிடமோ பரீக்ஷையினிடமோ குழந்தைகளுக்குப் பயம் ஏற்படக் கூடாது என்பது அவர் கொள்கை.

சிறுவர் சிறுமிகளுக்கு நிதானமும் பொறுப்புணர்ச்சியும் ஊட்டுவதற்குப் பிரத்தியேகமாக முயற்சி செய்வது பாராட்டப்பட வேண்டிய விஷயம். பிரும்மஞான சங்கத்தின் ஆண்டுப் பேரவை அடையாற்றில் நடக்கும் போதெல்லாம் வெளியூர்களிலிருந்தும், வெளி தேசங்களிலிருந்தும் வரும் அங்கத்தினர்களுக்காகச் சிற்றுண்டிசாலை ஒன்று நடத்துவார்கள். அதில் வேலை செய்யப் பள்ளி மாணவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். யார் யார் என்ன கேட்டார்கள் என்பதை நினைவு வைத்துக்கொண்டு சிறுவர் சிறுமியர் பலகாரங்களை விநியோகம் செய்வதும், பொறுப்புடன் கணக்குகளை உடனுக்குடனே எழுதுவதும், பல தேசத்து மனிதர்களுடன் கலபமாகப் பழகுவதும், இவற்றின் மூலமே அவர்கள் பாடம் கற்பதும் பார்க்க அதிசயமாக இருக்கும்.

ஒரு எட்டு வயதுச் சிறுவன் கண்ணாடி டம்ளர்களை எடுத்துக் கொண்டு வரும்போது அவன் கழுத்தில் ஒரு தேனீ கொட்டி விட்டதாம். அப்போதும் அவன் டம்ளர்களைக் கீழே போட்டு விடவில்லை. அவற்றைக் கொண்டு போய் ஜாக்கிரதையாக வைத்தபிறகுதான் கொட்டிக் கொண்டிருக்கும் தேனீயைத் தட்டி விட்டானாம். இந்தச் சம்பவத்தைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ கிருஷ்ணரத்தினம் என்னிடம் கூறிவிட்டு, ''எங்கள் பள்ளிக்கூடச் சிறுவர்கள் எல்லாரும் ரொம்பப் பொறுப்புணர்ச்சி உள்ளவர்கள்'' என்று பெருமிதத்துடன் கூறினார்.

வஸந்த பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கு மற்றொரு அரிய வாய்ப்பும் கிடைக்கிறது. கலைகளில் ஆர்வமுள்ள குழந்தைகள் காலையிலும், மாலையிலும், கலாக்ஷேத்ராவில் சங்கீத, நாட்டிய வகுப்புகளுக்குச் சென்று பயில வசதி செய்யப்பட்டிருக்கிறது.

பள்ளிக் குழந்தைகள், கலாக்ஷேத்ர மாணவ மாணவிகள், அருண்டேல் ஆசிரியப் பயிற்சி நிலையத்தில் பயிலுவோர் இவர்களுக்குப் பொதுவாக ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. ஹாஸ்டலில் வசிக்கும் அனைவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவே இருந்து வருகிறார்கள். ஒவ்வொரு பண்டிகையையும் பூஜையையும் அவர்கள் தவறாமல் மிக அழகாகக் கொண்டாடுகிறார்கள். பல தேசத்து மாணவ மாணவிகள் இவ்வாறு ஒன்றுகூடி வசிப்பதே ஒரு கல்வியாக இருக்கிறது. நம் நாட்டில் பல சாதியினர் வாழ்ந்தாலும் ஒன்றறக் கலந்து மனம்விட்டுப் பழகி வாழ்வதில்லை. வஸந்த பாடசாலையில் எல்லா வகுப்பு மக்களுடனும் எல்லா நாட்டு மக்களுடனும் மனம் விட்டுப் பழக நல்ல வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைக்கிறது. இதைவிடச் சிறந்த கல்வி வேறு எது உண்டு?

வஸந்த பாடசாலையின் டைரக்டரான திரு சங்கரமேனன் அவர்கள் ஹாஸ்டல் குழந்தைகள் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனிப்பார். நன்றாகப் படித்துக் கொண்டிருந்த குழந்தை திடீரென்று மார்க்கு குறைவாக வாங்கினால், உடனே அந்தக் குழந்தையைப் பார்த்துப் பேசுவார். எந்தக் காரணத்தினாலாவது அவனுக்கு உற்சாகக் குறைவு ஏற்பட்டிருக்கிறதா என்பதை விசாரித்துத் தெரிந்து கொள்ளுவார். அப்படி ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கு உதவி செய்து ஊக்கம் அளிப்பார்.

மழையும் காற்றும் வந்து விட்டால் அவருக்கு ஒரே கவலையாகப் போய்விடும். சில வருஷங்களுக்கு முன்னால் பெரிய புயல் காற்று அடித்த போது கொட்டகைகளில் தங்கியிருக்கும் பள்ளிக்கூட மாணவர்

அறிவை வளர்ப்பதுடன் கலையுணர்ச்சியையும் வளர்க்கும் ஸ்ரீமதி ருக்மிணி தேவி.



களைப் பற்றி அவருக்குக் கவலை வந்துவிட்டது. இரவு ஒரு மணிக்குக் கொட்டுகிற மழையில் குடையைப் பிடித்துக் கொண்டு குழந்தைகளைப் பார்க்க வந்து விட்டார். மின்சார விளக்குகள் எல்லாம் அணைந்திருந்தன. மோசமான நிலையிலிருந்த கொட்டகைகளில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகளையெல்லாம் எழுப்பிப் பத்திரமான இடத்தில் சேர்த்து விட்டுத்தான் திரும்பிச் சென்றார்.

குழந்தைகளுக்கு இன்னும் வசதியான சூழ்நிலையை அளிக்கவேண்டுமென்பதற்காகக் கலாக்ஷேத்ரா, வஸந்த பாடசாலை, அருண்டேல் ஆசிரியர் பயிற்சி நிலையம் எல்லாவற்றையும் திருவான்மியூருக்கு மாற்ற ஏற்பாடாகி வருகிறது. இவற்றுக்கெல்லாம் பொது மக்களின் ஆதரவு வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. தங்களால் இயன்ற உதவியைச் செய்து ஒரு இலட்சிய ஸ்தாபனத்துக்கு உதவிசெய்யப் பொதுமக்கள் தாராளமாக முன் வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.



பள்ளியைத் துவக்கிய பெரியார்
ஸ்ரீ அருண்டேல்

வைத்திருத்தி அமைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளித்துள்ளார்கள். அருண்டேல் ஆசிரியர் பயிற்சி நிலையம் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

இப்படிப்பட்ட சிறந்த ஸ்தாபனத்தின் வெள்ளி விழா நடந்து கொண்டிருக்கிறது. விழாவையொட்டி, கலாக்ஷேத்திராவின் கலைவிழாவும் நடக்கிறது. டிசம்பர் 25ந் தேதி தொடங்கி ஜனவரி 3ந் தேதி வரை நடைபெறும் இந்த நாடக நாட்டிய இசை விழாவின் முக்கிய அம்சம் ஸ்ரீமதி ருக்மிணி தேவியால் புதிதாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் ஜயதேவரின் கீத கோவிந்தம் கவிதை-நாட்டிய நிகழ்ச்சி. டிசம்பர் 26ந் தேதி அன்று நடைபெறும் இதன் இசை அமைப்பை பாபநாசம்சிவன் மேற்கொண்டுள்ளார். உஷா பரிணயம் என்ற பாகவத மேள நாடகத்தை டிசம்பர் 27ந் தேதி அன்று பார்க்கலாம். நாடோடி நடனங்கள், ருக்மாங்கத சரித்திரம், சீதா சுயம்வரம் ஆகிய கலையும் பண்பும் மிளிரும் அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

வஸந்த பாடசாலையை ஒரு சர்வதேச ஸ்தாபனம் என்றே கூறலாம். இலங்கையிலிருந்தும் மேற்கத்திய நாடுகளிலிருந்தும் கூடக் குழந்தைகள் இங்கு படித்திருக்கிறார்கள். தவிர, பல தேசத்துக் கல்வித்துறை நிபுணர்கள் இந்தப் பள்ளியில் பணியாற்றியிருக்கிறார்கள். ஆறு வருஷங்கள் இதன் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய அமெரிக்கரான ஜி. பிலிக்ஸ் லேடன் (Felix Layton) வஸந்த பாடசாலையின் வெள்ளி விழாவுக்காகவே சென்னை வந்திருக்கிறார்.

உலகப் பிரசித்தி பெற்ற கல்வியாளரான மேரியா மாண்டிஸோரி அம்மையாரும் அடையாற்றில் வந்து தங்கி மாண்டிஸோரி பிரி



உஷா பரிணயத்தில்
குமாரிகள் சாந்தா, கிருஷ்ணவேணி

ஸ்ரீமதி ருக்மிணி தேவியின் பிரதம சிஷ்யையான ஸ்ரீமதி சாரதாவின் பரத நாட்டிய நிகழ்ச்சி புது வருஷத்தில் ஜனவரி 2-ந் தேதிநடைபெறுகிறது.

ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், ஸ்ரீ எம். டி. ராமநாதன், ஸ்ரீ பசுபதி ஆகியோரின் சங்கீத நிகழ்ச்சிகளும் உள்ளன.

கதகளி நாட்டியத்தின் தந்தை போல் விளங்கும் சாந்து பணிக்கர் தயாரித்த கதகளி நாட்டியத்துடன் விழா முடிவடைகிறது. குதூகலமான வஸந்த பாடசாலையின் இந்தவெள்ளி விழா வைபவத்தில், குழந்தைக் குலமும் பெற்றோர்களும் கலந்து கொண்டு மகிழ்வர்.



தற்கால
ஆடை
அலங்காரத்தின்
தரங்களுக்குத்
தக்க
மாதிரி
நீங்கள் எவ்வித ஆடை அணிகிறீர்கள்? வழக்கமான சாதாரண மாதிரியா அல்லது கலர் கூடுப்புகளில் விருப்பமா? எவ்விதமானாலும் உங்கள் மனதிற்குகந்த விதத்தில் காலத்திற்கேற்ப ஸ்டான்டர்ட் மில்ஸ் பாப்லின்கள் கிடைக்கின்றன. இவை மிகவும் சரசமான விலைகளில் கிடைக்கின்றன. நீங்கள் கொடுக்கும் விலையைக் கவனிக்கையில் உங்களுக்குக் கிடைக்கும் துணியின் தரம் எவ்வளவோ மேலானதாகும்.
S T A N D A R D
ஸ்டான்டர்ட் மில்ஸ் பாப்லின்கள்
சாதாரண—சாயந்தோய்ந்த
மற்றும் கோட்டிங் • லாங்கிளாத் • லைனிங்கிளாத் •
பிரின்ட்ஸ் • சாயந்தோய்ந்த, பிரின்டட் கிரேப்
குடைகளுக்கான துணி • புக் பைன்டிங் துணி
தி ஸ்டான்டர்ட் மில்ஸ் கம்பெனி லிட்.
நியு பிரபாதேவி ரோட், பம்பாய்-28
SISTA'S-SM-20-TAM








ஹைதராபாத் விஜயம்

சுதந்திரக் கட்சியின் செயற் குழு கூட்டத்துக்காக இம்மாதம் ஹைதராபாத்துக்கு ராஜாஜி விஜயம் செய்தபோது சில நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார். 1. விமான நிலையத்தில் ராஜாஜியின் வருகையை எதிர்நோக்கி நின்ற கூட்டம். 2. மாதர் சங்கத்தில் பேசுகிறார். 3. ஆந்திர சுதந்திரக் கட்சித் தலைவர்கள், ஊழியர்கள் கூட்டத்தில் ராஜாஜி பேசினார். கூட்டத்துக்கு வந்திருந்த வெளியூர் தலைவர்களும், சுதந்திரக் கட்சி ஆந்திர எம். எல். ஏ.க்களையும் காணலாம்.











4. பிரதாப்ஸேர்ஜி கோட்டியின் வெளிப்புறத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ராஜாஜி. 5. மூப்பெரும் தலைவர்கள் — முன்ஷி — மோடி — ராஜாஜி. 6. திரு மஸானி, ஆசார்ய ரங்கா உள்பட ஆந்திர, தமிழ்நாட்டுப் பிரமுகர்கள். 7. பொதுக் கூட்ட மேடையில் ரங்கா ஒவ்வொரு தலைவருக்கும் மாலை அணிவித்துக் கௌரவிக்கிறார். 8. ஆசார்ய ரங்காவின் சொற்பொழிவு.









தெய்வம் சிரித்தது

நல்லவர்களையும் நல்லவர்களாக நடிக்கின்றவர்களையும், தீயவர்களையும் சுமக்கும் உலகத்தைப் போலத் தபால்காரர் எல்லா வகையான கடிதங்களையும் சுமந்துகொண்டு வந்தார். சர்மா மிகுந்த ஆவலுடன் அவர் வருகையைச் சப்புக் கட்டிக் கொண்டு எதிர் பார்த்திருந்தார்.

"எனக்கு ஏதாவது கடிதம் உண்டா?"

"உங்களுக்கு இல்லாமலா?"

தபால்காரர் சென்னையிலிருந்து வந்திருந்த கடிதத்தைச் சர்மாவிடம் கொடுத்து விட்டுச் சென்றார்.

பேரன்தான் எழுதியிருந்தான்:

"தாத்தாவுக்கு,

நீ என்னிக்கு வருவாய்? நீ வெள்ளிக் கிழமை வருவதாக அம்மா சொன்னாள். வெண்ணெய்க்காரன் இன்று வந்தான். அதனாலே இன்றைக்குத்தான் வெள்ளிக் கிழமை. நீ ஏன் வரவில்லே? என் மேல் கோபமா? அப்புறம் தம்பிப் பாப்பா எல்லாரையும் பார்த்துச் சிரிக்கிறான். அடுத்த வீட்டுக் கமலியைக் கண்டால் மட்டும் அவன் அழுகிறான்.

நீ வந்தால் கமலியை அடிக்கிறாயா?

ராமு"

அதைக் கண்டு கண்ணீர் துளிக்க நின்று விட்டார் சர்மா.

"யார் தாத்தா கடிதம் போட்டிருப்பது?" என்று கேட்டுக் கொண்டே சசிலா வேகமாக ஓடி வந்தாள்.

"ராமு போட்டிருக்கிறான். நீ தூத்துக்குடியிலிருந்து எப்போது வருவாய் என்று அவன் கேட்டிருக்கிறான்."

சசிலா முகத்தைச் சிணுக்கினாள். பிறகு ஏக்கத்துடன் அவர் அருகில் வந்தாள்.

"தாத்தா! நீ இதை விட்டுப் போகப் போறியா?"


குழந்தையின் குரல் நெகிழ்ந்தது.


சர்மா பதில் சொல்ல முடியாமல் திணறினார்.

"தாத்தா! நீ ஊருக்குப் போனால் நான் அழுவேன். ராமு அழுவான். நீ போன தடவை வந்து விட்டு ஊருக்குப் போனபோது அப்பா கூட முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதார் தாத்தா. நீ போகவே, போகவே கூடாது" என்றாள் சசிலா.

அவள் தாத்தாவின் தோள்களைப் பிடித்துக்கொண்டாள்.

"என் தாத்தா செல்லத் தாத்தா.."





ஜ. சாமிநாதன்

சர்மா பெரிய உத்தியோகத்திலிருந்து ரிடையர் ஆனவர். இரண்டு பிள்ளைகளைப் பெற்று விட்டுச் சர்மாவின் மனைவி போய்ச் சேர்ந்தாள். பென்ஷன் மட்டும் ஒரு பெரிய குடும்பத்தைக் காப்பாற்றும். சுற்றுப்புறத்தில் புலன்களை போட்டாமல் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கிப் பணமும் சேர்த்து வைத்திருந்தார் சர்மா. ஒருவன் தூத்துக்குடியில் வேலைக்குச் சென்று விட்டான். இன்னொருவன் சென்னையிலேயே ஊன்றி விட்டான். இரு குடும்பங்களிலும் அங்கு மூன்றுமாதங்கள், இங்கு மூன்று மாதங்கள் என்று இருப்பார் சர்மா. ஒரு பண்டிகை நாளென்றால் எல்லாருக்கும் புது உடைகள் வாங்கித் தருவார். தமக்கு மட்டும் நாலு முழத் துண்டுடன் நின்று கொள்வார்.

தூத்துக்குடியில் இருப்பவனுக்கு இரண்டு பெண்களும், இரண்டு பிள்ளைகளும். சென்னையில் இருப்பவனுக்கு இரண்டு பெண்களும் ஒரு பிள்ளையும் இருந்தனர்.

சர்மாவைக் கண்டு விட்டால் குழந்தைகளுக்கெல்லாம் அளவற்ற சந்தோஷம்.

சர்மாவுக்கு மண்டை வெடித்து விடும் போல் இருந்தது. தூத்துக்குடிக்கு வந்தால் சென்னையிலிருந்து குழந்தைகளைப் பிரிந்து வருகிறோமே என்ற ஏக்கம். தூத்துக்குடியிலிருந்து புறப்படும்போதோ 'தாத்தா சீக்கிரம் திரும்பி வா' என்று குரல் கொடுக்கும் குழந்தைகளைப் பிரிகிறோமே என்ற உயிர்த் துடிப்பு.

இப்போது தாமு வேறு 'சீக்கிரம் சென்னைக்கு வந்துவிடு' என்று போட்டிருக்கிறான்.

சர்மா தமக்குத் தாமே 'இந்த அன்புத் தொல்லைக்கு முடிவே இல்லையா?' என்று அரற்றினார்.

அன்று மாலை பிள்ளை அலுவலகத்திலிருந்து வந்தவுடன் 'நாளைக்குச் சென்னைக்குப் புறப்படப்போகிறேன்' என்று சொல்லி விட்டார்.

சென்னைக்கு வந்தவுடன் குழந்தைகளெல்லாம் "தாத்தா வந்துவிட்டார்" என்று குதித்தன. எல்லோரையும் ஆனந்தத்துடன் அணைத்துக் கொண்டார் கிழவர்.

மறு நாளே தூத்துக்குடியிலிருந்து ஒரு கடிதம் வந்தது.

"தாத்தாவுக்கு,

நீ பிள்ளையார் கோயிலுக்குப் போயிட்டுத் திரும்பி வந்து விடுவேன் என்று சொல்லி எங்களை யெல்லாம் ஏமாற்றி விட்டாய். பொய் சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டு நீயே பொய் சொல்லிட்டே. இங்கே தம்பிப் பாப்பா 'தாத்தா' என்று சொல்ல ஆரம்பித்து விட்டான். நீ ஏன் என்னை ஏமாற்றினாய்? நான் உன்னோடு 'டூ'.

இங்கே சீக்கிரம் வந்துவிடுவாயா? அப்படி வாறல் 'பழம்'. என்னோட வளையலெல்லாம் உடைந்து போச்சு. புதுசா வாங்கிக் கொண்டு வா. எனக்குக் கணக்கிலே நூறு மார்க்கு. நீ வாங்கிக் கொடுத்த சைக்கிளைக் குமார் நன்றாக ஓட்டுகிறான். நான் பாட்டு கத்துக்கப் போறேன். ஆர்மோனியம் வாங்கிக் கொண்டு வா.

உன் செல்லமான

சுசிலா"

எழுதியிருந்த கோணல் எழுத்திலே உலகத்திலே என்றும் சத்தியமாக உள்ள கள்ளமில்லா அன்பைக் கண்டு உருகிப் போய் நின்றார் சர்மா.

அன்று மத்தியானம் முழுதும் சிறிதும் அமைதியில்லாமல் இருந்தார் சர்மா. குழந்தைகளின் கடிதங்களை யெல்லாம் எடுத்துப் பிரித்துப் போட்டுக் கொண்டு வாசித்தார். தமக்கு இரண்டு உடல் இருந்தால் தூத்துக்குடியிலும், சென்னையிலுமாக இருக்கலாமே.

எல்லாக் குழந்தைகளையும் அழைத்து ஆட்டம் போட வேண்டும். அவர்களிடையே தம்மை மறந்திருக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் இங்கே இல்லையே என்ற ஏக்கமே இருக்கக் கூடாது.

பித்துப் பிடித்தாற் போல் எல்லாக் கடிதங்களையும் பெட்டியில் அடைத்தார். அந்த அறையிலேயே ரயிலடியில் அலையும் நாயைப் போல் அலைந்தார்.

"பகவானே! இந்தத் தொல்லைக்கு முடிவே இல்லையா? சீ, இந்தப் பாசம்கூட ஆளைக் கொல்லுகிறதே! இந்தப் பாசத்தை ஒழித்து விட்டால்? பாசத்தினால் ஏற்பட்ட போராட்டமும் ஒழிந்து விடுமே! பாசத்தை ஒழிப்பதா? நானா? பாசத்திலே உயிரை வைத்த நானா?"

இரண்டு மணி நேரம் கல்லாய் உட்கார்ந்து யோசித்து யோசித்து...

சாயங்காலம் பட்டு மகிழ்ச்சியுடன் ஓடி வந்து தனக்குப் பள்ளிக்கூடத்திலே கிடைத்த பரிசைக் காண்பித்தான்.

"தாத்தா, தாத்தா!.... நீ சொல்லிக் கொடுத்த மாதிரி பேசினேன். எனக்குத்தான் பேறு கிடைத்தது. எல்லாரும் என்னைக் கட்டிப் பிடித்துத் தூக்கினார்கள். 'எனக்குக் காண்பி, எனக்குக் காண்பி' என்று வந்தார்கள். நான்தான் முதலில் உனக்குக் காண்பிக்க வேண்டுமென்று ஓடி வந்து விட்டேன். ஏன் தாத்தா, பேச மாட்டேங்கறே? தாத்தா, ஏன் அழறே?"

பட்டுவைத் தம் மடியில் அமர்த்தி வைத்துக் கொண்டார் சர்மா.

"தாத்தா! வேகமாக ஓடி வந்தேனல்லவா? அப்போ கீழே விழுந்து..."

குழந்தையை எழுப்பி விட்டார் சர்மா.

"போ...... போ ... போய் அம்மாவிடம் சொல்லு...!"

ஆமாம், அவர் பாசத்தை அறுத்து விடத் துணிந்து விட்டார். பாசம்அற்ற பரப்பிரம்மமாய்த் தாமே தாமாய் அமர்ந்து விடத் தீர்மானித்து விட்டார்.

அன்று இரவு எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். என்றுமே இல்லாதபடி சர்மா யாருடனும் பேசாமலே எதையோ பறிகொடுத்தவர் போல் இருந்தார்.

திடீரென்று தம் பிள்ளையிடம், "நான் காசிக்குப் போகலாம் என்றிருக்கிறேன்" என்றார்.

"காசிக்கா?" என்றான் மகன் வியப்புடன்.

"தாத்தா சும்மா சொல்கிறார். காசிக்குப் போகிறேனென்று தூத்துக்குடிக்குப் போய் விடுவார்" என்றான் தாமு.

"தாத்தாவுக்கு என்னைக் கண்டால் பிடிக்கவில்லை" என்று கண்ணைக் கசக்கினாள் பட்டு.

சர்மா தலை நிமிராமல் சாப்பிட்டார்.

அப்பா காசிக்குப் போகப் போகிறார் என்ற கடிதம் கண்டவுடன் தூத்துக்குடியிலிருந்து குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வந்து விட்டான் இரண்டாவது பிள்ளை.

"நான் தீர்மானம் செய்தால் செய்தது தான். சந்நியாசம் வாங்கிக் கொள்ள முடிவு செய்து விட்டேன்!" என்றார் தீர்மானமாக.

பிள்ளைகள் இருவரும் மனம் இடிந்து போய் நின்று கொண்டிருந்தார்கள்.

"ஏன் இப்படி நிற்கிறீர்கள்? ஓஹோ! என் பணத்தைப் பற்றியா? பயப்படாதீர்கள்....உங்கள் இருவருக்குமே..."

"ஐயோ, அப்பா!"

இருவருமே கதறி விட்டார்கள்.

சர்மா தலையில் அறைந்து கொண்டார்.

"ஐயோ! கள்ளமறியா என் இரு செல்வங்களை இப்படிச் சொல்லும்படியும் நிலைமை ஏற்பட்டு விட்டதே" என்று குமுறினார்.

'இதோ, இன்னும் பத்து நிமிஷங்களில் புறப்பட வேண்டியதுதான்.' சர்மா வீடு முழுமையும் பார்த்தார். அறுபத்து ஐந்து வருஷங்கள் வாழ்ந்து நல்லவர்களால் மட்டுமே சம்பாதிக்கக் கூடிய மாபெரும் அன்பை அடிமரம் சாயச்சாய்த்துவிட்டுக் கிளம்பிவிட்டார்.

குழந்தைகளுக்கு, அவர் காவித் துண்டினுள் புதைந்து தங்களை மறந்துவிடப் போகிறார் என்று தெரியுமா? ஏதோ இங்கேயிருக்கும் செங்கல்பட்டுக்கு அடுத்த ஸ்டேஷன் காசி என்று நம்பினார்கள். மருமகள் இருவரிடம் விடைபெற்றுக் கொண்டார் சர்மா.

சிறிய டாக்ஸியில் ஏறிக் கொண்டார். பிள்ளைகள் இருவரும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். திடீரென்று "எல்லோரையும் அழைத்து வாருங்கள்" என்றார் சர்மா.

அங்கேயிருந்து இங்கேயும், இங்கே யிருந்து அங்கேயும் இன்பத்தையும் துன்பத்தையும் சுமந்து செல்லக் காத்திருக்கும் ரயில்கள்.

சர்மா எல்லாக் குழந்தைகளையும் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டே நடந்தார். மருமகளின் இடையில் இந்த உலகத்திலே ஆயிரமாயிரம் கவலைகள் இருந்தாலும் அவற்றிலே தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத குழந்தை விரலைச் சப்பிக் கொண்டு நெற்றியில் செந்திலகத்துடன் சிரித்துக் கொண்டிருந்தது. தைத்தபடியும், தாத்தாவும் காவி உடுத்தப் போவதை அறியாத குழந்தை.

'ரிஸர்வ்' செய்து வைக்கப் பெற்ற பெட்டியிலே காவித் துண்டை வயிற்றில் வைத்திருந்த படுக்கையும், டிரங்குப் பெட்டியும் ஏற்றப் பட்டன. எல்லோரும் பெட்டிக்குள் ஏறிக் கொண்டனர்.

"தாத்தா! எனக்குக்கூட உன்னோடு வர ஆசையாயிருக்கிறது......" என்றான் தாமு.

"ஆமாம், தாத்தா! எனக்கும்தான்."

கிழவர் குழந்தைகளைப் பார்த்தார்.

"ரயில்லே போனால் சாப்பிடவே வேண்டாம். ஆரஞ்சு, பிஸ்கோத்து, ரொட்டியெல்லாம் தாத்தா வாங்கித் தருவார். அம்மாவாயிருந்தால் சோற்றை வாயில் அடைப்பாள்." ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டான் தாமு.

"எங்களையெல்லாம் மறுபடியும் நாளைக்கு வந்து அழைத்துக் கொண்டு போகிறாயா?"

சர்மா உள்ளுக்குள்ளேயே குமுறினார். குழந்தைகளின் அன்பு அவரை வதைத்துக் கொண்டிருந்தது. அந்த அன்பைக் கொலை செய்து விட்டு ஓடுவது போல் உள்ளம் ஓலமிட்டது.

முதல் மணி அடித்து விட்டது.

சர்மாவுக்கு அதைக் கேட்டவுடன் உடல் குலுங்கியது. அவரால் உள்ளத்தில் பாயும் அன்பு வெள்ளத்தைத் தாங்க முடியவில்லை.

தூய்மையின் உருவமாய் நிற்கும் குழந்தைகளை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டார்.

"கசி...பட்டு...கீழே இறங்குங்களம்மா... ரயில் புறப்படப் போகிறது."

தம்மைத் தனியாக ஓர் உலகத்தில் விட்டு விட்டு எல்லோரும் செல்லுவதுபோல் இருந்தது சர்மாவுக்கு.

"தாத்தா...! எனக்கு என்ன வாங்கிக் கொண்டு வருவாய்?" என்று சின்னவள் உமா கேட்டாள்.

"காவித்துண்டு..." என்று பைத்தியம் பிடித்தவர் போலக் கூவினார் சர்மா.

"தாத்தா...எங்கள் எல்லோருக்கும் காவித் துண்டே வாங்கிக் கொண்டு வா!" என்று எல்லோரும் கூவினார்கள். சர்மா இதைக் கேட்டுத் திகைத்துப் போனார்.

"என்ன சொன்னீர்கள், கண்களே?"

"எங்களுக்கும் காவித் துண்டே வாங்கி வா......நாங்களும் கட்டிக்கறோம்!"

"இல்லை......நான் தனித்து விடப்படவில்லை. குழந்தைகள் நான் காவித் துண்டு கட்டிக் கொண்டு சென்றாலும் வரக் காத்திருக்கின்றன. நான்தான் உதறித் தள்ளிச் செல்கிறேன். முடியாது, என்னால் முடியாது. நான் எங்கு சென்றாலும் குழந்தைகளின் அன்புச் சக்தியால் அவர்கள் வந்துவிடுவார்கள்..." என்று கதறினார்.

பச்சை விளக்கைக் கண்டு பயத்துடன் ரயில் அலறியது. சர்மா தம் பெட்டியை இழுத்து ஜன்னல் வழியே கீழே போட்டார். படுக்கையை விசிறிப் போட்டார், தட தட வென்று பெட்டியிலிருந்து இறங்கினார்.

ரயில் பெருமூச்சு விட்டுச் சென்றது.

குழந்தைகள் ஆச்சரியத்துடன் நின்றனர். பிள்ளைகள் ஆனந்தக் கண்ணீருடன் நின்றனர்.

"என்னப்பா......" என்று தூத்துக்குடியிலிருக்கும் பிள்ளையைக் கேட்டான் ஒருவன்.

"ஓ நீயா...? எப்போ சென்னைக்கு வந்தே?"

"நேற்றுத்தான். உனக்கு விஷயம் தெரியாதா? உன்னைத் தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு மாற்றியிருக்கிறார்கள்."


கிழவர் கண்களை மூடி எல்லாவற்றையும் சாதிக்க வல்ல அன்பை நினைத்து உருகினார்.

குழந்தைகளை அணைத்துக் கொண்டு பாசமாகிய உலகத்துக்குள் நடந்தார் கிழவர்.

செந்திலகம் இட்டுக்கொண்டு மருமகள் இடையிலே மலர்க் கொத்தாக இருந்த குழந்தை, படுக்கையிலிருந்து நழுவி விழுந்த காவித் துண்டைக் கிழவரும் குழந்தைகளும் மிதித்துக் கொண்டு செல்வதைக் கண்டு வாயைத் திறந்து சிரித்தது. குழந்தையா சிரித்தது? தெய்வமல்லவா சிரித்தது!

மறுபடியும் ஆச்சரியப்படும்படியான

ஆரோக்கியத்துடன் இருங்கள்



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

ஆரோக்கியத்தை அளிக்கும் சிறந்த டானிக் என்று நிருபணம் செய்யப்பட்டது. அதை ஆரோக்கியத்துடன் இருக்க விரும்புவோர்களும் அவர்களது குழந்தைகளும் உலகமெங்கும் தினசரி உபயோகப்படுத்துகிறார்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டில்

போஷாக்கை ஊட்டும் கலவைகள் இருக்கின்றன. அவைகள், நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் வீர்யத்துடனும், ஆரோக்கியத்துடனும், சந்தோஷத்துடனும் இருப்பதற்குத் தேவையான அதிகப்படி சக்தியை அளிக்கின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இடைவிடாதிருந்து வரும் இருமலையும், ஜலதோஷத்தையும், தொண்டைப்புண்ணையும் போக்குகிறது. நோயுற்று குணமடைந்த பின் உடம்பு சீக்கிரமாகத் தேறுவதற்கு டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுகிறது.



புதிய சிகப்பு லேபிளுடனும் 'பில்பர்-ப்ரூப்' மூடியுடனும் இப்பொழுது விற்கப்படுகிறது

சிகப்பு மேல் உறை தற்பொழுது இல்லை

நீங்களும் ஆரோக்கியத்துடன் இருக்க நாவிற்கினிய

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சாப்பிடுங்கள்



உமேஷ் யோக தர்ஷன்

(முதல் பாகம்)

நான்கு மொழிகளில்: ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராத்தி

ஆசிரியர்: ஸ்ரீ யோகிராஜ் உமேஷ் சந்தர்ஜி

உங்களுடைய ஜீரணம், சுவாசம், மற்றும் உடல் இயக்கங்களை கட்டுப் படுத்துவதை விளக்கும் யோகத்தின் உண்மையான பொருள்பற்றிய அருமையான ஆராய்ச்சி நூல். 108 உண்மையான ஆசன புகைப் படங்கள் கொண்டது இப்புத்தகம். யோகம், இயற்கை வைத்தியம், குரோமோபதி முதலியவற்றின் மூலமாக உங்களது பலவிதமான! கோளாறுகளுக்கு பரிகாரம் காணும் விதத்தை விளக்கும் நூல். ஒவ்வோர் வீட்டிலும், ஆஸ்பத்திரியிலும், புத்தகசாலையிலும் அவசியம் இடம்பெறத் தக்கது.

விலை ரூ. 15/- தபால் செலவு ரூ. 2/- தனி., வி. பி. பி. கிடையாது

யோகாசனப் படம்

கண்கவரும் படங்களுடன் பளபளப்பான ஆர்ட் பேப்பரில் அச்சடிக்கப்பட்டுள்ளது. இதில் காணப்படும் ஆசனங்களை வீட்டிலேயே நீங்கள் செய்து ஆரோக்கியமாகவும் திடமாகவும் இருக்கலாம். **விலை ரூ. 3/-** (தபால் செலவு உள்பட) மணியார்டர் மூலம் அனுப்பிப் பெறலாம்.

யோகாசன வகுப்புகள்

தினசரி காலையிலும் மாலையிலும் ஸ்ரீராம் தீர்த் யோகாஸ்ரமத்தில் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பெண்களுக்குத் தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பெண்களுக்கென ஆசிரியைகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ராம்தீர்த்  பிராமி ஆயில்

ஸ்பெஷல் நெ. 1 ரிஜிஸ்டர்டு

மயிர் உதிர்தல், சொட்டை விழாமல் தடுக்க ஓர் சிறந்த கூந்தல் தைலம். அனேக சிறந்த மூலிகைகளினால், ரசாயன முறைப்படி ராம்தீர்த் பிராமி ஆயில் தயாரிக்கப்படுகிறது. மூளைக்குக் குளிர்ச்சியளித்து, உடலுக்கு ஆரோக்கியத்தை அளித்து ஆழ்ந்த நித்திரையையும் கொடுக்கிறது. உடம்புக்குத் தேய்த்துக் குளிப்பதற்கு மிகவும் சிறந்தது. எல்லோருக்கும் எக்காலத்திற்கும் உகந்தது.

விலை: பெரிய பாட்டில் ரூ. 4/- சிறிய பாட்டில் ரூ. 2/-

○❀○

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரம்

தாதர் – சென்ட்ரல் ரயில்வே – பம்பாய்-14 – போன்: 62899

ராம்தீர்த் பிராமி டெப்போ: 257, தங்கசாலைத் தெரு, சென்னை-1



வேங்கையின் மைந்தன்


பதினான்காம் அத்தியாயம்

இரகசியத் தொடர்பு

தஞ்சை அரண்மனைக்குள் மகிந்தரது மாளிகைத் தோட்டத்தின் சிறிய செய்குளம் மேல்வானத்தின் நிறத்தைப் பிரதிபலித்துக் கொண்டு, மெருகேறிய செப்புத் தகடுபோல் சலனமற்றுக் காட்சியளித்தது.

அதன் விளிம்பில் நின்ற வீரமல்லன் தன் முகத்தைத் தண்ணீரில் எட்டிப் பார்த்தபடி, அறைபட்டு வீங்கிய கன்னங்களை ஆத்திரத்தோடு தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான். கன்றிக் கறுத்திருந்த முகத்தில் பதிந்திருந்த விழிகளிரண்டும் கலங்கிச் சிவப்பேறி யிருந்தன.

அவனுடைய முகத்தின் தோற்றம் அவனுக்கே அருவருப்பைத் தந்தது. விகாரமும் குரூரமும் கொண்ட மற்றொரு மனிதன், அவனைத் தண்ணீருக்குள் தலைகீழாக நின்று கொண்டு பரிகாசம் செய்தான். 'வீரமல்லா! உன் விரமெல்லாம் அப்போது எங்கே போய் விட்டது? ஏன் நீ உன் கைகளைக் கட்டிக் கொண்டு பேசாதிருந்தாய்? இளங்கோவுக்குத்



அகிலன்

திருப்பிக் கொடுத்திருக்க வேண்டாமாடா!'

தன் வெறுப்பை யெல்லாம் ஒன்றாகத் திரட்டிச் சேர்த்து அந்தத் தண்ணீரில் காரி உமிழ்ந்தான் வீரமல்லன். காலால் அதை எட்டி உதைத்தான். சேறாய்க் கலக்கிக் குழப்பினான்.



"இளங்கோ! இனி நீதான் என் முதற் பகைவன்!" என்ற சொற்கள் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டன.

உடனே, "நண்பா!" என்ற குரல் அவனுக்குப் பின்னாலிருந்து ஒலித்தது. அதைத் தொடர்ந்து கரமொன்று அவன் இடதுதோளின்மீது விழுந்தது.

வீரமல்லன் திடுக்கிட்டான். ஆனால் திரும்பிப் பார்க்கவில்லை. 'செய்ததையும் செய்து விட்டு இளங்கோ மன்னிப்புக் கேட்க வந்து விட்டான் போலும்!' என்ற எண்ணம் அவனுக்கு. வீரமல்லனின் கரம் துடித்தது. 'அறைக்கு அறை! பழிக்குப் பழி!'—ஆத்திரத்துடன் திரும்பினான்.

அங்கே மகிந்தர் நின்று கொண்டிருந்தார். அவருடைய இடுங்கிய கண்கள் சிரித்தன. அவரிடம் தன் முகத்தைக் காட்ட விரும்பாத வீரமல்லன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

தோளில் போட்ட கரத்தை எடுக்காமலே, "நண்பா! என்ன இது?" என்று வியப்போடு கேட்டார். மாடத்திலிருந்து பார்த்த காட்சியை அவனிடம் அவர் காட்டிக் கொள்ளவில்லை.

"மன்னர் அவர்களே! நண்பனென்று என்னை அழைக்காதீர்கள். அந்தப் பாக்கியம் எனக்கு வேண்டாம். நான் தங்களது பணியாளன்" என்று கூறி, அவரது பிடியிலிருந்து விலக முயன்றான் வீரமல்லன். அவர் அவனை விடவில்லை.

"நாடிழந்த அரசன் உன்னை நண்பனென்று அழைப்பது பிடிக்கவில்லை போலும்!" என்று வருத்தத்துடன் கூறுவது போல் கூறிச் சிரித்த மகிந்தர், "ஆமாம்! பெரிய வீரனின் நண்பன்; கொடும்பாளூர் இளவரசனின் உயிர்த் தோழன்; நான் உன்னை அப்படி அழைக்கலாமா?" என்றார்.

"அவனைப் பற்றி இனி என்னிடம் ஒருபோதும் பேசாதீர்கள், அரசே!"

"ஏன்? என்ன விஷயம்?" என்று கேட்டு, அவனை அணைத்தபடியே தமது மாளிகை மாடத்துக்கு அழைத்து வந்தார் மகிந்தர். வரும் வழியில் நடந்துகொண்டே, "ஏதோ தோட்டத்தில் சத்தம் கேட்டது; இறங்கி வந்து ரோகிணியிடம் கேட்டேன்; அவள் ஒன்றும் கூறவில்லை" என்றார்.

மேல்மாடத்துக்கு அவர்கள் ஒன்றாகச் செல்வதைத் தன் அறையிலிருந்தவாறு கவனித்தாள் ரோகிணி. தோளோடு தோள் அவர்கள் நெருங்கி நடந்தது அவளுக்கு அருவருப்பைத் தந்தது. அவர்கள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் கந்துலன் மாடத்திலிருந்து இறங்கி வந்து பழத் தட்டையும் பாலையும் எடுத்துக் கொண்டு மேலே சென்றான். பிறகு திரும்பி வந்தான்.

மேலே அவர்கள் தனித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். கந்துலனைத் தன் தந்தையார் அங்கிருந்து அனுப்பியதிலிருந்து, ஏதோ அவர்கள் இரகசியம் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டாள் ரோகிணி. வெகு நேரம் சென்ற பிறகும் வீரமல்லன் திரும்பி வரவில்லை.

ரோகிணி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். பிறகு தன் அறையிலிருந்து கிளம்பி மாடத்தின் படிகளில் ஏறத் தொடங்கினாள்.

கந்துலன் வேகமாக ஓடி வந்து, "இளவரசி! மன்னர் தனிமையை விரும்பினார்கள்" என்று சொல்லி அவளைத் தடுத்துப் பார்த்தான்.

"எனக்குத் தெரியும்" என்று மறு மொழி கூறி விட்டு, அடிமேல் அடி வைத்துச் சென்றாள் ரோகிணி. கூடத்தின் வாயிலோரமாக அவள் ஒதுங்கி நின்றபோது, அவர்கள் பேசிக் கொண்டது முழுமையும் அவள் செவிகளுக்கு எட்டவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொற்கள் ஒலித்தன.

சுந்தரபாண்டியர், அமைச்சர் கீர்த்தி, பெரும்பிடுகு முத்தரையர் இவர்களின் பெயர்கள் திரும்பத் திரும்ப வீரமல்லனால் உச்சரிக்கப்பட்டன.

ஒரு சமயம் தன்னை மறந்து உரக்கப் பேசினான் அவன்; ரோகிணி தன் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு உற்றுக் கேட்டாள்.

"பெரிய சாம்ராஜ்யமாம் சாம்ராஜ்யம்! காஞ்சியில் இருக்கிறாரே அரையன் ராஜராஜன், அவர் என் குலத்தைச் சேர்ந்தவர். ஈராயிரம் பல்லவரையரும் எனக்கு ஒரு வகையில் உறவினர்தாம். இவர்கள் எல்லாம் இல்லாவிட்டால் இந்தச் சாம்ராஜ்யம் அதோகதியாய்ப் போயிருக்கும். இப்போதுதான் என்ன சீரும் சிறப்புமாய் வாழ்கிறது! நீங்கள் வெளிநாட்டவர்கள்; உங்களுக்கு ஒன்றும் தெரியாது. நான் உள்ளே இருப்பவன்; எனக்கு எல்லாம் தெரியும். மேலைச் சளுக்கரும் பாண்டியரும் ஒன்றாய்ச் சேர்ந்தால் அப்போது தெரியும், இவர்கள் லட்சணம்!"

மேலும் அங்கு நிற்கப் பொறுக்காமல், "அப்பா!" என்று அழைத்துக் கொண்டே அறைக்குள் நுழைந்து சென்றாள் ரோகிணி.

இருவரும் திடுக்கிட்டார்கள். ரோகிணியிடம் தன் அடிபட்ட முகத்தைக் காட்ட விரும்பாத வீரமல்லன், "நான் வருகிறேன், அரசே!" என்று கூறிவிட்டு, அவசரம் அவசரமாக மகிந்தரிடம் விடைபெற்று வெளியில் வந்தான். ரோகிணியைத் திரும்பிக்கூடப் பாராமல் படிகளில் இறங்கினான்.

"பணியாளனுடன் ஒன்றாக அமர்ந்து கொண்டு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது, அப்பா?" என்றாள் ரோகிணி. "இது மற்றவர்களுக்குத் தெரிந்தால் நம்முடைய பெருமை இங்கு நிலைத்திருக்காது."--அவளுடைய குரலில் கசப்பும் கடுமையும் கலந்திருந்தன.

"வீரமல்லனும் பெருமை கொண்ட பரம்பரையில் வந்தவன்தான்; இங்கு வந்து இப்படி உட்கார்" என்று அவளைச் சமாதானப்படுத்த முயன்றார் மகிந்தர். "இந்தத் தஞ்சைமா நகரம் முதலில் யாருக்குச் சொந்தமாக இருந்ததோ, அந்த முத்தரையர்களின் வழி வந்தவன் அவன். அரை நாழிகைப் பொழுதுக்



ருன் எவ்வளவோ உண்மைகளை அவன் தனக்குத் தெரியாமலே என்னிடம் கொட்டி விட்டான். சோழர்களுடைய ராஜ தந்திர வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு நாம் தடுமாறும் வேளையில் இவன் நமக்கொரு தெப்பம்போல் கிடைத்திருக்கிறான், ரோகிணி!''

''இதெல்லாம் எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை; தெப்பம் என்று நீங்கள் நினைக்கிற பொருள், நம்மை வெள்ளத்தில் ஆழ்த்திவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி விட்டு, சரேலென்று திரும்பினாள் ரோகிணி.

''பாவம்! நீ சின்னஞ்சிறு குழந்தை! உனக்கு என்ன தெரியும்?'' என்று தமது தாடியை மெல்லத் தடவி விட்டுக் கொண்டார் மகிந்தர்.

அன்றிலிருந்து மற்றவர்கள் முன்னிலையில் மாளிகையின் மேற்பார்வையாளனாகவும், தனிமையில் மகிந்தரின் உற்ற துணைவனாகவும் உலவினான் வீரமல்லன். சக்கரவர்த்திகளின் குடும்பம் இளங்கோவுடன் பழையாறைக்குப் புறப்பட்ட அன்று வீரமல்லனும் மகிந்தரும் ஒரு பிற்பகல் முழுவதும் தனித்திருந்தனர்.

முன்போல் அவன் ரோகிணியிடம் நெருங்கவில்லையாதலால் அவள் !பேசா திருந்து விட்டாள். மகிந்தரின் போக்கு அவளுக்கு அச்சத்தைத் தந்தது. ஆனால் அவளால் அவரைத் தடுக்க முடியவில்லை. தன்னுடைய விருப்பத்துக்கு மாறாக, அவர்களது சந்திப்பை மறைத்து வைக்க வேண்டிய அவசியமும் அவளுக்கு ஏற்பட்டு விட்டது.

''சுந்துலா! தந்தையாரும் அவனும் இப்படி நெருங்கி உறவாடுவது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், நீ மிகவும் கவனமாக நடந்து கொள். அரண்மனையைச் சேர்ந்த யாரிடமும் அவர்களைப் பற்றிச் சொல்லி விடாதே. அது நம் எல்லோருக்குமே ஆபத்தாக வந்து முடியும்'' என்று எச்சரிக்கை செய்தாள்.

தஞ்சையிலும் வெற்றி விழாக் கொண்டாட்டம் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட வீரமல்லன் இளவரசர் இராஜாதிராஜனின் கவனத்தைக் கவரும் முறையில் நடந்து கொண்டான். இளவரசரை அணுகி நிற்கும் வாய்ப்புக் கிடைத்தபோது தன் தமையன் இராஜமல்ல முத்தரையனின் தியாகத்தைக் குறிப்பிட்டுத் தன்னை அறிமுகம் செய்து கொள்ள அவன் தவறவில்லை. இளங்கோவின் நண்பனென்றும், சக்கரவர்த்திகளின் கருணைக்குள்ளாகி ஆயிரவர் படைத்தலைவனாய் உயர்ந்தவனென்றும் அவன் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டான்.

இந்த அறிமுகம் வீண் போகவில்லை.

பாண்டிய நாட்டிலிருந்து பதற்றத்துக்குரிய செய்தி வந்தவுடன் வீரமல்லனுக்கும் அழைப்பு வந்தது. அவனுடைய இடத்துக்கு வேறொருவனை நியமித்து விட்டு, அவனைப் படைத் தலைமையை ஏற்றுக் கொள்ளச் செய்தார். தஞ்சைப் படை வீட்டிலிருந்த படைப் பகுதி ஒன்றுக்கு அவன் தலைவன்.

செய்தி கிடைத்தவுடன் மகிந்தரை வந்து பார்த்தான் வீரமல்லன். வழக்கம் போல் அந்தரங்க உரையாடல் நடைபெற்றது. அவனை வழியனுப்புவதற்காக மகிந்தரே மேல்மாடத்திலிருந்து கீழே இறங்கி வந்தார். கூடத்தில் நின்று கொண்டிருந்த ரோகிணிக்கும் செய்தியைக் கூறினார்.

''நண்பா! வெற்றியோடு திரும்பிவா! கட்டாயம் நீ வெற்றி பெறுவாய்!''

ரோகிணிக்கு இதில் ஏதும் விளங்கவில்லை. பாண்டியர்களோ மகிந்தரைச் சார்ந்தவர்கள். அதிலும் சுந்தர பாண்டியர் அவருக்கு அமைச்சரின் வழி உறவினர். அப்படிப்பட்டவர்களை எதிர்க்கச் செல்பவனை அவர் வாழ்த்துக் கூறி அனுப்புகிறாரே!

வீரமல்லன் ரோகிணியிடம் வந்து வணங்கி நின்றான்.

''இளவரசியாரே! போர்க்களத்துக்குச் செல்பவனுக்குத் தங்கள் அன்பும் ஆசியும் வேண்டும். மன்னர் அவர்களது அன்பைப் பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதைப் போலவே, தங்களது கருணையும் கிடைத்து விட்டால் வெற்றியோடு திரும்புவேன்.''

ஏளனமாகச் சிரித்தாள் ரோகிணி. ''யாருடைய வெற்றிக்காக நீ எவரோடு போரிடப் போகிறாய் என்பது உனக்கு நினைவிருக்கிறதா? நினைவிருந்தால் தந்தையாரிடமும் என்னிடமும் நீ வந்திருக்கவே மாட்டாய். உன்னுடைய வெற்றி எங்களைச் சார்ந்தவர்களின் தோல்வி. வீரமல்லா! நீ போய் உனக்கு உப்பிட்டு வளர்ப்பவர்களிடம் ஆசி பெற்றுக் கொள்.''

வீரமல்லனும் மகிந்தரும் ஓரக் கண்களால் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''இளங்கோவின் பரிச்சயத்தால் இளவரசியார் எங்கள் மீதுள்ள பகைமையை மறந்திருப்பார்கள் என்று நினைத்தேன். சோழ சாம்ராஜ்யத்தின் மீது இன்னும் அவர்களுக்கு வெறுப்பு இருக்கிறது — இருக்கட்டும்; நான் வருகிறேன்'' என்று சொல்லி, அவளைக் கூர்ந்து நோக்கி விட்டு வெளியேறினான் வீரமல்லன்.

'வெறுப்பு உன்னிடந்தான்' என்று சொல்வது போல் ரோகிணி தன் முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

"ரோகிணி!" என்று மகிந்தர் அவளை அன்போடு அழைத்து, "இவனிடம் நீ இவ்வளவு கடுமையாக நடந்து கொண்டிருக்கக் கூடாது; நம்மைப் போலவே இவனும் இந்த நாட்டாரிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறவன்; நம்மிடம் தனிப்பட்ட அநுதாபம் கொண்டிருக்கிறான்" என்றார்.

"தங்களுடைய அநுதாபத்தையும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை, அப்பா!" என்றாள் ரோகிணி.

பதினோந்தாம் அத்தியாயம்

தெய்வத் திருப்பணியாள்

தாய்ப் பாலைச் சுவைத்துப் பழகிய குழந்தையைத் தாயிடமிருந்து பிரிப்பது போல் தன்னைப் போர்க்களத்திலிருந்து மாமன்னர் பிரித்து விட்டதாக நினைத்தான் இளங்கோ. அவன் மனம் ஆத்திரப்பட்டது; வேதனையுற்றது; பலமாகக் கதறி அழுதது.

போர்க்களத்தின் அனுபவங்கள் ஏற்படாத போது, ஈழத்துக்குச் செல்வதற்கு முன்பு அவன் இவ்வளவு தூரம் அதற்காக ஏங்கியதுமில்லை; துடித்ததுமில்லை. இப்போது அவன் பகைவரது இரத்தச் சுவை கண்டு விட்ட கொடும் புலியாக விளங்கினான்.

கூண்டில் அடைப்பதுபோல் மாமன்னர் அவனைப் பழையாறைச் சோழ மாளிகைக்குள் அடைத்து விட்டுப் போய்விட்டார். வாள் சுழற்றி வீர சாகசங்கள் புரிய வேண்டிய தருணத்தில்; உட்பகையின் ஆணி வேர்களைக் களைந்தெறிவதற்காக இரத்த வெள்ளத்தில் நீந்தி மதக் களிறுகளை மடக்க வேண்டிய சமயத்தில் சக்கரவர்த்தி அவனுக்குச் சிறைத் தண்டனை விதித்து விட்டார்.

'ஆம்; இந்த மாளிகை வாசம் வெஞ்சிறையை விடக் கொடுமையானது' என்று எண்ணிப் புழுங்கினான் இளங்கோ. அவனைச் சுற்றிலும் ஒரே பெண்கள் கூட்டம். மகாராணி வீரமாதேவியார், பெரிய குந்தவையார், அருள்மொழி, அம்மங்கை, அவர்களது பணிப்பெண்கள் இப்படி எங்கு திரும்பினாலும் ஒரே பெண்கள் மயம்!

அலை மோதும் ஆண்களின் கூட்டத்தில் புயலெனப் புகுந்து தலையறுத்து விளையாட வேண்டிய வேளையில் இப்படி ஒரு சோம்பல் வாழ்வா? சே! இந்தப் பெண்களையாவது ஓரளவு பொறுத்துக் கொள்ளலாம். சிறைக் காவலரினும் கொடிய இந்தச் சித்த வைத்தியப் பெரியவரை எப்படிப் பொறுப்பது! போருக்குத் தகுதியற்றவன் என்று தன்னைச் சுட்டிக் காட்டுவதற்காகவே அவரும் உடன் வந்திருக்கிறாரா?

சக்கரவர்த்தியும் வல்லவரையரும் பழையாறையை விட்டுச் சென்றபின்பு அருள்மொழி அருகில் வந்து நின்று கொண்டிருந்த போது, அவளிடம் முகம் கொடுத்துப் பேசுவதற்கே நாணமுற்றான் இளங்கோ. மேற்கண்டவாறு எண்ணக் குவியல்கள் கிளர்ந்தெழுந்து அவனை அலைக்கழித்தன.

அருள்மொழி அங்கு நின்றதுகூட அவனுக்குப் பிடிக்கவில்லை. தலையைக் கவிழ்த்துக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். கூண்டுக் கம்பிகளைப் பிய்த்தெறிந்து விட்டுப் பாய்ந்தோட விரும்பும் வேங்கையின் வெறி அவன் உடலெங்கும் பரவியிருந்தது.

மெல்ல நகைத்தாள் அருள்மொழி. சிரிப்பொலி அவன் செவிகளில் விழ வேண்டுமென்று நினைத்தவள் போல் இலேசாகச் சிரித்தாள்.

சட்டென்று திரும்பினான் இளங்கோ. சிரிப்பொலி வேறு யாருடையதாகவும் இருந்திருந்தால் அங்கு என்ன நடந்திருக்குமோ, தெரியாது. அருள்மொழியின் முகத்திலும் ஏளனமில்லை.

"நங்கையாரே! என் நிலைமை தங்களுக்கு நகைப்பைத் தருகிறது. நான் நகைப்புக்கிடமாகி விட்டேன்" என்று கலங்கும் குரலில் கூறினான் இளங்கோ.

"போர்க்களத்தில் பொங்கி எழவேண்டிய சினம் இப்போது என் மீது திரும்பியிருக்கிறது. இதுவும் என் பாக்கியந்தான்" என்றாள் அருள்மொழி. பிறகு கனிந்த குரலில், "இளவரசே! தங்களைப் போன்ற சுத்தவீரரின் துடிப்பைக் கண்டு நான் பெருமையுறுகிறேன்; என்னுடைய பெருமையுணர்ச்சியை என்னால் மறைக்க முடியவில்லை; சிரித்து விட்டேன், மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள், இளவரசி?"

"உங்கள் வீர உணர்ச்சியைக் கண்டு கர்வம் கொள்ளுகிறேன். அது எப்படியெல்லாம் உங்களை ஆட்டி வைக்கிறது

என்பதைக் கண்டு வியந்து கொண்டிருக்கிறேன். ஈழத்துப் போர்க்களத்துக்கு நேரில் வந்து உங்கள் ஆற்றலைப் பார்க்க முடியாவிட்டாலும் அது எப்படி இருந்திருக்கும் என்று என்னால் இப்போது நினைக்க முடிகிறது.''

சித்த வைத்தியர் வைத்துக் கட்டிய மருந்து இளங்கோவுக்கு எரிச்சலைத் தந்து கொண்டிருந்தது. ஆனால் அருள்மொழியின் இன்மொழிகளோ அந்த எரிச்சலையும் தணித்து, அவன் மனக் கொதிப்பையும் ஆற வைத்தன.

மனத்துக்கு மருந்தானாள் மாமன்னரின் மகள். அகமும் முகமும் மலர ஆனந்தப் புன்னகை செய்து விட்டு, ''இளவரசி! துரோகிகளின் தலைவரான சுந்தர பாண்டியரின் தலையைக் கொய்து வந்து சக்கரவர்த்திகளின் திருவடிகளுக்குக் காணிக்கையாக்க வேண்டும் என்பது என் ஆவல்; அதை நிறைவேற்ற முடியவில்லையே என்றுதான் வருந்துகிறேன்'' என்றான் இளங்கோ.

''எல்லாப் போர்க்களங்களுக்கும் நீங்களே சென்று, எல்லாப் பெருமைகளையும் நீங்களே பெற்றுக் கொள்ளலாம் என்று பார்க்கிறீர்கள். ஏன், என் தமையனார் ராஜாதி ராஜருக்கு அதில் சிறிது விட்டுக் கொடுத்தால் என்ன வந்து விடும்?''

''சக்கரவர்த்திகள் அப்படிக் கூறவில்லையே!'' என்று பதறினான் இளங்கோ. ''என் கையைச் சுட்டிக் காட்டி விட்டார்கள். ஆற்றலும் வீரமும் என் நெஞ்சில் இருக்கின்றன, இளவரசி! அது இந்தக் கையிலுமில்லை, கைபிடிக்கும் வாளிலும் வேலிலும் இல்லை.'' இடது கையால் தனது நெஞ்சைத் தட்டிக் காட்டினான் அவன்.

''மெய்தான்! அந்த நெஞ்சு தனியாக இல்லை; உங்கள் உடலுடன் ஒன்றியிருக்கிறது'' என்றாள் அருள்மொழி. ''நெஞ்சும் வேண்டும்; நெஞ்சோடு போர்க் கருவிகளும் வேண்டும்; போர்க் கருவிகளை இயக்குவதற்கு வலிமை மிக்க கரங்களும் வேண்டும்'' என்று கூறி மென்னகை புரிந்தாள்.

''நீங்கள் என்னை வென்று விட்டீர்கள்'' என்று பெருமையோடு ஒப்புக் கொண்டான் இளங்கோ.

''அதெல்லாம் ஒன்றுமில்லை; பழையாறையின் அழகும் அமைதியும் உங்களுக்குப் பிடிக்கவில்லையோ என்று நினைத்தேன். எப்போதுமே சுறுசுறுப்பாயிருப்பவர்களுக்குச் சிறிது ஓய்வு வேண்டாமா? இதை உங்களுக்குக் கிடைத்த ஓய்வு என்று கருதினால், பொழுது எவ்வளவு இன்பமாகப் போகும்? ஏன், எங்களுக்கும் நீங்கள் இங்கிருப்பது மகிழ்ச்சிதான்.''

''பழையாறையில் உள்ள வரை இளவரசியின் கட்டளைப்படி நடக்கிறேன்.''

இதைக் கேள்வியுற்றவுடன் இளவரசி அருள்மொழி நடந்து செல்லவில்லை. ஓடி மறைந்து விட்டாள்.

ஆறேழு தினங்கள் ஆனந்தமாக நகர்ந்து சென்றன. அரண்மனைப் படகுகள் ஆற்றில் மிதக்க, பூஞ்சோலைச் செடிகொடிகள் இளவரசிகளின் நடமாட்டத்தால் மெய்சிலிர்க்க, ஆடலும் பாடலுமாக அந்தப்புரம் ஒலி எழுப்ப, ஒவ்வொரு தினமும் கரைந்தது. இளங்கோவாலும் அங்கே தனித்திருக்க முடியவில்லை. அம்மங்கைத் தேவி அவனைப் பரிகாசத்துக்குள்ளாக்கிப் படாத பாடு படுத்தினாள்.

இளங்கோவுக்கு ஒரே ஒரு குறை. ரோகிணியையும் பழையாறைக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும். அவள் இருந்திருந்தால் பொழுது கரைந்திருக்காது; நாள் நகர்ந்திருக்காது. ஏழு நாட்களும் ஏழு விநாடிகளாகப் பறந்திருக்கும். அவள் இல்லாத ஒவ்வொரு இடத்திலும் அவளை இருத்தி வைத்து இன்பம் காண நினைத்தான் இளங்கோ.

ஒரு நாள் பிற்பகலில் இளங்கோவின் சோம்பல் மனம் வழக்கம் போல் ரோகிணியை அசை போட்டுக் கொண்டிருந்தது. கையிலும் அதிகமான வலி இல்லை. எங்கிருந்தோ பரபரக்க ஓடி வந்தாள் அம்மங்கை. மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்க அவன் அருகில் வந்து நின்றாள்.

''இளவரசே! ஒரு முக்கியமான செய்தி; எழுந்து என் பின்னால் வாருங்கள், சொல்கிறேன்!''

''மங்கையரே! முதலில் சொல்லுங்கள், பிறகு வருகிறேன்.''

''சொல்லக் கூடியது இல்லை; பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியது!'' என்று அவசரப்பட்டாள் அம்மங்கை. அவளுடைய வட்ட விழிகளின் குறுகுறுப்பும் அவள் தோற்றத்தின் துடிதுடிப்பும் அவள் ஏதோ சிறு தொல்லை கொடுக்கப் போகிறாள் என்பதை அவனிடம் சொல்லி விட்டன.

''சொன்னால்தான் வருவேன்'' என்றான் சிரித்துக் கொண்டே.

''பிறகு உங்கள் சித்தம்! நான்கைந்து நாட்களாகவே யாருக்கும் தெரியாமல் இது நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்குத்தான் நானே கண்டு பிடித்தேன். என்னோடு வந்தால் நீங்களும்

பார்க்கலாம்; ஆனால் சந்தடி செய்யாமல் வர வேண்டும் !''

இவ்வளவு தூண்டுதல்களுக்குப் பிறகு இளங்கோவால் அவள் அழைப்பை மறுக்க முடியவில்லை. எழுந்து சென்றான். இருவரும் பல கூடங்களைத் தாண்டி மாளிகையின் ஒதுக்குப்புறம் தனித்திருந்த ஒரு சிறு அறையை நெருங்கினார்கள். வாயை மூடிக் காட்டி அவனைப் பேச்சு மூச்சின்றிப் பின்பற்ற வைத்தாள் அம்மங்கை. ஓரமாக ஒதுங்கிக் கொண்டு அவனைச் சாளரத்தின் வழியே பார்க்கச் செய்தாள்.

சித்த வைத்தியருக்காக விடப்பட்டிருந்த சிறிய மருத்துவ மனை அது. இலைகளும் வேர்களுமான பச்சை மூலிகைகள் ஒருபுறம் கிடந்தன. வைத்தியர் சித்தமூலிகை சிந்தாமணியாகிய ஏட்டுச் சுவடியில் சிறு பொழுது மூழ்கியிருந்தார். பிறகு அதைப் போட்டு விட்டு மூலிகைகள் அரைக்கும் கலுவக் கல்லிடம் வந்தார்.

கலுவத்தில் பச்சை இலைகளைப் போட்டுத் தன் இரு கரங்களாலும் அதன் குழவியைப் பற்றி மருந்து அரைத்துக் கொண்டிருந்தாள் அருள்மொழி. முத்து முத்தாக அவள் முகத்தில் வேர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. அவற்றைக் கூடத் துடைக்காமல் தனது வேலையில் அவள் கண்ணும் கருத்துமாக இருந்தாள்.

கைவளைகள் கலகல வெனத் தாளம் இசைத்தன; கரங்கள் இரண்டும் நடன பாவம் காட்டின; கூந்தலில் சூடியிருந்த மலர் இதழ்கள் ஒவ்வொன்றாக உதிர்ந்து கொண்டிருந்தன. இளவரசி அருள்மொழிதானா இது! விரல் அசைப்பில், நொடிப் பொழுதில் அவளுக்காக நூறு பெண்கள் பணி செய்யக் காத்திருக்கும் பேறு பெற்றவள்தானா இவள் !

இளங்கோ வாயடைத்துப் போய்விட்டான். பனித் துளிகளின் மென் திரை அவன் விழிகளில் படர்ந்தது. தெய்வத் திருவாசகத்தின் சில வரிகள் அவன் நினைவுக்கு வந்தன.

'' வான் நடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் டுகாணகை பொங்கத்
தேன்திரு முண்டந் துதைந் திலங்க...
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே ''

எம்பெருமானுக்குப் பெண்கள் பொற்சுண்ணமிடித்து மகிழ்ந்த காட்சியை மாணிக்கவாசகர் பாடியிருந்தார். இந்தக் காட்சியைக் கண்ட இளங்கோவுக்கு அந்தப் பாடலைத் தவிர வேறு எதையுமே நினைக்கத் தோன்றவில்லை.

விரைந்து உள்ளே சென்றவன் ஒரு கணம் பேச நாவெழாது நின்று விட்டு, ''நங்கையாரே !'' என்று தடுமாறினான்.

சித்தவைத்தியருக்குச் சித்தமே கலங்கி விட்டது. ஏதோ குற்றம் புரிந்தவளைப் போல் தலைகுனிந்து கொண்டாள் அருள்மொழி. ஆனால் அரைப்பதை நிறுத்தவில்லை. அம்மங்கை மெல்ல அங்கு தலை நீட்டவே, அவளைச் சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்தாள்.

'' கூடாது, நங்கையாரே !'' என்று தடுத்தான் இளங்கோ.

தொடர்பில்லாமல் எதை எதையோ பேசத் தொடங்கினார் அரண்மனை மருத்துவர். '' நானும் எவ்வளவோ வேண்டிக் கொண்டேன்; தடுத்துப் பார்த்தேன்; இளவரசியார் என்னைச் சினந்து கொண்டார்கள்.''

'' எத்தனை தினங்களாக இப்படி....?''

'' இங்கு வந்ததிலிருந்து இவர்கள் தான் இதைச் செய்கிறார்கள் '' என்றார் வைத்தியர்.

அருள்மொழி வாய் திறந்தாள் : '' பொழுது போகவில்லை; சோம்பல் தவிர்ப்பதற்காக...''

''அதெல்லாம் ஒன்றுமில்லை !'' என்று கைகொட்டிச் சிரித்தாள் அம்மங்கை தேவி. '' மருத்துவத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று தமக்கையாருக்கு ஆசை. ஒவ்வொரு முறை இளவரசர் போர்க்களத்திலிருந்து திரும்பி வரும் போதும் அவருக்கு உதவி செய்யலாம் அல்லவா ?''

எதிரில் நின்ற மூவரும் சேர்ந்து தடுத்த பிறகும்கூட அருள்மொழி தன் பிடிவாதத்தை விடவில்லை. மாவைப் போல் குழைவாக மருந்தை அரைத்த பிறகுதான், தன் வேர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டாள். அவளுடைய உருவம் இளங்கோவின் மனத்துக்குள் கணத்துக்குக் கணம் உயர்ந்து வளரத் தொடங்கியது. அந்த விநாடிப் பொழுதை என்றுமே மறக்கமுடியாதபடி அவன் சிறைப்படுத்திக் கொண்டான்.

அன்றைக்குப் பொழுது சாயும் வேளையில் மதுரையிலிருந்து பழையாறைக்குச் செய்தி கொண்டுவந்திருந்தான் மாங்குடிமல்லன். பாண்டிய நாட்டுப் போரைப் பற்றியும் குறிப்பாக வீரமல்லனைப் பற்றியும் மாங்குடி மாறன் கூறிய செய்திகள் இளங்கோவுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தன. மல்லனைத் தனி யிடத்துக்கு அழைத்துச் சென்று போர்க்களம் பற்றிய செய்திகளை விவரமாகச் சொல்லும்படி கேட்டான். (தொடரும்)

வாழ்க மணமக்கள்




ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாதின் அந்தரங்கக் காரியதரிசி வி. டி. அய்யர் அவர்களின் புதல்வர் திரு ராமதாஸுக்கும் செள. லக்ஷ்மிக்கும் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.



சென்ட்ரல் பாங்கைச்சேர்ந்த திரு வி. ஆர். ராமனின் புதல்வி செள. ஜானகி பி. ஏ.க்கும் திரு விசுவநாதன் பி. காம். முக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.



திரு ராமசுப்ரமண்யன் பி. எஸ்ஸி.க்கும் செள. ராமலக்ஷ்மிக்கும் தென்காசியில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தது.



சென்னை திரு வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர் புதல்வர் திரு சுப்பிரமண்யனுக்கும், செள. பானுமதிக்கும் திருமணம் நடந்தது.



முன்னாள் தினமணி விளம்பர மானேஜர் திரு பி. வி. ராமசுவாமியின் புதல்வி செள. தைலாம்பாளுக்கும் திரு அனந்தராமனுக்கும் விவாகம் நடைபெற்றது.



திரு எஸ். பி. பி. பொன்னுசாமி அவர்களுக்கும் ஓமந்தூர் மிராசுதார் திரு பி. தேவராஜ் அவர்களின் புதல்வி செள. உமாதேவிக்கும் விவாகம் நடைபெற்றது.



சகோதரி

அவன் கதாநாயகன் இல்லை; ஆனால் கதாநாயகனைவிட முக்கியமானவன், அவன் பெரிய முதலாளி இல்லை; ஆனால் முக்கியமான தொழில் செய்பவன். கதையில் அவனுக்கு மிக முக்கியமான பாத்திரம் கொடுக்கப்படவில்லை; ஆனால் கதையின் பிரதான பாத்திரங்களுக்கெல்லாம் அந்தஸ்தை அளிப்பவனே அவன்தான். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அவன் இல்லையென்றால் கதை இல்லை: தியேட்டரில் கூட்டமும், இருக்காது.

இது என்ன புதிர் என்கிறீர்களா? புதிர் இல்லை. ஜி. கே. புரொடக்ஷன்ஸாரின் தயாரிப்பான "சகோதரி" படத்தில் வரும் ஒரு பாத்திரத்தைப் பற்றித்தான் அப்படிக் கூறுகிறேன்.

மனைவியை இழந்த பழனியப்பருக்கு ஒரு மகளும் மகனும் இருக்கிறார்கள். வயோதிகத் தாயும் இருக்கிறாள். மகன் சந்திரனை பி.ஏ. வரையில் படிக்க வைக்கிறார். மகள் மீனாட்சியைச் சிங்காரத்துக்கு விவாகம் செய்து வைக்கிறார். ஆனால் சிங்காரம் சூதாட்டத்திலும் குடியிலும் இறங்கிவிடுகிறான். மனைவி ஊரில் இல்லாத சமயத்தில் பால்காரப் பெண்ணின் அழகில் மயங்கி அவளை நவநாகரிக நங்கையாக்கி இன்பவாழ்வு வாழுகிறான். இந்த நாடகம் தொடர்ந்து நடக்கிறது. இவ்வளவும் அவன் மனைவிக்குத் தெரியாது. (எப்படித் தெரியாமற்போயிற்று என்று தயவு செய்து கேட்காதீர்கள்!) மாப்பிள்ளையின் மதிகெட்ட தன்மையைப் பற்றித் தம்பி அக்காளுக்கு அறிவித்ததற்குப் பலனாக அவனுக்குக் கன்னத்தில் அறை கிடைக்கிறது! பழனியப்பர் மிகவும் அடக்கமுள்ள பக்கத்து வீட்டுப் பெண் தங்கத்தைத் தம் மகன் சந்திரனுக்கு நிச்சயிக்கிறார். சந்திரன் தகப்பனாருக்குத் தெரியாமல் தன் காதலி, கல்லூரி மாணவி பங்கஜத்தைப் பதிவுத் திருமணம் செய்து கொள்கிறான்.

"சகோதரி" என்ற தலைப்பு படத்துக்கு எப்படிப் பொருந்துகிறது என்று புலனாகவில்லை. தம்பியின் நாகரிக மனைவியினால் ஏசப்பட்டு, கணவனின் மாசு படிந்த வாழ்வைக் கண்டு மனம் நொந்து உயிர் துறந்த பெண்ணின் கதையில் சகோதரியின் பங்காகக் கூறுவதற்கு விசேஷமாக என்ன இருக்கிறது?

கதையில் ஒன்றும் இல்லாமல் போய் விட்டதே என்று குறைப்பட்டுக் கொள்ளாமல் இருப்பதற்குப் பால்கார ஆனந்தக்கோனார் இருக்கிறார்!

"சகோதரியின்" திரைக் கதை, முக்கிய பாத்திரங்களின் குணாதிசயங்கள் யாவும் எனக்கு மறந்து போய் விட்டன. ஆனால் ஆனந்தக் கோனாரை மாத்திரம் மறக்கவே முடியவில்லை. ஹாஸ்ய நடிப்புக்கென்றே பிறந்திருக்கும் நம் அருமை நடிகர் சந்திரபாபுவை நாம் எப்படி மறக்க முடியும்?







"அதோ, உனக்கு அருகில் நிற்கிறாரே, அது யார்?" என்று கேட்கிறார் மகரிஷி, இந்துமதியைப் பார்த்து.

"அதையும் உங்கள் ஞான திருஷ்டியாலேயே பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடாதா?" என்கிறாள் இந்துமதி.

மகரிஷியின் சிஷ்யன் குறுக்கே புகுந்து, "மகரிஷி தமது ஞான திருஷ்டியால் உடனே கண்டுபிடித்துவிடுவார். ஆனால் தமது ஞானத்துக்கே திருஷ்டி பட்டுவிடப் போகிறதே என்றுதான் கொஞ்சம் யோசிக்கிறார்!" என்கிறான்.

சபையில் குபீரென்ற சிரிப்பொலி எழுகிறது. இப்படி ஒன்று இரண்டா; இரண்டரை மணி நேர நாடகத்தைப் பார்ப்பதற்குள் வயிறு வலிக்கச் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். 'பளீர் பளீர்' என்று ஹாஸ்யங்கள் அங்கங்கே மின்னுகின்றன. தொடர்ந்து இடி இடிப்பது போல் சபையில் சிரிப்பொலி கேட்கிறது.

கல்கி அவர்களிடம் பக்தியும் அன்பும் கொண்ட இளைஞர்கள் பலர் ஒன்றுசேர்ந்து அவர் பெயராலேயே ஒரு நாடகக் குழு அமைத்து நாடகங்களை நடத்தி வருகிறார்கள். கல்கி அவர்களுடைய தேவகியின் கணவனை வெற்றிகரமாக நடத்திவரும் இவர்கள் (இருபத்தைந்து முறைகள் அரங்கேறியிருக்கிறது) இப்போது அமரதாராவை முன்னிலும் சிறப்பாக அரங்கேற்றியுள்ளார்கள்.

இம்மாதம் 5ந் தேதி கல்கி அவர்கள் நினைவு தினத்தைக் கல்கி நாடக மன்றத்தார் ரஸிக ரஞ்சனி சபையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். திரு ம. பொ. சி. அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு அகிலன் திரு சோமு, திரு கி. வா. ஜகந்நாதன் ஆகியோர் அழகிய சொற்பொழிவாற்றினார்கள். குறிப்பாக, 'பற்றி இலக்கியம்' என்பது வயிறு பற்றிச் சொல்வதாக இருக்கக் கூடாதென்றும் அன்பு பற்றிச் சொல்வதாக இருக்க வேண்டும் என்றும் திரு கி. வா. ஜ. கூறியதை அனைவரும் வரவேற்கும் முறையில் கரகோஷம் செய்தார்கள். கூட்டம் முடிந்த பின்னர் அமரதாரா நாடகம் நடைபெற்றது.

அமரதாரா கதையில் ஒவ்வொருவரும் உணர்ச்சியும் உயிர்த்துடிப்பும் மிக்க கதா பாத்திரங்கள். அவ்வளவு உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தி நடிப்பது தொழில் நடிகர்களுக்கே மிகக் கடினமான காரியம். கல்கி நாடக மன்றத்தார் இயன்றவரை முயன்று பார்த்தார்கள். இந்தக் குறையை நன்கு உணர்ந்ததாலேயே வசனகர்த்தா திரு கூத்தபிரான் சாமர்த்தியமாக ஹாஸ்யங்களுக்கு அதிக இடம் கொடுத்து மொத்தத்தில் நாடகம் நல்ல பெயர் எடுக்கச் செய்திருக்கிறார்.

நாடகத்தின் சிறப்புக்கு முக்கிய காரணம் ஐயாக்குட்டியாக நடித்த திரு லக்ஷ்மணனும் பையாக்குட்டியாக நடித்த கூத்தபிரானும். திரு லக்ஷ்மணனின் மிக இயற்கையான பேச்சும் நடிப்பும் அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றன. இந்துமதியாகக் குமாரி விஜயலக்ஷ்மியும் கலோசனாவாகக் குமாரி சரோஜாவும் தோன்றி நன்றாகவே நடித்தார்கள். மருதாயியாகத் திரு ரங்கன் தோன்றிச் சக்கைப் போடு போட்டார்.

திரு என். எஸ். நடராஜன் டைரக்ஷனில் எந்த நாடகமுமே சோடை போனதில்லை.

பின்னால் உட்கார்ந்திருந்த வானொலி நிலைய அன்பர் ஒருவர் ஒவ்வொரு காட்சிக்கும் ஒரு 'அபாரம்' போட்டுக்கொண்டே வந்தார். உண்மை, அமரதாரா—அபாரம், நகைச்சுவையில்.



தம்பதிகளுக்கு ஓர் ஆலோசனை

1. குடும்பக் கட்டுப்பாடு புத்தகம் ஒன்றைத் தயவுசெய்து வாங்கிப் படியுங்கள். புத்தகத்தின் விலை 25 காசுகள்தான். (தபால் செலவு தனி).

2. புத்தகம் மூன்று பாகங்கள் அடங்கியது. முதல் பாகத்தில் சென்னை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாடு போர்டின் ஆலோசனைகள் தரப்படுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய இயற்கை வழிகள் கருவி வழிகள், ரணசிகிச்சை வழிகள் இவற்றை இரண்டாம் பாகம் எடுத்துரைக்கின்றது. குடும்பக் கட்டுப்பாடு போர்டின் ஆலோசனைகளைப் பின்பற்றி நடப்பதன் மூலம் உங்கள் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை மூன்றும் பாகம் தெளிவு படுத்துகிறது. ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகங்கள் கிடைக்கும்:

3. புத்தகத்தை எப்படிப் பெறுவது ?

(1) அரசாங்க அச்சக சூப்பிரண்டு மவுண்ட் ரோடு, சென்னை-2 என்ற முகவரியிலும் மற்றும் அரசாங்க வெளியீடு ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

(அல்லது)

(2) மதராஸ் - 6, வைத்தியத்துறை டைரக்டர் அலுவலகத்திலுள்ள சென்னை மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிக்குக் கடிதம் எழுதி ஆங்கிலமோ தமிழோ ஒரு பிரதி கேட்கலாம். உங்களது முழு முகவரியுடன் 40 காசை மணியார்டர் செய்ய வேண்டும். மணியார்டர் மட்டுமே வாங்கப்படும். ஸ்டாம்புகள் ஒத்துக் கொள்ளப்படமாட்டா. சாதாரண புக் போஸ்டில் ஒரு புத்தகம் உங்களுக்கு அனுப்பப்படும். 86 காசு மணியார்டர் அனுப்பினால் புத்தகம் ரிஜிஸ்தர் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

(3) ஒரு மொத்தமாக 25ம் அதற்கும் அதிகமான புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு மொத்த விலையில் 25 சத விகிதம் தள்ளிக் கொடுக்கப்படும்.

(4) நான்கு லட்சம் குடும்பக்கட்டுப்பாடு பிரதிகள் இதுவரை அச்சிடப்பட்டதில் 3,05,495 பிரதிகள் செலவாயின.

சென்னை மாநில
குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி



டென்னிஸ் விருந்து!

மாம்பலம் டென்னிஸ் மைதானத்தில் ஒரு சிறுவன் வேகமாக ஓடிக் கொண்டிருந்தான். அவனைப் பின்தொடர்ந்து ஒரு பெரியவர் ஓடிக் கொண்டிருந்தார். இவர் எதற்காக ஓடுகிறார்? அவன் ஏதாவது தப்பு செய்துவிட்டானோ? அவனை அடிப்பதற்காகத்தான் பின் தொடருகிறாரோ? ஆனால் அருகில் சென்றதும், அந்தச் சிறுவனுக்கு நன்றாக உடல் வலிவு ஏற்பட வேண்டும் என்பதற்காக அதிகாலையிலேயே டென்னிஸ் மைதானத்தைச் சுற்றிச் சுற்றி அவன் ஓடி வந்து கொண்டிருக்கிறான் என்பது தெரிய வந்தது. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்கள்; அந்தச் சிறுவனுக்கு இளம் வயதிலேயே டென்னிஸ் விளையாட்டுத் திறமைக்கு வேண்டிய பயிற்சியனைத்தும் சளைக்காமல் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார் அவன் தந்தை. அவர் முயற்சி வீணாகவில்லை. இடைவிடாத பயிற்சியும் ஊக்கமும் அச்சிறுவனுக்குப் பெரும் புகழும் கிடைக்க வழி வகுத்தன. இன்று உலக டென்னிஸ் விளையாட்டுக்காரர்களில் மூன்றாவதாகவும், இந்திய தேசிய வெற்றி வீரராகவும் திகழும் திரு ஆர். கிருஷ்ணன்தான் அந்தச் சிறுவன். பிரபல டென்னிஸ் ஆட்டக்காரரான திரு ராமநாதன் அவர்கள்தான் அந்தச் சிறுவனின் தந்தை. திரு கிருஷ்ணன் விளையாட்டுக் கலையில் மட்டும்தான் சூரர் என்பதில்லை; படிப்பிலும் கெட்டிக்காரர். லயோலா கல்லூரியில் பயின்ற அவர் எம். ஏ. பட்டதாரி.

இந்திய விளையாட்டுக்காரர்களான கிருஷ்ணனும் பிரேம்ஜித் லாலும், அமெரிக்க ஆட்டக்காரர்களான மக்கேயும், பிராங்க்ஸும் டிசம்பர் 8உ எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில் விளையாடுவதைக் காண மண்டை வெடிக்கும் வெய்யிலில் மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். முதலில் அமெரிக்க விளையாட்டுக்காரர் பிராங்க்ஸுக்கும் பிரேம்ஜித்லாலுக்கும் காட்சிப் பந்தயம் ஆரம்பமாயிற்று.

'' பிரேம்ஜித்லால் அபாரமாக ஆடுகிறார்; பிராங்க்ஸ் அவர் கிட்டே நிற்க முடியாது!''

'' ஆமாம், உண்மை! அவர் ஆடும்போது பந்து மட்டும் பறக்கவில்லை; மட்டையும் அல்லவா பறந்து விடுகிறது!''

'' சுவாமி! நேரமும் பறந்துவிட்டது. இதோ கிருஷ்ணனும் மெக்கேயும் வந்துவிட்டார்கள். அவர்கள் ஆட்டம் பார்க்கலாம்!''

'' சார்! 'வாலி' யைப் பார்க்கணும்னு. கிருஷ்ணனிடம் அதைப் பார்க்கணும்!'' என்றார் டென்னிஸ் விசிறி ஒருவர்.

'' என்ன, வாலியா? வாலி இராமாயணத்தில் அல்லவா? கிருஷ்ணாவதாரத்தில் எங்கே வந்தான்!''

'' நம்ம கலியுக கிருஷ்ணாவதாரத்தில் கிருஷ்ணனின் வெற்றிக்கு 'வாலி'தான் காரணம். தலைக்கு மேலே பின்னால் அவர் பந்தைப் போடும் அழகை (வாலி)ப் பார்த்து அயர்ந்து விடுவீர்!'' என்று விளக்கினார் அந்த டென்னிஸ் விசிறி.

திரு கிருஷ்ணன் பந்தை அபாரமாக அடித்து இரண்டு ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றி பெற்று மெக்கேயைத் தோற்கடித்தார். திரு மெக்கே 'சர்விஸி'ல் கெட்டிக்காரர் என்ற புகழைச் சம்பாதித்துக்கொண்டார். இரட்டையர் ஆட்டத்தில் திரு மெக்கேயையும் திரு பிராங்க்ஸையும், திரு கிருஷ்ணனும் திரு பிரேம்ஜித்லாலும் தோற்கடித்து வெற்றி பெற்றனர். அன்று நடந்த விளையாட்டு ஒரு அரிய விருந்தாகவே அமைந்தது. — குண்டுமணி.



நாட்டு வைத்தியம்

130. நேயர்கள் கடிதம்

நேயர்கள் கடிதம் வழக்கம்போலக் குன்றுகள் கணக்கில் குவிந்திருக்கின்றன. கேட்ட கேள்விகளையே கேட்பது.

'கல்கி'யில் இதற்கு...மருந்துகளை... விதத்தில் உபயோகிக்க வேணுமென்று எழுதியிருக்கிறீர்கள். அதையே செய்யலாமா என்பது போன்றவை சில.

சத்திரத்துச் சோற்றுக்குத் தாத்தப்பன் உத்தரவு வேணுமா? தாராளமாக அதையே செய்யலாம். தாராபுரம் சகோதரி கவனிக்கவும்.

உள்ளூரில் இருப்பவர் கடிதம் எழுதுவது தான் சொன்னாலும் ஆறாத குறை. எப்போது வருவது? எங்கே இருப்பிடம் என்பது போன்ற கேள்விகளைச் சென்னை வாசிகள் எழுதிக் கேட்க வேணுமா? டெலிபோனை எடுத்து, 'ஸ்ரீ ஹரி எங்கே இருக்கிறார்?' என்று பார்த்து, விலாசத்தைக் குறித்துக் கொண்டு வந்து சேர்ந்தால் போதாதா? இது கூடவா தெரியாது? இருபதாம் நூற்றாண்டு பாதிக்கு மேல் கழிந்துவிட்டது. இருபத்தோராம் நூற்றாண்டு ஜானுவாஸம் புறப்பாடாகிவிட்டது. இப்போது மேற்சொன்ன உபாயங்கூடத் தெரியாதென்றால் எப்படி நம்புவது? யாரைச் சொல்லி என்ன பயன்? ஓயாமல் ஒழியாமல் தவிர்க்கக் கூடிய சந்தர்ப்பங்களில் கூட எழுதி எழுதிக் கை வலிக்கு ஆமபாதாந்தக தைலம் தேய்த்து வெந்நீர் விடவேண்டிய யோகம் நமக்கு!

கடிதம் 513/3ல் இலங்கைச் சகோதரி எழுதுகிறார்: தனது சகோதரிக்குக் கழுத்தின் எதிர்ப்புறத்தில் முகவாய்க் கட்டைக்குக் கீழே நெஞ்சக் குழிக்கு மேலே ஒரு வீக்கம் இருக்கிறதாம். இது வரவரப் பெரியதாகிக் கொண்டே வருகிறதாம். பரீட்சித்துப் பார்த்த டாக்டர்கள் இதை "காய்டர்" என்று சொல்கிறார்களாம். இதற்கு "அயோமன்" கலந்த மருந்து கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களாம். 'இந்த நோயைப் பற்றி நீங்கள் ஏன் கல்கியில் இன்னும் எழுதவில்லை?' என்று ஓர் உரிமையுடன் கேட்டிருக்கிறார் இந்தச் சகோதரி.

இதைப் பற்றி எழுதாதது உண்மைதான். விரைவில் இதைப் பற்றி எழுதுகிறேன். இதனிடையில் இச் சகோதரி இந் நோய் தீர என்ன செய்யலாமென்பதையும் தெரிவிக்க வேணுமல்லவா?

"நிர்க்குண்டி" என்னும் கருநொச்சிச் சாறு சேர்த்துக் காய்ச்சிய வாசாதி தைலத்தைத் தினசரி தலைக்கு உச்சியிட்டு ஊறி-பிறகு அதையே நிரவித் தடவி முடிசீவிக் கொள்வது. அத் தைலத்தினாலேயே வாய் கொப்பளிப்பது. அதாவது தொண்டையில் தொடும் வண்ணம் "கள கள கள" வென்று இத்தைலத்தில் ஒரு டீஸ்பூனளவை வாயிலிட்டுக் கொப்பளித்துப் பிறகு துப்பி வெந்நீரினால் வாய் தொண்டைகளைக் கழுவிக் கொள்வது ஆகியவை செய்வது. வீக்கமுள்ள இடத்தில் இந்தத் தைலத்தைத் தடவி ஊற விடுவது.

ஆமாம்! இப்படிச் செய்தால் "அயோமன்" கொடுத்ததற்குச் சமமாகுமா? உள்ளுக்கு ஒன்றுமே மருந்து தேவையில்லையா என்கிறீர்களா?

இத் தைலத்தை உபயோகிப்பதால் "அயோமன்" உபயோகத்தால் ஏற்படும் பலன் உண்டாகுமா என்பதைப் பற்றி இவ்வியாதியைப் பற்றி எழுதப்போகும் கட்டுரையில் விஸ்தரிக்கலாமே! இப்போதைக்கு இச்சகோதரிக்கு இதைச் சொன்னால் போதுமே! உள்ளுக்கும் மருந்து அவசியம் கொடுக்க வேண்டியதுதான்.

பொதுவாக, சலிப்புத் தன்மையைச் சரீரத்துக்கு அளிக்கவல்ல அச்வகந்தா லேஹ்யத்தில் காலை மாலை அரைத்தோலா வீதம் கொடுத்து வருவது நல்லது.

மெலிந்த சரீரமுள்ளவரானால், ஜீரண சக்தியும் நன்றாயிருக்குமானால் குக்குலு திக்தக க்ருதம் என்ற மருந்தைக் கொடுப்பது நல்லது.

உடல் பருமனுள்ளவராயின் மஹாமஞ்சிஷ்டாதி ரஸாயனம் என்ற [கேரள யோகப்படி தயாரித்த] லேஹ்யத்தில் காலை மாலை கால் அரைத்தோலா கொடுத்துவரலாம்.

சித்தர் முறைப்படி பறங்கிச் சக்கை பதங்கம் என்ற மருந்தையும் கொடுக்கலாம். இம்மூன்று மருந்துகளையும் சாப்பிடும்போது பத்தியம் இருப்பது அவசியம். உஷ்ணமானவை கூடாது. பால், நெய் இவற்றை அதிகம் உபயோகித்தல் நல்லது. மீன் கூடவே கூடாது. நெருப்பையண்டிப் புழங்குதல் வெய்யிலில் கொள்ளல்—இரவு கண் விழித்தல், கோபம், சோகம், பயம் இவை கூடாது.

கடிதம் 516/3ல் திருப்பூர் சகோதரி எழுதுகிறார்....

"...எனக்கு அடிக்கடி கண்ணில் கண் கட்டி வருகிறது. ஆனால் கரைவதில்லை. அப்படியே தங்கி விடுகிறது. இரவில் 9-மணிக்கு மேல் கண் எரிச்சல் தாங்கவே முடிவதில்லை. நான் பகலில்

சிறிது நேரம் படிப்பதுண்டு. குழந்தை பிறந்து கொஞ்சநாட்களிலிருந்து படிக்கிறேன். சிலர் பச்சை உடம்பில் படித்ததால் கண் கெட்டு விட்டது என்கிறார்கள். ஆனால் படிக்காமல் இருக்க முடியாது இந்தக் கண்கட்டி ஆறு மாதமானாலும் கரைவதில்லை. கண்ணில் கட்டி வந்து வந்து கண்ணின் இமை சற்றுத் தடிமனாகவே ஆகி விட்டது.........தினம் தலைவலி உண்டு....என்று இப்படித் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொண்டு போகிறார்.

படிக்காமல் இருக்க முடியவில்லை என்றால் எனக்குப் புரியவில்லை. படிக்காமல் இருந்தால் என்ன செய்கிறது? பொழுது போகமாட்டேன் என்கிறதா? பல்லாங்குழி — தாயக்கட்டை இப்படி ஏதாவது பொழுதுபோக்கான விளையாட்டுகள் இல்லையா? கண்ணில் கண் கட்டிகள் இப்படி வருமானால் செய்ய வேண்டிய சிகிச்சை ஒன்று மூக்குக் கண்ணாடி போட வேணும். அல்லது ஏற்கெனவே கண்ணாடி போடுபவரானால் அக்கண்ணாடிகளை ஒருகால் மாற்றவேண்டுமா என்று பரிசோதிக்க வேண்டும். அவசியமானால் மாற்றவும் வேணும். 'தினம் தலைவலி உண்டு' என்பதையும் சேர்த்துப் பார்ப்போமானால் கட்டாயமாகக் கண்ணில் ஏதோ கோளாறு இருக்கத்தான் வேண்டுமென்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? ஆகவே என்ன செய்ய வேணுமென்பதைச் சொல்லவும் வேணுமா? முதலில் கண்ணைப் பரிசோதித்துக் கண்ணாடி வேணுமா என்பதைத் தெளிந்து அவசியமானால் அதைப் பெற முயல வேணும்.

பிறகு கண்கட்டிகளை முன்னுக்கீரைத் தண்டின் இலையையோ—நீர்முள்ளியின் இலையையோ கொளுத்திக் கரியாக்கி ஒரு சொட்டு ஆமணக்கெண்ணெய் விட்டுக் குழைத்து ஒரு சொட்டுக் கண் கட்டியின் மேல்வைத்து வந்தால் சிறுகச் சிறுக அது கரைந்து கொண்டே வரும். ஒரு நிலையில் கட்டி கரைந்த பின் அவ்விடத்தில் துவரம்பருப்பளவு வெளுத்த பிரதேசம் சிறியதொரு விரணம்போல் நிற்கும். அந்நிலையில் ஒரு சொட்டுத் தேங்காய் எண்ணெயைத் தடவினால் இதுவும் உலர்ந்துவிடும். மலபந்தமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமென்று பொதுவாகக் கண் வியாதிகள் எல்லாவற்றுக்குமே சொல்லப்பட்டுள்ளது. ஆனால் கைக்குழந்தைக்காரியானதால் குடலை இளக்கிடல் சில சமயங்களில் தீராத தொல்லையைக் கொடுப்பதாய் முடிவதுண்டு. ஆகவே இந்தச் சகோதரிக்கு இது வேண்டாம்.

மேலும் தொடர்ந்து இதே சகோதரி எழுதுகிறார் - தனக்கு ஓர் அசதி - இடுப்பு வலி - என்று இப்படி - அதற்கென்ன? விதிப்படி எண்ணெய்க் குளி செய்து வந்தால் அசதியும் மாறும் - இடுப்பு வலியும் தீரும்.

குழந்தைக்குப் பால் போதவில்லை.... தன் கணவருக்கு அடிக்கடி வரும் வாய்ப்புண்....இவர்கள் வீட்டிலுள்ள ஒரு பையன் தலையில் ஏதோ அடிபட்டு மூர்ச்சையானான். அதிலிருந்து பிழைப்பானா என்றாகி விட்டது. இப்போது அதைத் தொடர்ந்து சில மூளைக் கோளாறுகள். தலையைத் தொட்டால் போதும். உடனே மூர்ச்சைதான். பேச்சு சரிவர வராது என்று இப்படி; எத்தனை பேருக்குக் கேட்டிருக்கிறார். தெரியுமா? இதற்கெல்லாம் எத்தனை கட்டுரைகள் கணக்கில் பதில் எழுத வேணும்! இது கடிதத்துக்குப் பதிலாகுமா?

பிருஹன்மாஷ தைலமென்று ஒரு மருந்து. அதைத் தலைக்குத் தடவி ஊறி வருவது இந்தச் சிறுவனுக்கு நல்லது. கொஞ்ச நாட்களான பிறகு குணத்தை எழுதட்டும்.



எப்பொழுதும்

CASTROL

காஸ்ட்ரால்

Castrol

என்று குறிப்பிட்டே கேளுங்கள்

எண்ணெய்களுள் தலை சிறந்தது

ஸி. ஸி. வேக்பீல்டு & கோ., லிட்.

(இங்லாந்தில் இணைக்கப்பட்டது
அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

பம்பாய் - கல்கத்தா - சென்னை - புது டில்லி - பெங்களூர்
கொச்சின் - லக்னௌ - டேஸ்பூர் - நாக்பூர் - செகந்திராபாத்

S. 41

உத்தரமேரூர் சுந்தரவரதன்


தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

இது ஜனநாயக யுகம். மக்களை மக்களுக்காக மக்களே ஆளும் முறை இன்று எங்கும் பரவி இருக்கிறது. மக்களுக்காக அவர்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையையே 'எலெக்ஷன்' என்றும் தேர்வு என்றும் சொல்கிறோம். வெள்ளைக்காரர்கள் காலத்தில் இந்த எலெக்ஷன் முறை அமுலுக்கு வந்தது. அப்போது முதலில் வாக்குரிமை சொத்துடையவர்களுக்கும் கல்வி அறிவில் தேர்ச்சி பெற்றவர்களுக்குமே இருந்தது. பின்னர் நாளடைவில் எழுதப்படிக்கத் தெரிந்த எல்லோருக்கும் வாக்குரிமை உண்டு என்று வந்தது. இந்த நிலையில் கூட, வாக்காளர்களில் பெரும் பகுதியினர்க்குத் தங்கள் கையெழுத்தைப் போடத் தெரியுமே ஒழிய, பிறர் எழுதியதையோ அல்லது அச்சடித்ததையோ வாசிக்கத் தெரியாது. ஆதலால் வாக்குரிமைச் சீட்டாம் 'ஓட்' பதிவு செய்வதில் எவ்வளவோ தகராறுகள். இவற்றைத் தவிர்க்க ஓட்டுப் பெட்டிகளில் பச்சை, சிவப்பு, மஞ்சள் என்ற வர்ணக் காகிதங்களை ஒட்டி, அந்த வர்ணத்துக்கு உரிய பிரதிநிதிகளுக்கு ஓட் செய்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார்கள். "மங்களகரமான மஞ்சள்" என்பது போன்ற தேர்தல் முறையிலிருந்தது நமது தேர்தல் முறையிலே.


காலம் மாறிற்று. வெள்ளைக்காரனை விரட்டி அடித்து விட்டு நாமே நம்மை ஆளும் சுதந்திரம் பெற்றோம். நாமோ நம் வோட்டர்களுக்கு எழுதப் படிக்கத் தெரிய வேண்டுவது அவசியம் என்று கருதவில்லை. வயது வந்த எல்லா ஆண் மகனுக்கும், பெண் மகளுக்கும் வாக்குரிமை உண்டு என்று நிர்ணயித்தோம். இது காரணமாக, முன்னர் இருந்ததுபோல் பச்சை, மஞ்சள், சிவப்பு என்பதைக் கூட நமது வோட்டர்களால் வேறுபடுத்திக் காண வகையில்லை. அவ்வளவு அறிவு வளர்ச்சி! ஆதலால் இரட்டைக் காளை, கதிர் அரிவாள், ஓலைக் குடிசை, உதயசூரியன், தாமரை, கூஜா, மாட்டுவண்டி, மனிதன் என்றெல்லாம் சின்னங்களை ஓட்டுப் பெட்டியில் ஒட்டி, அந்தப் பாகுபாட்டைத் தெரிந்தாவது ஓட்டளிக்கச் செய்திருக்கிறோம் நம் ஓட்டர்களை. இந்த முறையில் கூட எத்தனையோ குளறுபடி. இந்த முறையெல்லாம் நமது தாயகமாம் இந்தியாவிலே.

இம்மட்டோடு, மக்களின் பிரதிநிதிகளாக யார் யார் வரலாம் என்பதற்கு யாதொரு நிர்ணயமும் இல்லை. யார் வேண்டுமானாலும் வரலாம் என்ற நிலை வேறே. இப்படித்தான் ஜனப் பிரதிநிதி ஓட்டர்கள், ஓட்டளிக்கும் முறை என்றெல்லாம் நமது ஜனநாயகம் விரிந்திருக்கிறது. 'இந்த ஜனநாயகம் வாழ்க!' என்று ஊரோடு சேர்ந்து கூவுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாதவர்களாக இருக்கிறோம் நம்மில் பெரும்பாலோர். இப்படியெல்லாம் இன்று நடக்கும் நமது அருமைத் தமிழ் நாட்டிலே, அன்று ஆம், ஆயிரம் வருஷங்களுக்கு முன் இந்தத் தேர்தல் முறை எப்படி நடந்தது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? இதைத் தெரிந்து கொள்ளவே இன்று நாம் உத்தரமேரூருக்குச் செல்கிறோம்.

உத்தரமேரூர் செங்கல்பட்டு ஜில்லாவிலே உள்ள ஒரு சிறிய ஊர்தான். இதற்குப் போகச் சென்னை திருச்சி டிரங்க் ரோட்டிலே, சென்னையிலிருந்து நாற்பது மைல் வந்து, செங்கல்பட்டு, பாலாற்றுப் பாலம் எல்லாம் கடந்து மாவண்டூர் பக்கம் மேற்கு நோக்கிப் பத்தொன்பது மைல் போக வேணும். இல்லை என்றால் சென்னையிலிருந்து காஞ்சி வந்து வேகவதி, பாலாறு எல்லாவற்றையும் கடந்து மாகறல் வழியாகவும் வந்து சேரலாம். ஊருக்குள் செல்லும் வழியிலேயே கடைத் தெருவையும் பஸ் ஸ்டாண்டையும் ஒட்டி, ஒரு சிறு மாடக் கோயில், மதில் எல்லாம் இடிந்து கிடப்பதால் ஊரில் உள்ள கழுதைகளும், மாடுகளும் இக்கோயில் பிராகாரத்திலேயே நிற்கும். இந்த அடையாளங்களை வைத்து எளிதாகக் கோயிலைக் கண்டு பிடித்து விடலாம். இந்தக் கோயிலில்தான் **வைகுண்டப் பெருமாள்** இருக்கிறார். அவருக்கு எண்ணெய், தண்ணீர் கிடைத்து எத்தனை நாட்கள் ஆயினவோ! என்றாலும் இந்தக் கோயில் சுவர்களில்தான் ஒரு கல்வெட்டு; சோழ மன்னர்கள் காலத்து 'எலெக்ஷன்' எப்படி நடந்தது என்று கூறுகிறது. இந்தக் கல்வெட்டின் படி அந்தக் காலத்து மக்கள் வாக்குரிமைச் சீட்டுகளை ஓலையில் எழுதி, அதற்கென வைத்துள்ள ஒரு குடத்தில் போடுவார்கள். இப்படிப் போடும் முறையையே 'குடவோலை' என்பார்கள். ஏரி வாரியம், தோட்ட வாரியத்துக்குப் பிரதிநிதிகளாக நிற்க விரும்புபவர்கள் பெயர்களை ஓட்டர்கள் எழுதி இக் குடத்தில் இடுவார்கள். பின்பு குடவோலையை, பெரிய சபை கூட்டி, வயது முதிர்ந்த நம்பியாரின் முன்னிலையில், ஒரு சிறுவனைக் கொண்டு ஓலைகளை ஒவ்வொன்றாய் எடுத்து, ஒரு மத்தியஸ்தன் கையில் கொடுப்பார்கள். அவனும் உள்ளங்கையை அகல விரித்துக் காட்டி விட்டு ஓலையை வாங்கி வாசிப்பான். அவன் வாசித்த பிறகே, நம்பியாரும், சபையோரும் படிப்பார்கள். யாருடைய பெயருக்கு அதிகச் சீட்டுக்கள் கிடைத்திருக்கின்றனவோ அவர்களே, தோட்டவாரியம் ஏரிவாரியம் முதலிய பொதுக் காரியங்களுக்கு நியமிக்கப்படுவார்கள். இதையெல்லாம் விளக்கமாகவே கூறும் கல்வெட்டு. இக் கல்வெட்டு பண்டித வத்ஸலன், வீரநாராயணன் குஞ்சரமல்லன் என்ற விருதுப் பெயர்களைப் பெற்ற **பராந்தக சோழன்** காலத்தில் பொறிக்கப்பட்டது என்று அறிகிறோம். இவன் ஆட்சிக் காலம் கி. பி. 907 முதல் 950 வரை நாற்பத்து



குடவோலைக் கல்வெட்டுள்ள கோவில்



சுந்தரவரதர் கோயில்

மூன்று ஆண்டுகள். இக் கல்வெட்டின் ஒரு பகுதியைப் படிக்கிறீர்களா?

"ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரை கொண்ட கோபர
கேசரி, வர்மருக்கு, யாண்டு பதினலாவது
நாள் பதினறு. காளியூர்க்கோட்டத்து
தன்கூற்று உத்தரமேரூர் சதுர்
வேதி மங்கலத்து ஸபையோம்:
இவ்வாண்டு முதல், எங்களூர்க்குப் பெரு
மானடிகள் எம்பெருமான் ஸ்ரீவீர
நாராயணன், ஸ்ரீ பராந்தக தேவன்
ஸ்ரீ பரகேசரி வர்மருடைய
ஸ்ரீமுகம் வரக்காட்ட, ஸ்ரீமுகப்படி
ஆக்ஞையால் சோழநாட்டுப்
புறங் கரம்பை நாட்டு, ஸ்ரீ வங்க
நகர், காரநிசை கொண்ட யாமமவித்த
பட்டனுடைய, சோமாசிப் பெருமான் இருந்து
வாரியமாக ஆட்டொருகாலும் ஸம்வத்ஸர
வாரியமும் ஏரிவாரியமும் இடுவதற்கு
வியவஸ்தை செய்த பரிசாவது......"

என்ன போதுமல்லவா! கல்வெட்டுத் தமிழ் என்றால் இப்படித்தான் இருக்கும். இதன் தமிழால் எல்லாம் கண்டு பிடித்துச் சரித்திரம் உருவாக்குவது என்பது சிரம சாத்தியமான காரியமே. அந்த எல்லாம் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கே விட்டு விடலாம்.

இக் குடவோலைக் கல்வெட்டு சாஸனத்தின் படி யார்யார் வாரியப் பிரதிநிதிகளாகத் தேர்தலுக்கு நிற்க யோக்கியதை உடையவர்கள், யார் யார் தகுதியற்றவர்கள் என்றும் நாம் அறிகிறோம். எழுபது வயதுக்கு மேற் போகாதவர்களாகவும், முப்பத்தைந்து வயதுக்குக் குறையாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். தேர்தலுக்கு நிற்பவர்கள் சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவர்களாகவும், குணங்களில் குறைபாடு இல்லாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். வாரியங்களில் வேலை செய்து கணக்குக் காட்டாதே இருந்தாலும், அவர்களது பந்துக்களும் தேர்தலுக்கு நிற்கத் தகுதியற்றவர்கள். (இதைவிடக் கடுமையான நிபந்தனைகள் நமது இந்தியச் சட்டத்திலும் இருக்கவே செய்கிறது என்றாலும் அத்தனையையும் சரிக்கட்டி விட்டு, உண்மையிலேயே தகுதி இல்லாதவர்கள் எல்லாம் இன்றையத் தேர்தல்களுக்கு நின்று வெற்றி பெறுகிறார்கள் என்பதும் உண்மை தான்) குடவோலையைப் பற்றிய கல்வெட்டுத் தகவல்கள் இத்தனையையும் எளிதாகத் தெரிந்து கொண்டோர்கள். ஆனால் இவ்வளவு தகவலையும் வைகுண்டப் பெருமாள் கோயில் சென்றால் தெரிந்து கொள்ள முடியாது. கோயிலின் முன்பாகம் கடைகளால் மறைக்கப் பட்டிருக்கும். கல்வெட்டுக்களைப் படிப்பது என்பதும் இயலாத காரியம். இடிந்து விழுந்த கற்களை—கல்வெட்டு இருந்த கற்களைத்தான்—மக்கள் தங்கள் தங்கள் வீட்டுக் கட்டிடம் கட்ட எடுத்துப் போகிறார்கள் என்றும் கேள்வி. புதை பொருள் இலாக்காக்காரர்கள் கொஞ்சம் விழிப்போடிருந்து இதையெல்லாம் தடுக்க வேணும். வந்ததோ வந்தோம், ஆதலால் படி ஏறி—முடிய கதவிடுக்கு வழியாக வைகுண்டப் பெருமாளை வணங்கி விட்டு மேலே நடக்கலாம்.

இந்த உத்தரமேரூரில் பார்க்க வேண்டிய கோயில்கள் இன்னும் இரண்டு உண்டு. இங்கு அந்தக் காலத்தில் ஏழு கோயில்கள் இருந்ததாகச் சொல்கிறார்கள். இக் கோயில்களில் எல்லாம் பெரியதும் சிறப்புடையதும் **சுந்தர வரதராஜ சுவாமி** கோயில்தான். இது அந்த ஊரில் உள்ள பெரிய தெருவின் மேலக் கோடியில் விமானங்கள் கோபுரங்கள் எல்லாம் உடையதாயிருக்கிறது. இக்கோயில் மூன்று தளங்களோடு கூடிய கோயில். அடித்தளத்தில் இருப்பவர் **சுந்தரவரதராஜர்.** இவர் நின்ற கோலத்தில் சேவை சாதிப்பார். இவரைத் தவிர இந்த அடித்தளத்திலேயே அச்சுத வரதன், அநிருத்தவரதன், கல்யாணவரதன், ஆனந்தவல்லித் தாயார், ஆண்டாள் முதலிய எல்லோரையுமே தரிசிக்கலாம். அடுத்த தளத்தில் இருப்பவர் **வைகுண்ட வரதர்.** அவருடன் கிருஷ்ணார்ச்சுனர், யோக நரசிம்மர், லக்ஷ்மிவராகன் எல்லோருமே இருக்கிறார்கள். இவர்களையும் தரிசித்த பின் மூன்றாவது தளத்தில் ஏறலாம். அங்கு நல்ல வசதியாகக் காலை நீட்டிக் கொண்டிருப்பவர் **ரங்கநாதவரதர்.** இக் கோயில் இப்படி மூன்று தளங்களாகக் கட்டப்பட்டிருந்தாலும் அவைகளில் வீற்றிருக்கும் விக்கிரஹங்கள் நேருக்கு நேராக ஒன்றின்மேல் ஒன்றாக அமைக்கப்படவில்லை. இப்படி விமான அமைப்பும் மூர்த்திகளின் அமைப்பும் கொண்ட கோயில் தமிழ் நாட்டில் அதிகம் இல்லை. இந்த இடத்தில் உள்ள சுந்தரராஜவரதனை, பிரும்மா, சுக்ரன், பூதேவி, மார்க்கண்டேயர் எல்லாம் வழிபட்டு முக்தியடைந்தார்கள் என்பது தலபுராண வரலாறு. மார்க்கண்டனுக்கு அருள்புரிந்தவர்

சிவபெருமான் என்பதுதானே புராணப் பிரசித்தம். அப்படி இருந்தும், இந்த வரதனிடம் அவர் எங்கு வந்து சேர்ந்தார் என்று சந்தேகிப்போம் நாம். நம் சந்தேகத்தைத் தீர்த்து வைக்க, நம்மாழ்வாரே வருவார்.

புக்கடிமையினால் தன்னைக் கண்ட
மார்க்கண்டேயன் அவனை

நக்கபிரானும் அன்று உய்யக்கொண்டது
நாராயணன் அருளே

கொக்கலர் தடந்தாழை வேலி
திருக்குருகூர் அதனுள்

மிக்க ஆதிப்பிரான் நிற்க
மற்றைத் தெய்வம் விளம்புதிரே

என்பது தானே நம்மாழ்வார் விளக்கம்.

இந்த உத்தரமேரூர் முழுவதையும் இப்படியே வரதர்களும் வைகுண்ட வாஸர்களுமே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றில்லை. ஊருக்கு மேல் கோடியில் கொஞ்ச இடத்தைக் கைலாசநாதருக்கும், அவருடைய குமாரர் சுப்பிரமணியருக்கும் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். சுப்பிரமணியர் கோயில் சமீபத்திலே எழுந்த கோயில். கோயிலையும் விமானத்தையும் பார்த்தாலே இது பல்லவர் காலத்திய கோயில் என்று தெரிவோம். அங்குள்ள கல்வெட்டுகளும் அதனையே கூறுகின்றன. நடுவிலே பிரதானமான கோயில். அதைச் சுற்றிச் சின்னஞ்சிறு கோயில்கள் எழுந்திருக்கின்றன. இக்கயிலாசநாதர் கோயிலைத் தவிர, கேதாரீசுவரருக்கும் ஒரு கோயில் உண்டு. அக் கோயில் சுவரில் உள்ள கல்வெட்டுகள் பழமையானவை. ஆனால் இன்று அதனைப் புதுப்பித்துக் கட்டியிருக்கின்றனர்.

சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டினால் ஒரு கோட்டை இருந்ததாகவும், அதில் யமுனைக் கரையிலிருந்து வந்த விராடராஜன் வசித்ததாகவும் சொல்வார்கள். இக் கோட்டையையே பின்னர் ராஜேந்திர சோழன் கைப்பற்றிக் கொண்டு, இந்த ஊருக்கே ராஜேந்திர சோழ சதுர்வேதிமங்கலம் என்று பெயரிட்டிருக்கிறான். அவனே இங்கு வேதம் ஓதுவதற்கும் ஓதுவித்தலுக்கும் நிபந்தங்கள் ஏற்படுத்தி நிலங்களைத் தானம் வழங்கியிருக்கிறான். இவ்வூருக்கு அழகு தருவது ஊரின் மேற்கேயுள்ள ஏரி, மிகவும் பெரிய ஏரி அது. லோகமகா தேவி குளம் என்று கணக்குகள் கூறும். எந்த லோகமகாதேவி என்று தெரியவில்லை. சோழ மன்னரின் மனைவியரில் எத்தனையோ லோகமகாதேவிகள். அவர்களில் யார் பெயரால் இந்தக் குளம் வெட்டப்பட்டது என்பதை எல்லாம் ஆராய்ச்சியாளர்களுக்கே விட்டு விடலாம் நாம். சுந்தரவரதனையும் கைலாசநாதரையும் வணங்கிய திருப்தியோடு ஊர் திரும்பலாம். குடவோலைக் கல்வெட்டைத் தாங்கியும் கவனிப்பாரற்றுக் கிடக்கும் வைகுண்டப் பெருமானுக்காக ஒரு சொட்டுக் கண்ணீரும் வடிக்கலாம்.



அத்தியாயம் 25

உணர்ச்சியும் கிளர்ச்சியும்

வெகு தீவிரமான யோசனைக்குப் பிறகு, பாபு ஒரு நிச்சயமான முடிவுக்கு வந்து விட்டான். அந்த முடிவுதான் எப்படிப் பார்த்தாலும் சிறந்ததாக அவனுக்குத் தோன்றியது. அவனுக்குத் தெரிந்தவரையில் அதைத் தவிர வேறு வழியிருப்பதாகப் படவில்லை. உள்ளத்தைக் கல்லாக்கிக் கொள்ள வேண்டியதுதான்; உஷாவிடம் அதைச் சொல்லிவிட வேண்டியதுதான்.

அது எத்தனை வேதனை தரும் காரியம் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் நிலைமையை இப்படியே விட்டுக் கொண்டிருப்பது மேலும் அந்த வேதனையை அதிகமாக்கும் என்று சந்தேகமறத் தோன்றியது. உஷாவின் நன்மையை முன்னிட்டு இதைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். அப்படிப் பொறுத்துக் கொண்டால்தான் ஆறுதல். அப்போதுதான் மனத்தில் ஒரு நிம்மதியும் உண்டாகும்.

எத்தனையோ முறை, எத்தனையோ விதமாக இதற்கு ஒத்திகை யெல்லாம் நடத்திப் பார்த்துக் கொண்டான். எப்படிப் பார்த்தாலும் அந்த முடிவுக்கு வருவதற்கான தைரியம் உண்டானால் தானே? விருப்பம் என்று இருந்தால் தானே? அவன் முகத்தைப் பார்த்து அந்த வார்த்தையை எப்படிக் கூசாமல் சொல்வது? சொன்னால் என்ன நடக்கும்? அந்த அழகிய வதனம் எப்படி மாறும்? அந்த நெஞ்சு என்ன நினைக்கும்? கண்கள் எவ்வாறு பார்க்கும்? – இதையெல்லாம் எண்ணிப் பார்க்கவே அவனுக்குத் தெம்பு இல்லை; கற்பனையும் ஓடவில்லை.

ஆனால் அவசியம் என்பது அவனுக்கு ஒரு துணிவைக் கொடுத்தது. கோழைத்தனமாக இருப்பது சுயநலம் என்று தோன்றியது.

வழக்கத்துக்கு அதிகமாகவே உஷா அன்று அழகு பூத்து விளங்கினாள். மலர் முகத்திலே மோகனமான முறுவல் விளையாடியது. கண்களிலே உல்லாசமும் உற்சாகமும் பொங்கி வழிந்து கொண்டிருந்தன. பேச்சும் குரலும் இனிமை சொட்ட இனித்தன. பாபு இதைக் கண்டு மீண்டும் அதைரியம் அடைந்தான்.

"உஷா!"

உஷா அவன் முகத்தை ஆவலோடு திரும்பிப் பார்த்தாள். அழைத்த குரல் அடுத்த வார்த்தையை அப்படியே விழுங்கி விட்டது.

"என்ன பாபு! என்ன என் முகத்தில்? ஏன் இப்படிப் பார்க்கிறாய்?"

"ஒன்றுமில்லை...ஊஹும்; ஒன்றுமில்லை. சும்மாத்தான்!" பாபு தீவிரமாகப் படிப்பதில் முனைந்தான். உஷா அந்தத் தோட்டத்துப் பெண் ஒருத்திக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"பாக்கியம்! நேற்று நடந்ததைப் படித்தாயோ?"

"உம்; படிச்சேனே!"

"நேற்று சொன்ன கதை?"

"தெரியுமே!"

"எங்கே, சீதை யார் என்று சொல்லேன், பார்ப்போம்!"

பாக்கியம் விழித்தாள். சீதை யார் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் வாயை விட்டுச் சொல்லத்தான் அவளுக்குத் தெரியவில்லை.

"எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும். நாஞ் சொல்றேன், நாஞ் சொல்றேன்...உஸ்!" என்று மிளகாயைத் தின்றவன்போல் குதித்தான் பச்சையப்பன்.

"எங்கே, சொல்லுங்கள், பார்க்கலாம்!" என்றாள் உஷா.

"சரளாதேவி, சரளாதேவி! அதுதான் சீதையா சம்பூர்ண ராமாயணத்துலே வருது!" என்று பச்சை, அழுத்தந்

திருத்தமாக ஒரு நடிகையின் பெயரைப் பாய்ந்துகொண்டு சொன்னான்.

எல்லாரும் இதைக் கேட்டுச் சிரித்தார்கள். உஷாவும் சிரித்தாள். அவர்கள் சிரித்த காரணம் என்னவென்று பாபுவுக்குத் தெரியாது; அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கையில் புத்தகமும் கண்ணில் உஷாவுமாக அவன் உட்கார்ந்திருந்தான். அப்பொழுதுதான் உஷா அவனை மீண்டும் கவனித்தாள். பாபுவின் பார்வை தன்மீதே வெகு நேரமாக நிலைத்திருப்பதாக உணர்ந்த போது அவளுக்கு விவரம் தெரியாத கூச்சம் உடல் எங்கும் விரவிப் பாய்ந்தது. பாபுவின் போக்கு அவளுக்கு இன்று புதிராக இருந்தது. தன்னை ஒரு கணம் அவன் பார்வையில் படாமல் ஒளித்துக் கொண்டால் தேவலை போல் இருந்தது.

பாபு இப்போது புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்தான். உஷாவும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உஷா! உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்!"

'ஏன், தாராளமாகப் பேசலாமே!"

"இங்கே பேச முடியாது. தனியாகப் பேச வேண்டும்."

"அப்படி என்ன ஒருவருக்கும் தெரியக் கூடாத ரகசியத்தை நீ ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள் உஷா.

பாபுவின் உதடுகள் இலேசாகத் துடித்தன. அவனுடைய உடலே கண்ணுக்குத் தெரியாமல் நடுங்குவதுபோல் இருந்தது.

"இல்லை; ரகசியமோ, ரகசியமில்லையோ அதை இங்கே சொல்வதற்கில்லை. வெளியில் போய், தனியாகத்தான் நாம் பேச வேண்டும்" என்றான் பாபு.

அவனுடைய விருப்பத்தை அந்தக் கணத்தில் அவளால் மறுக்க முடியாதது போல் இருந்தது. அவனைத் தலை முதல் கால் வரையில் ஏற இறங்கப் பார்த்தாள் அவள். அவனுடைய களையான முகம் கன்றிச் சிவந்திருந்தது. பல இரவுகள் தூக்கமின்றி விழித்திருந்தவன் போல் கண்கள் இரண்டும் கலங்கிப் போயிருந்தன. தேக்கி வைத்திருந்த உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்த்துவிடத் துடிப்பவன்போல் அவன் நின்றான்.

அந்த நிமிஷத்துச் சூழ்நிலையில் அவனை மறுத்துப் பேசும் துணிவு அவளுக்குப் பிறக்கவில்லை. சிறிது தயங்கிவிட்டு, "சரி; வெளியில்தான் போய்ப் பேசுவோமே!" என்று முன்னால் நடந்தாள்.

கல்யாண முருங்கை மரம் நின்றிருந்த வேலியருகில் போய் நிற்பதற்குள் அவள் பலமுறை வெல்லப் பிள்ளையாரை



நினைத்து வேண்டிக் கொண்டாள். தன்னால் தாங்க முடியாத எதையும், விரும்பத்தகாத எதையும், விபரீதமானது எதையும் அவன் சொல்லாமலும் கேட்காமலும் இருக்க வேண்டுமே என்றுதான் அவள் வேண்டிக் கொள்ள விரும்பினாள். ஆனால் அத்தனை தெளிவாக, குறிப்பாக அவளால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அவளுடைய இளநெஞ்சு அப்படித் துடித்தது.

"உஷா!"

"என்ன?"


பாபு மறுபடியும் சொற்கள் புரளாமல் சும்மா நின்றான். அவளும் நின்றாள்.

"என்னிடம் உனக்கு நம்பிக்கையில்லையா?"

'எதற்கு?"

"எல்லாவற்றுக்கும்தான்!"

"இது என்ன பேச்சு, பாபு! இதைத்தானா தனியாக வந்து நீ கேட்க விரும்பினாய்?"



"இல்லை. நான் எதையுமே உன்னிடம் கேட்க விரும்பவில்லை. என்றைக்குமே அப்படி விரும்ப மாட்டேன். நான் உன்னிடம் ஒன்று சொல்லத்தான் விரும்பினேன். அதுவும் தனியாகச் சொல்ல வேண்டுமென்று விரும்பினேன். ஆனால்.."

அவனால் மேலே பேச முடியவில்லை. அவளும் கேட்கத் துணியவில்லை. வானத்திலே நிலவு இல்லை; அந்த இடத்திலே பாபு ஏழையாக இருக்கலாம்; அதிகம் படிக்காதவனாக இருக்கலாம். ஆனால் குணத்தில் அவன் ஏழையல்ல; பண்பிலே அவன் யாருக்கும் குறைந்தவனல்ல. தகாததைப் பேசமாட்டான்; செய்யவும் மாட்டான். எத்தனை இருளாக இருந்தாலும், தனியாக இருந்தாலும் அவன் கலங்கவோ, கவலைப்படவோ எந்த அவசியமும் இல்லை.

"உஷா!...."

"ம்..."

"உனக்குத் தெரியவில்லையா, உஷா?"

"எது?"

"நீ எல்லாவற்றிலும் உயர்ந்தவள்!"

"சரி, அப்புறம்?"

"நாங்கள் மிகவும் தாழ்ந்தவர்கள்!"

"அப்படியே இருக்கட்டும்; இப்பொழுது அதைப் பற்றி என்ன?"

"அதிலும் நான் எல்லாரையும் விடத் தாழ்ந்தவன்!"

"சரியாய்ப் போச்சு! இதையெல்லாம் பேசுவதானால் நான் போகிறேன்!"

"போகாதே, உஷா! ஒரே வார்த்தை: இதைக் கேட்டுவிட்டுப் போய்விடு!"

"சொல்லு, பின்னே!"

"உன்னுடைய நன்மையை முன்னிட்டுச் சொல்கிறேன். இனிமேல் நீ இந்தத் தோட்டத்துக்கு வரவேண்டாம், உஷா!"

"இவ்வளவுதானே?"

"அவ்வளவுதான்!"

உஷாவுக்கு இப்பொழுதுதான் நல்ல மூச்சு வந்தது. அவன் இதைச் சொல்வதற்குள் அவன்தான் எப்படிப் பயந்து



விட்டான்! இந்த அற்பமான விஷயத்தைச் சொல்வதற்கா இத்தனை தவிப்பு?

"உஷா!" என்று சட்டெனப் பாய்ந்து பாபு அவளுடைய கைகளைப் பிடித்து அவளை நிறுத்தினான். உஷா ஒரு கணம் திகைத்துப் போய் விட்டாள். அவள் நின்றபிறகுதான் பாபுவுக்குத் தன் தவறு தெரிந்தது. அவள் கைகளை விட்டுவிட்டுப் பின்னால் தள்ளி நின்றான்.

உஷா விடுவிடெனத் தன் வண்டியை நோக்கிச் சென்றாள். ஆனால் அவளுக்கு வண்டியில் ஏறிக் கொண்டதும் தெரியாது; வண்டி புறப்பட்டதும் தெரியாது. வெளியே சூழ்ந்திருந்த இருள் அவள் உள்ளத்திலும் அடையாக நிறைந்திருந்தது. அந்த அக இருளில் கண்ணே குருடாகி விடும் போல் இருந்தது. கலக்கலின் கனம் பொறுக்காமல் இதயமே நசுங்கி விட்டது மாதிரி தோன்றியது. பங்களாவுக்கு வந்து சேர்ந்த பிறகுதான் பாபு கூறிய வார்த்தைகளுக்குச் சரியான பொருள் புரிந்தது. இப்படிப்பட்ட அவமானம் விளைவிக்க வேண்டுமென்று அந்தப் பாபு எத்தனை நாட்களாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தான்!

'வெள்ளையன் தோட்டத்துக்கு இனி வர வேண்டாமாம்! என்னுடைய நன்மையை முன்னிட்டு இதைப் பாபு சொல்கிறானாம்! நானாகவா தோட்டத்துக்கு வருகிறேன் என்று போனேன்? நான் வர வேண்டும் என்று அவர்கள் கெஞ்சிய காலம் போய், வரவேண்டாம் என்று என் முகத்துக்கு எதிரேயே சொல்கிற மானக்கேடான நிலைமை எனக்கு எப்படி வந்தது? யார் இதற்குப் பொறுப்பு?"

அடிபட்டபோது ஊமைக் காயமாக இருந்தது அப்புறம் உயிர்போக நோவது போல் இருந்தது. இருளில், தனிமையில் கூறியபோது அற்பமானதாகத் தோன்றியது ஒளியில் அவமானத்தைக் கொடுத்தது. முள்ளின் முனை மிகவும் நுண்ணியதுதான்; ஆனால் காலில் குத்தி முனை முறிந்து விட்டால் எப்படி உறுத்துகிறது? முள்ளை எடுத்து எறியும் வரையில் உறுத்தல் நிற்கப் போகிறதா?

உஷா அவன் தீண்டிய தன் கை விரல்களை ஒருமுறை அந்த வெளிச்சத்தில் பார்த்துக் கொண்டாள். அவற்றைத் தீண்டியபோது உண்டான உணர்ச்சி இன்னும் மாறியதாகத் தோன்றவில்லை. அவளுக்கே அது கேவலமாகத்தான் இருந்தது. அப்பாவும், அம்மாவும் எண்ணுவது போல், பொன்னியும் குப்பனும் பயந்தது போல் அவளுடைய மேன்மையான குணம் மாற்றுக் குறைந்து போய் விட்டதா? இல்லையானால் அப்போது அருவருப்போ, எரிச்சலோ ஏன் உண்டாகவில்லை? விரலை விரல் தீண்டிய இடத்தில் இத்தனை குறுகுறுப்பு ஏன்? இத்தலை இனிமைதான் எங்கிருந்து வந்தது?

"சீ! நாண் வெட்கம் இல்லாதவள்! தன் மதிப்புத் தெரியாதவள்! தூர்க்குணம் நிறைந்தவள்!" என்று தன்னையே நொந்து கொண்டாள். பிறகு எதையோ நினைத்துக்கொண்டு படுக்கையை விட்டு எழுந்தாள். பீங்கான் குழாயருகே போய்த் தண்ணீரைத் திறந்து, கை விரல்களை யெல்லாம் கழுவிக் கொண்டாள். ஆனால் இது என்ன ஆச்சரியம்! கையைத் தண்ணீரில் கழுவிவிட்டால் போதுமா? உள்ளத்தில் ஒட்டிய உணர்ச்சியை எவ்வாறு கழுவுவது? எதனுல் கழுவுவது?

பாபுவின்மீது அவளுக்குக் கோபம் தான் வந்தது. தன் உள்ளத்துக்குப் பிந்தனைக்கும் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணிவிட்ட அவனை எண்ணியவாறே அவள் கண்களை மூடிக் கொண்டாள். அந்தக் கோபம் அத்தனையும் வெறும்

பாசாங்கு, வேஷம், பொய் என்று உள்ளத்தின் ஒரு கோடியில் ஒரு குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அப்படியே தூக்கம் இமைகளைத் தழுவ அவள் உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

இனிய கதைப் பகுதியின் அடுத்த பாகத்தைப்போல், கனவில் தோன்றிய பாபு, "என்னை முன்னிட்டு இந்தத் தோட்டத்துக்கு வந்து உன் மதிப்பைக் குறைத்துக் கொள்வதை நான் விரும்பவில்லை. நீ இங்கே வரவேண்டும் என்பது என்ன? நீதான் என் இதயத்தில் எப்பொழுதும் நிறைந்திருக்கிறாயே? வேண்டுமானால் நான் வந்து பார்க்கிறேன்!" என்று மன்னிப்புக் கேட்காத குறையாகக் கூறினான். உஷாவின் மனம் பாகாய் உருகி விட்டது.

அதற்கு ஏற்றாற்போல் மறுநாள் மாலைப்போதில் பாபு வந்து நின்றதைக் கண்டதும் அவளுக்குச் சிரிப்பதா, சிடுசிடுத்துப் பேசியனுப்பி விடுவதா என்று தெரியவில்லை.

ஆனால், "நினைத்தேன்; இப்படித்தான் நடக்கும் என்று அப்போதே நினைத்தேன்!" என்று மட்டும் கூறினாள் உஷா.

"நேற்று நடந்தது, பேசியது எல்லாம் மறந்துவிடு, உஷா! இது என்னமோ ஒருநாளும் நடக்காது! முன்யோசனையில்லாமல் நான் ஏதோ பேசி விட்டேன். அதை மனத்தில் வைத்துக்கொண்டு நீ வருவதை நிறுத்திவிட்டால் என் படிப்பு அதற்குமேல் என்ன ஆவது?" என்றான்.

"உன் படிப்பை நீ பார்த்தால் என் மதிப்பு என்ன ஆவது?" என்று கடச்கடக் கேட்டாள் அவள்.

பாபு என்ன சொல்வதென்று தெரியாமல் சிறிது தயங்கினான். அவன் ஏதோ சொல்ல வருவதற்குள் பங்களாவின் நடை வாயிலில் கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. பாரிஸ்டர்தான் வருகிறாரோ என்று பாபு சற்று மறைவாக உள் பக்கம் வந்து நின்று கொண்டான். உஷா ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. வாசலில் வந்து நின்ற டாக்ஸியிலிருந்து இறங்கியவனை அவள் நன்றாகக் கவனித்தாள்.

கையில் விமானப் பையுடன் கண்ணபிரான்தான் இறங்கி வந்து கொண்டிருந்தான்.

"ஹலோ, உஷா! சௌக்கியமா?" என்று கேட்டு விட்டு அவன் அங்கே கதவுப் பக்கமாக நின்ற பாபுவைக் கவனித்தான். அவன் கண்கள் சட்டென மாறின. "சரி; பிறகு பார்க்கிறேன்!" என்று உஷாவைப் பார்த்துக் கூறியவாறு, அவன் மாடிப் படிகளில் ஏறிச்சென்றான்.

அவள் முகத்தில் உயிரோட்டமேயில்லை: 'இவன் எப்பொழுது வந்தான்? ஏன் வந்தான்?'

அத்தியாயம் 26

உயில் பிரதி

உஷாவுக்கு ஒரு புறம் வியப்பாகவும், மறுபுறம் வெறுப்பாகவும்தான் இருந்தது. கண்ணபிரான் இங்கேயே வந்து தங்கியிருந்ததாகத் தோன்றியது. அவன் முன்பு நடந்து கொண்ட விதத்துக்கும், இந்தத் தடவை நடந்து கொள்ளும் விதத்துக்கும் எத்தனையோ வித்தியாசம் இருந்ததை அவள் கண்டாள்.

'இவன் ஏன் தேன்கூட்டுக்குப் போகவில்லை? இங்கே எதற்காகத் தங்கியிருக்கிறான்?' என்று தனக்குள்ளாகவே பன்முறை கேட்டுக் கொண்டாள். அதற்குச் சரியான விடைதான் அவளுக்குக் கிடைக்கவில்லை.

அவன் வந்திருப்பது முத்தையாவுக்குத் தெரியாது என்பது பரமசிவத்தின் பேச்சிலிருந்து புரிந்தது. தெரிந்தால் அவர் வருத்தப்படுவார் என்று அவரும் சொர்ணம்மாளும் சொல்லிக் கொண்டார்கள். அப்படித் தெரியாமல் வருவானேன் என்பதற்கும் அவர்கள் ஒரு காரணத்தைச் சொன்னார்கள். உடலும் சித்தமும் சரியாக இல்லாத நிலையில் முத்தையா சென்னைக்கு வந்திருப்பதால் இயற்கையாகவே கண்ணபிரானுக்குக் கவலையாக இருக்காதா? அதை முன்னிட்டுத்தான் அவன் வந்திருப்பதாகத் தெரிந்தது. வந்தவன் உடனே ஊருக்குத் திரும்பிச் செல்லவும் வழியில்லை என்று அவள் அறிந்து கொண்டாள். முத்தையாவுக்குத் தெரியாமலே அவரைக் கண்காணித்துக் கவனித்துப் பார்த்து, இனிப் பயமில்லை என்று தெரியும் வரை அவனும் சென்னையில் இருக்க வேண்டியது அவசியம் என்று பரமசிவமும் சொர்ணம்பாளும் ஒப்புக்கொண்டார்கள்.

"அதுவரையில் இந்தத் தம்பி திரும்பிப் போக முடியாதுதான். போனால் மனம் கொள்ளாதுதான்!" என்றார் பரமசிவம்.

"அப்போதே நினைத்தேன். பெரியவர் முன்னைப்போல் இந்தத் தடவை இல்லைதான். தம்பி புத்திசாலித்தனமாக வந்ததுதான் சரி! கொஞ்சநாள் கவனித்துப்

பார்த்து விட்டுப் போவதுதான் நியாயம்!" என்று ஒத்துப் பாடினாள் சொர்ணம்பாள்.

இந்தக் காரணமெல்லாம் என்னவோ பொருத்தமாகத்தான் தோன்றியது. ஆயினும் கண்ணபிரான் வந்ததற்கும், தங்கியிருப்பதற்கும் வேறு காரணமும் இருக்கும் என்றுதான் உஷா நினைத்தாள். போன தடவைகளில் சென்னை வந்திருந்தபோது அவன் இருந்ததுபோல் இல்லை என்பதையும் அவள் கண்டாள்.

சொர்ணம்பாளை அவன் அத்தை முறை வைத்து அழைத்ததும் அவள் அவனைத் தம்பி முறை வைத்துக் கூப்பிட்டதும் அவனுக்குக் கேலிக் கூத்தாக இருந்தது. தான் சொல்வது போதாதென்று, சின்னப் பெண் சுந்தரியையும், "அத்தானைப் போய்க் கேள்! அத்தானுக்குக் கொண்டு போய்க் கொடு! அத்தானைக் கூப்பிடு! அத்தானோடு துணையாகப் போய்விட்டு வா!" என்று ஏவிக்கொண்டேயிருந்தாள் சொர்ணம்.

கண்ணபிரான் மிகுந்த புத்திசாலிதான்! சொர்ணம்பாளுக்கும் சுந்தரியிடம் அத்தனை பாசம் என்பதைக் கண்டு கொண்டு விட்டான். சொர்ணம்பாளின் விருப்பு வெறுப்புக்களையெல்லாம் எழுதிப் படித்தவன் போல் தெரிந்துகொண்டு விட்டான். தான் வந்திருக்கும் முக்கியமான காரியத்துக்குச் சொர்ணம்பாள் எவ்வளவு இன்றியமையாதவள் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது. அவள் தயவு எத்தனை அவசியம் என்பதை அவன் எடை போட்டு விட்டான்.

உஷா மட்டும் சோடை போனவளா? கண்ணபிரானுடைய போக்கை அவள் நுட்பமாக எட்ட இருந்தவாறே கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.

"அத்தை! இந்த நெக்லேஸைப் பாருங்கள்! என்னவோ டவுன் பக்கம் போனேன். வெறும் கையுடன் திரும்புவதா என்று ஏதோ ஒரு கடைக்குள் நுழைந்தேன். சுந்தரியின் கழுத்துக்கு இது எப்படியிருக்கும் தெரியுமா? உங்கள் கழுத்துக்கு இது அதைவிடக் கூடப் பொருத்தமாக இருக்கும் என்று சொல்வேன்!" என்று வைரக் கற்கள் பதித்த மாலை ஒன்றை நீட்டினான் கண்ணபிரான்.

சொர்ணம்பாள் முகம் மலர்ந்து போயிற்று. அவளுக்கு வைரமாலை பிடித்திருந்ததோ, என்னவோ? சுந்தரியின் கழுத்துக்கும் தன்னுடைய கழுத்துக்கும் இது பொருத்தமாக இருக்கும் என்று அவன் சொன்னது என்னவோ மிகவும் பிடித்து விட்டது.

"என்ன தம்பி, இது? உனக்கு இதெல்லாம் தண்ணீர் பட்ட பாடுதான். இருந்தாலும் இதெல்லாம் எதற்கு, தம்பி?" என்று தன்னை மறந்து அந்த மாலையை வாங்கிக் கொண்டாள்.

"தம்பியின் காரியத்தைப் பார்த்தீர்களா? இப்படியெல்லாம் உங்களுக்கு வாங்கத் தெரியுமா? 'லேடஸ்ட் டிஸைன்'னைப் பார்த்து நம்ம சுந்தரிக்கு என்று வாங்கி வந்திருக்கிறது. பாருங்கள்!" என்று தன் கணவனிடம் போய்க் கூறி மெச்சிக் கொண்டாள்.

"இதெல்லாம் அந்தப் பெரியவர் குணம் தப்பாமல் தம்பிக்குப் படிந்திருக்கிறது. ஒன்றை எண்ணிக்கொண்டு ஒன்றைச் செய்வார் பெரியவர். நம் பங்களாவிலேயே தங்கியிருப்பதற்காக இதெல்லாம். பெரியவர் எதையும் சொல்லாமல்தான் செய்வார். அந்தக் குணம் எங்கே போகும்?" என்று உண்மையைக் கண்டவர் போல் கூறிப் பெருமைப் பட்டுக் கொண்டார் பரமசிவம்.

"உஷாவுக்கு இதைப்போல் எத்தனையோ? அதனால் சுந்தரிக்குத்தான் ஒன்று இருக்கட்டுமே என்று தம்பி இதை வாங்கியிருக்கும்" என்று கூடவே சேர்த்துக்கொண்டு சொன்னார் அவர்.

சொர்ணம்பாளின் முகம் சுண்டி விட்டது. இருந்தாலும் இந்த மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்வானேன் என்று பேசாமல் இருந்து விட்டாள்.

"அந்தத்துமே உயிலைப் பற்றிப் பெரியவர் ஏதோ பேச்சு எடுத்தாரே, என்னவாயிற்று?" என்றாள் சொர்ணம்பாள்.

"நான் எழுதிக் கூட வைத்து விட்டேன். அவர் கேட்க வேண்டியதுதான்; கொடுத்து விடுவேன்!" என்றார் பாரிஸ்டர்.

"தம்பிக்கு அதைப் பற்றி உங்களைக் கேட்கக் கூச்சம் போல் இருக்கிறது. என்னை வந்து நேற்று கேட்டது. நான் இதையெல்லாம் என்ன கண்டேன்? உங்களைக் கேட்டுச் சொல்வதாகச் சொல்லியிருக்கிறேன்!"


"நீ சொல்வது என்ன? நான் எழுதி வைத்திருக்கிற 'டிராப்'டையே தம்பியிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொல்லேன்!" என்று டிராயரைத் திறந்து, ஒரு நகல் பிரதியை எடுத்துப் போட்டார் பரமசிவம்.

கண்ணபிரான் இவ்வளவையும் அடுத்த அறையிலிருந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தான். அவன் முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியை ஒருவரும் கவனிக்கவேயில்லை. சொர்ணம்பாளுக்கு வேண்டுமானால் அது வெறும் உயில் பிரதியாக இருக்கலாம். ஆனால் அவனுக்கு அது உயிர்ப் பிரதியாயிற்றே! **(தொடரும்)**

குளிர் காலத்தில் தொண்டை பாதிக்கப் படுவது சகஜமே...


பனியினால் பாதிக்கப்படுவதால் தொண்டைப் புண் ஏற்படுகிறது. அது விழுங்கும்போது வலியையும், ஒரு வகை வறட்சியையும் உண்டாக்குகிறது.

வாக்ஸ் பாஸ்டில் உங்களுடைய தொண்டையை இதமாக இருக்கச் செய்வதோடு தொண்டைப் புண் பரவாமலும் தடுக்கிறது.



வாக்ஸ்
பாஸ்டில்கள்

கைவசம் ஒரு டின்
எப்போதும்
இருப்பது நலம்.



பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்


கண்கள் உறங்காவோ?

அத்தியாயம் 8

கனவும் நனவும்

சுந்தரம் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். கடைசியாக, ஒருவழியாய் வினுவை வெற்றிகொண்டு விட்டோம் என்ற நிம்மதிதான் அவனுடைய அந்த அயர்ந்த உறக்கத்துக்குக் காரணம். ஆனால் கண்களை மூடி, நினைவு மரத்து, உறக்கம் அவனை ஆட்கொண்டதோ இல்லையோ, கனவு ஒன்று அவன் மனத்தை விழித்துக் கொள்ளச் செய்தது. நியாயமாக, நிம்மதியுடன் உறக்கத்தில் ஆழ்ந்த அவனிடம் எழுந்த அந்தக் கனவு இன்பக் கனவாகத்தான் இருந்திருக்க வேண்டும்; ஆனால் ஏனோ தெரியாது, அது ஒரு துன்பக் கனவாக, பயங்கரக் கனவாக விரிந்தது.

அவனும் வினுவும் பதிவுத் திருமணம் செய்து கொண்டு இன்பமாக வாழ்கிறார்கள். சில மாதங்களுக்குப் பிறகு மாலாவுக்கும் சுந்தரத்தைவிட அழகானவனும், படிப்பும் பதவியும் உள்ளவனுமான ஓர் இளைஞனுடன் திருமணம் நடக்கிறது. பின்னர் அவனும் வினுவும், விதவா விவாகப் பிரசார வேலையை மேற்கொண்டு தமிழ்நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். அவர்களுடைய பிரசாரம் மகத்தான பலனை அளிக்கிறது. இதுவரையில் வாய்மூடிகளாகச் சமூகத்தின் இன்னல்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்த விதவைகள் வீறு கொண்டு எழுகின்றனர். தங்களுக்குக் குறுக்கே நின்ற தடைகளைத் தகர்த்துக் கொண்டு, மறுமண முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு, ஆண்களின் கோழைத் தனத்தைப் போக்கித் தங்களுக்குப்





பிடித்தவரை மணந்துகொண்டு இனிய வாழ்வு வாழ்கின்றனர்.

பிரசாரப் பணியில் கிட்டிய வெற்றிப் பெருமிதத்துடன் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவனும் வினாவும் கேசவபுரத்துக்குத் திரும்புகின்றனர். வினாவின் வீட்டில் நுழைந்ததும் அங்கு கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிடச் செய்கிறது. மாலா கணவனை இழந்து கைம்பெண்ணாக அங்கே ஒரு மூலையில் அமர்ந்திருந்தான். "வினா! நம் வேலை இன்னும் முற்றுப் பெற்று விடவில்லை. இதோ மற்றொரு மங்கைக்குச் சமூகம் விதவைக் கோலம் பூட்டி உட்கார்த்தி யிருக்கிறது. மாலாவுக்கு மறுமணம் செய்து வைத்தாலன்றி நம் பணி நிறைவெய்தியதாகக் கருத முடியாது" என்கிறான் சுந்தரம்.

சில நாட்களுக்குப் பிறகு அவனும் வினாவும் இது பற்றி மாலாவிடம் பேசுகின்றனர். "மாலா! இழந்த வாழ்வை நீ மீண்டும் பெறவேண்டும்" என்கிறான் வினா. "நான் வாழ்வை இழந்து விட்டேனா! யார் சொல்வது? நான் வாழ்வைப் பெறவே இல்லையே, அக்கா!" என்று மாலா பதில் அளித்ததைக் கண்டு அவர்கள் இருவரும் திகைக்கின்றனர். "நீ என்ன சொல்கிறாய், மாலா?" என்று சுந்தரம் கேட்கிறான். "புதிதாக ஒன்றும் இல்லை; என் உள்ளத்தில் உங்கள் ஒருவருக்குத் தான் இடம் அளிக்க முடிந்தது. அங்கிருந்து விதிவசத்தால் நீங்கள் அகன்று விட்ட போதிலும், வேறொருவரை அங்கே அமரச் செய்ய என்னால் முடியவில்லை. என்னைக் கைப்பிடித்த துர்ப்பாக்கியசாலி ஒருநாள் கூட என் உடலைத் தீண்ட முடியாமல், அதே ஏக்கத்தினால் உயிர் நீத்தார். எனக்கு வாழ்வளிக்க முடியாதவர் அந்த முயற்சியில் தோல்வி யடைந்தாரென்றால், நான் வாழ்வைப் பெற்று இழந்து விட்டவளாகி விடுவேனா?"

"இப்படி யெல்லாம் மனம் முறிந்து பேசாதே, மாலா! நடந்துவிட்டதைப்பற்றிப் புலம்பி என்ன பயன்? நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசவே நாங்கள் உன்னிடம் வந்திருக்கிறோம்" என்கிறான் வினா.

''அப்படியா?'' என்று விரக்தியாக முறுவலிக்கிறாள் மாலா. ''சொல் அக்கா! இப்பொழுது என்ன நடக்க வேண்டும்?''

''நீ மறுமணம் செய்து கொள்ள வேண்டும்.''

''மறுமணம் என்று மீண்டும் சொல்லாதே; மணம் என்று சொல். முன்பு எனக்கு நடந்தது கலியாணமன்று; கருமாதிதான்!''

''சரி! மணம், புதுமணம் என்றே வைத்துக் கொள்ளேன்; என் சொல்படி கேட்டு மறுமணம் செய்து கொள்வாயா?''

''கண்டிப்பாகச் செய்து கொள்ளத்தான்வேண்டும் என்று நீ வற்புறுத்தினால் செய்து கொள்ளுகிறேன். ஆனால் அது உன்வரையில் மிகக் கடினமானதாக இருக்குமே!''

''ஏன் மாலா?''

''அதற்கு நான் மட்டும் மனம் வைத்தால் போதாது; நீயும் மனம் வைக்க வேண்டும்; தியாகங்கள் பல செய்ய வேண்டி யிருக்கும்.''

''உன் மணத்துக்காக நான் எந்த விதமான தியாகமும் செய்யத் தயார்.''

''நிச்சயமாக?''

''நிச்சயமாக.''

''பிறகு பின்வாங்க மாட்டாயே?''

''மாட்டேன்.''

''அப்படியானால், எனக்குரியவரை எனக்குத் திருப்பித் தா!''

''மாலா!'' என்று அவனும் வீணையும் ஒருமிக்கக் கத்துகின்றனர். மாலா ஏளனமாக நகைக்கிறாள். ''பார்த்தாயா? வேண்டியதைச் சொன்னவுடன் அலறுகிறாயே! இந்த மாதிரித்தான் அன்று உனக்கு நன்மை செய்யப்போய், அவரை நீ என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்ட போது எனக்கும் இருந்திருக்கும். அன்று அவரிடம் பேசியது போலவே பேசுகிறேன்; அவரிடம் கேட்ட கேள்வியையே உன்னிடம் கேட்கிறேன்; ஒரு விதவைப் பெண் 'உன் கணவனை எனக்குத் தா, மணந்து கொள்ளுகிறேன்' என்று சொன்னால் கொடுத்து விடுவாயா? எடுத்த காரியத்துக்காகச் சுயநலத்தையும் தியாகம் செய்வதுதான் தொண்டு; அதுதான் விதவைச் சமுதாயத்துக்கு நீ செய்ய வேண்டிய உண்மையான பணி.''

''நிறுத்து!'' என்று கத்துகிறாள் வீணை. அவள் முகத்தில் நிலவிய தீவிரத்தைக் கண்ட அவன், அடுத்து அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதை ஊகித்து விட்டவனாய்ச் சட்டென்று அவள் வாயைப் பொத்தப் போகிறான். ஆனால் அதற்குள் அவள் அதைச் சொல்லியே விடுகிறாள்: ''தந்தேன், மாலா! இன்றே எடுத்துக்கொள் ! இப்பொழுதே அவரை மணந்துகொள்!''

மாலாவை இணங்க வைத்துவிட்ட பெருமை மலர வீடு திரும்புகிறாள் வீணை. ஆனால் தான் ஒருவன் இருப்பதை வீட்டுக்கு வந்ததும் நினைவூட்டுகிறான் அவன். ''நான் கடைச் சாமானா? யாரோ ஒருத்தி கேட்டதும் கொடுத்தேன் என்று சொல்லிவிட்டு இங்கே வந்து வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடுகிறாயே?''

''லட்சியத்தை மனத்தில் வைத்துக் கொண்டு மண வாழ்வில் இணைந்தோம். நம் லட்சியம் நிறைவேறுவதற்காக அன்று நீங்கள் மாலாவை உதறியதைக் கூட நான் பொறுத்துக் கொண்டேன். இப்பொழுது அதே மாலா வாழ்விழந்து நிற்கிறாள். மறுமணம் செய்து கொள்ளுவதானால் உங்களைத்தான் செய்து கொள்ளுவேன் என்று சொல்லுகிறாள். தவிர, அவளுக்கு மறுமணம் செய்து வைக்க வேண்டியதும் நமது லட்சியத்தில் சேர்ந்ததுதானே?'' என்றெல்லாம் கூறி வீணை அவனைக் கரைக்கிறாள்.



ஆனால் அவனுக்கு அவளைத் துறந்து விட்டு மாலாவுடன் வாழ்வில் ஈடுபட விருப்பம் இல்லை. அதேசமயம் வீணையின் வாதத்துக்குச் சரியான பதில் கொடுத்து அதை நிராகரிக்கவும் முடியவில்லை. என்ன செய்யலாமென்று ஆலோசித்த பொழுது சட்டென்று அவனுக்கு ஒரு வழி புலப்படுகிறது. ''நீ சொல்வதெல்லாம் சரிதான், வீணை! ஆனால் நாம் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்களாயிற்றே! தாரம் இருக்கத் தாரம் கொள்வது சட்ட விரோதமில்லையா?''

''என்னை விவாகரத்து செய்து விடுங்கள்; அல்லது நான் உங்களை விவாகரத்துச் செய்து விடுகிறேன்.''

''விவாகரத்து அவ்வளவு சுலபமான விஷயமில்லை, வீணை! தக்க காரணமின்றி எந்த விவாகரத்தையும் கோர்ட் அனுமதிக்காது. மற்றொரு விதவை மணந்து கொள்ளுவதற்காக என் கணவனை நான் விவாகரத்துச் செய்கிறேன் என்று சொல்வதைச் சட்டம் அனுமதிக்காது.''

''அப்படியானால்....?'' வீணாவின் முகம் ஏமாற்றத்தால் தொங்குகிறது.

''வேறு வழியில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் இரவில் இதே மாலாவை மணந்து கொள்ளுமாறு என்னைத் தூண்டி, தோல்வியுடன் திரும்பினாயே, அதேபோல் இப்பொழுதும் நீ தோற்று விட்டாய்!''

''ஆமாம், நான் தோற்று விட்டேன்!'' என்று அன்று கூறியதுபோலவே கூறிக் கொண்டு வீணா தன் அறைக்குச் சென்று விடுகிறாள்.

சிறிது நேரத்துக்குப் பின் அவன் அவளுடைய அறைக்குப் போகிறான். வீணா ஒரு சிறிய சீசாவிலிருந்து எதையோ தன் வாயில் ஊற்றிக் கொண்டிருக்கிறாள். ''ஓ! பழைய வைத்தியத் தொழிலை மீண்டும் தொடங்குமுன் டாக்டர் தானே மருந்து சாப்பிடும்படி ஆகிவிட்டதா! உனக்கு என்ன வீணா? என்ன மருந்து அது?'' என்று வேடிக்கையாகக் கேட்டுக் கொண்டே அவளை நெருங்கி வருகிறான் அவன். ஆனால் அதற்குள் வீணா தொப்பென்று பிணமாகச் சாய்ந்து விடுகிறாள்!

அப்பொழுது நிஜமாகவே தொப்பென்ற சத்தம் ஒன்று கேட்டு விழித்துக் கொண்டான் சுந்தரம். படுக்கையிலிருந்து எழுந்து மங்கலாக எரிந்து கொண்டிருந்த ஹரிக்கேன் விளக்கைப் பெரிதாக்கிப் பார்த்தபோது, எதிரே இருந்த முற்றத்துக் கருவேப்பிலை மரத்தடியில் பூனை ஒன்றுதான் அவனைப் பரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டிருந்தது. கனவின் அதிர்ச்சிதான் அந்தத் தொப்பென்ற சத்தம் என்று எண்ணிய அவன், அத்தகைய துர்ச்சொப்பனத்தை மீண்டும் காணுதிருக்க ஒரு தம்ளர் தண்ணீர் சாப்பிடலாமென்று டீபாயிலிருந்த கண்ணாடித் தம்ளரைத் தூக்கினான். அதன் அடியிலிருந்த ஈரத்தில் ஒட்டிக் கொண்டு வந்த வீணாவின் கடிதம் அவன் மடியில் விழுந்தது. கடிதத்தின் மேலே வீணாவின் கையெழுத்தில் தன் பெயர் எழுதப் பட்டிருந்ததைக் கண்டதும், பரபரப்போடு அதைப் படித்தான்.

அன்புள்ள சுந்தர்,

என்னை வெற்றி கொண்டுவிட்ட களிப்புடன் நிம்மதியாகத் தூங்குகிறீர்கள். தூங்குங்கள் நன்றாக. ஆனால் நாளைக் காலையில் விழித்துக் கொண்டதும் உங்களை நான் வெற்றிகொண்டு விட்டதைக் காண்பீர்கள்.

'உயிருக்கு உயிரான உன்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், ஒரு விதவையின் பிணத்துக்காவது மாலையிடாமல் பிரிதொரு பெண்ணுக்கு வாழ்வில் இடமளிக்க மாட்டேன்' என்று கூறினீர்களே; மாலாவுக்கு உங்களை மாலையிடச் செய்ய, விதவையாகிய நான் பிணமாகத் தீர்மானித்து விட்டேன்.

முன்பு ஒருநாள் என்னை மறுமண முயற்சியில் கனிய வைக்கச் சில வார்த்தைகள் கூறினீர்கள். அவை இப்பொழுது எனக்கு அருமருந்தாக உதவின. அன்று நீங்கள்சொன்னீர்கள்: ''உயிரைப் போக்கிக்கொள்ளத் துணிந்து விட்டால் அதை நேரும் கூறுமாகப் போக்கிக் கொள்ளலாமே. இந்த ஆஸ்பத்திரியில், இத்தனை அலமாரிகளில் இருக்கும் மருந்துகளில் ஒன்றுகூடவா ஒருத்தியின் உயிரைப் போக்கத் தக்க கொடிய விஷத் தன்மை வாய்ந்ததாக இராது?'' என்று. அந்த மருந்துகளில் ஒன்றுதான்......

கடிதத்தை அப்படியே கசக்கிக் கொண்டு, ''ஐயோ வீணா!'' என்று கத்தியவாறு முன்னறைக்குப் பாய்ந்தான் சுந்தரம்.

ஒரு விநாடி, அவ்வளவு ஏன், இமைக்கும் நேரம் பிந்தியிருந்தாற்கூட, வீணா எவராலும் உயிர் மீட்க முடியாத நிலையை எட்டியிருப்பாள். ஆனால் விதி நல்ல வேளையாகச் சுந்தரத்தைச் சரியான சமயத்தில் அங்கே கொண்டு விட்டு விட்டது. வீணா ஸைனேடு சீசாவை வாயில் கவிழ்த்துக் கொள்ளப் போன போது அவன் மின்னல்போல் பாய்ந்து அதைப் பிடுங்கிக் கீழே கிடந்த மூடியை எடுத்து மூடித் தன் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு விட்டான்.

''கொடுங்கள்; அதைக் கொடுத்து விடுங்கள்'' என்று கெஞ்சினாள் வீணா.

அவன் கையைப் பிடித்து இழுத்துத் தாழ்வாரத்தில் தன் கட்டிலருகே நிறுத்திவிட்டு, ''என் கனவை நினைவாக்கி விடப் பார்த்தாயே, வீணா!'' என்றான்.

வீணா சிறிது நேரம் ஒன்றும் சொல்லாமல் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள். பிறகு, ''என் கடிதத்தைப் பார்த்தீர்களா?'' என்றாள்.

அறைக்குள்ளே நுழைந்து வீணா எதையோ குடிக்க முயலுவதைக் கண்டதும் அவன், கையில் கசக்கியபடி இருந்த அவளுடைய கடிதத்தைச் சட்டைப் பைக்குள் திணித்துக்கொண்டு அவளிடம் பாய்ந்தான். இப்பொழுது வீணா நினைவூட்டவே, அந்தக் கடிதத்தையும் சீசாவையும் பையிலிருந்து எடுத்து, ஸைனேடு சீசாவை டீபாயின்மீது வைத்து விட்டுக் கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தான்.

வீணா அவனை நோக்கி ஏளனமாக நகைத்தாள். ''கடிதத்தின்மீது கோபத்தைக் காட்டாதீர்கள். நீங்கள் கோபம்

இருமல் தொல்லையா !

ஸெப்ரால்
சாப்பிடுங்கள்
அது உடனடியாக
நிவாரணம்
அளிக்கிறது





'ZEPHROL'


trade mark brand

ஸெப்ரால் காப் ஸிரப்

M&B

தயாரிப்பாளர்கள் மே ஆண்ட் பேக்கர் லிமிடெட்
விநியோகஸ்தர்கள்
மே ஆண்ட் பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்
பம்பாய் . கல்கத்தா . கௌஹாத்தி
மதராஸ் . புதுடில்லி


மிக அழகிய ...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மீச்சப்படுத்துங்கள்!


பிரகாசிக்க
உங்கள் பித்தளை, செம்பு
சாமான்களை தினசரி
பிராஸோ
வால் துலக்குங்கள்
BRASSO

கொள்ள வேண்டியது உங்களுடைய அசட்டுத்தனமான சபதத்தின் மீது!''

"ஆமாம், வீணா! அது இத்தனை விபரீதத்துக்கு இடமளிக்கக் கூடும் என்று நான் எண்ணவே இல்லை. நல்லவேளை...''

வீணா இடைமறித்தாள்: "நல்ல வேளை இன்னும் வந்துவிடவில்லை, சுந்தர், நீங்கள் மாலாவுக்கு மாலையிட்டு அவளுடன் மகிழ்ந்து வாழ்வதை நான் காணும்வரை அந்த நல்ல வேளை வந்து விட்டதாக இறுமாந்து விடாதீர்கள்.''

"ஐயோ வீணா! நாம் இதுவரை பட்ட பாடுகளும், அனுபவித்த இன்னல்களும் வீணாகத்தான் வேண்டுமா?''

"அவை வீணாக மாட்டா. நீங்கள் மாலாவை மணக்கா விட்டால்தான் அவை வீணாகும். அப்பொழுது நான் மீண்டும் உங்கள் ஆணையையும், உங்கள் சபதத்தையும் நினைவூட்டிக் கொண்டு மரணத்தைத் தேட வேண்டியிருக்கும். நீங்களும் உங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு என் பிணத்துக்கு மாலையிட்டுவிட்டு மாலாவை மணந்துகொள்ள வேண்டியிருக்கும். ஆனால் இப்பொழுதாவது உங்கள் சபதம் அபத்தமானது என்பதை உணர்ந்து மாலாவை மணந்துகொள்ளுவதாக வாக்களித்து என்னை உயிர் வாழ விட்டீர்களானால், நான் ஒருத்தியேனும் நாம் மேற்கொண்ட பணியைத் தொடர்ந்து செய்ய முடியும்.''

"என் மனத்தை யாரும் மாற்ற முடியாது என்றெல்லாம் சொல்லி, இறுதியில் மனம் மாறிவிட்டாயே, வீணா! என்னை நட்டாற்றில் கைவிட்டு, என் விருப்பு அனைத்தையும் மண் கவ்வும்படி செய்து விட்டாயே!''

வீணா கட்டிலில் அவன் அருகில் அமர்ந்து அவன் கரங்களைப் பற்றினாள். பிறகு சொன்னாள்: "இப்பொழுது நான் பற்றியிருப்பது விகாஸைப்போன்ற மற்றொரு சகோதரரின் கரம் என்று எண்ணிக்கொண்டு சொல்லுகிறேன், உங்களுடைய சொந்த விருப்பு-வெறுப்புக்களை மறந்து விட்டு, இன்றைய நிலையை ஆராய்ந்து பாருங்கள். எனக்காக மாலா உங்களிடம் வாதாடினாள். உங்களுக்கு விதவைகளின் அவல நிலையை எடுத்துக் காட்டியவளே அவள்தான். அவளிடம் கற்ற வித்தையை அவளிடமே காட்டுவதுதான் நேர்மையா? புரட்சிப் போராட்டத்தில் துணை செய்ய ஒருவர் தேவை என்றதும், சட்டென்று என் உள்ளத்தில் அந்த நினைவை எழுப்பிய உங்களைப் பற்றிக்கொண்டு விட்டேன். அதற்குமுன்னால் உங்களுடைய உள்ளம் வேறு எந்தப் பெண்ணிடமாவது ஈடுபட்டிருக்கக் கூடும் என்பவைகளை எண்ணிப் பாராமல் உங்களை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு விட்டேன். அந்த எண்ணத்துடன்தான், மாலா உங்களையே மணக்க விரும்புகிறாள் என்பதை அறிந்தபோது கூட, 'அவர் அழகர்; இளைஞர்; கவர்ச்சிகரமான குணங்களை உடையவர்; ஏராளமான சொத்தும், கண்ணியமான வேலை ஒன்றும் உடையவர். எல்லாப் பெண்களுந்தான் அவரை அடைய விரும்புவார்கள்; மாலா அந்த விருப்பம் கொண்டிருப்பதில் புதுமை ஒன்றும் இல்லை. மன்னனை மணக்க ஏழையுந்தான் ஆசைப்படுவாள். ஆனால் மன்னன் ஏழையை மணக்க விரும்புகிறானா என்பதல்லவா இங்கே கவனிக்க வேண்டிய விஷயம். சுந்தரத்துக்கு மாலாவின்மீது காதல் இருந்தால், அவர் ஏன் விதவையான என்மீது நாட்டம் கொள்ளுகிறார்? என்பொருட்டு மகத்தான இன்னல்களை ஏற்கத் துணிகிறார்?' என்று நான் எண்ணி விட்டேன். ஆனால் நீங்களும் அவளை உயிருக்கு உயிராக நேசித்தீர்கள் என்பதை அறிந்தபிறகு எனக்கு உதவ விரும்பிய அந்தப் பெண்ணுக்குத் துரோகம் செய்ய என் உள்ளம் எப்படித் துணியும்! தவிர....''

"போதும் வீணா, போதும்'' என்று அலுப்புடன் குறுக்கிட்டான் சுந்தரம். அவன் தோல்வியடைந்து விட்டான்; அவன் மாலாவை மணந்துதான் ஆக வேண்டும்; லட்சியங்களைக் குழி தோண்டிப் புதைத்துத்தான் ஆக வேண்டும்.

"அலுத்துக் கொள்ளாதீர்கள், இது உயிர்ப் பிரச்னை. நாம் மனப்பூர்வமான முடிவுக்கு வராவிட்டால்....''

"முடிவுக்குத்தான் வந்துவிட்டோமே, வீணா! இன்னும் எதற்காகப் பழங்குப்பைகளைக் கிளப்புகிறாய்? மாலாவை நானே மணந்து கொள்ளுகிறேன். போதுமா?''

"கசப்புடன் வாக்களிக்காதீர்கள். மனப்பூர்வமாக, நான் ஒருத்தி உங்கள் வாழ்வில் குறுக்கிட்டிரா விட்டால் எத்தனை ஆர்வத்துடன், எத்தனை காதலுடன் மணந்து கொள்ளுவீர்களோ அப்படியே மணந்து அவளை மனம் கோணாமல் வைத்துக் கொள்ளுவதாக எனக்கு வாக்குறுதி கொடுங்கள்.''

"கொடுத்தேன்; அவ்வாறே வாக்குறுதி கொடுத்தேன். திருப்திதானே?''

"என்னை வாழ விட்டதற்காக நன்றி செலுத்துகிறேன், சுந்தர்! என் மனம் நிம்மதி பெற்று விட்டது. அவ்வாறே இந்த ஏற்பாட்டால் உங்கள் உள்ளமும் நிம்மதி பெற வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொள்ளுகிறேன். நீங்கள் தூங்குங்கள், சுந்தர்; நிம்மதியாக, இது வரையில் நடந்தவை யெல்

லாம் ஒரு கெட்ட கனவென்று ஒதுக்கி விட்டுத் தூங்குங்கள்.''

வீணா எழுந்து தன் அறையை நோக்கி நடந்தாள். அவள் தலை மறையும் மட்டும் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு நீண்ட பெருமூச்சு விட்டவாறு படுக்கையில் படுத்துக் கொண்டான் சுந்தரம். இனி அவன் மனமும் நிம்மதி பெற்றுத்தான் ஆக வேண்டும். பிடிவாதத்தில் தோல்வியுற்றாலும், தனது மடத்தனமான சபதத்துக்கு வீணாவைப் போன்ற ஓர் இனிய பெண்ணைப் பலி கொடுக்காமல் தப்பினானே!


அடுத்த அரை மணியில் அவன் அயர்ந்து தூங்கி விட்டதிலிருந்தே அவனுடைய மனம் அப்போதைக்கு நிம்மதி பெற்று விட்டது என்பது தெளிவாயிற்று. அதே சமயம் வீணாவும் தனது அறையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். அந்த நிம்மதி அவர்கள் இருவரிடமும் நிச்சயமாகத் தொடர்ந்தே இருக்கும். ஆனால் அவர்களை நிம்மதியாக விட விதிக்குப் பிரியமில்லை.

சுந்தரம் நன்றாகத் தூங்கிவிட்ட பிறகு முற்றத்துக் கருவேப்பிலை மரத்தின் மறைவிலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டது. அவ் வுருவம் அடிமேல் அடி வைத்துச் சுந்தரத்தின் கட்டிலை நெருங்கி வந்தது. சுற்றுமுற்றும் நோக்கிக் கொண்டே தன் இடுப்பில் சொருகிக் கொண்டிருந்த கத்தி ஒன்றை உருவி எடுத்தது. ஆனால் சட்டென்று அதன் பார்வை டீபாயின் மீது வைக்கப்பட்டிருந்த ஸைனைடு சீசாவின் மீது விழுந்ததும், அந்த உருவம் சிறிது நேரம் ஏதோ ஆலோசனை செய்தது. பிறகு உருவிய கத்தியை இடுப்பில் சொருகிக் கொண்டு, ஸைனைடு சீசாவை எடுத்து, மூடியைத் திறந்து, அதன் அடக்கம் முழுவதையும், சுந்தரத்துக்குக் குடிப்பதற்காக வைத்திருந்த தண்ணீர் ஜாடியில் கொட்டியது. பின்னர் சீசாவைக் கருவேப்பிலை மரத்தடியில் வீசிவிட்டு, மீண்டும் அடி மேல் அடி வைத்து முற்றத்துக்கு வந்து, கருவேப்பிலை மரத்தின்மீது ஏறி, முற்றத்துச் சுவர் வழியாகக் கொல்லைப்புறம் நடந்து மறைந்து விட்டது.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அடுக்களையில் படுத்திருந்த சச்சிதானந்தம் விழித்துக் கொண்டார். அவருக்கு அன்றையச் சம்பவங்கள் ஏற்படுத்திய மன உளைச்சல் காரணமாகச் சிறிது ஜுர உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. இப்பொழுது தாகம் நாவை வறட்ட அவர் விழித்துக் கொண்டார். தமது கட்டில் அருகில் டீபாயில் வைக்கப்பட்டிருந்த மண் கூஜாவை எடுத்துக் கண்ணாடித் தம்ளரில் கவிழ்த்தார். சொட்டுத் தண்ணீர் என்றால் சொட்டுத் தண்ணீர் கூட இல்லை அதில்.

கண்ணாடித் தம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு மெதுவாகத் தாழ்வாரத்துக்குச் சென்றார். அங்கே சுந்தரத்தின் தண்ணீர் ஜாடியில் நீர் நிறைய இருந்தது. தமது தம்ளரில் அந்த நீரை நிரப்பிக்கொண்டு அடுக்களைக்குத் திரும்பி வந்து, கட்டிலில் அமர்ந்து கொண்டு, ஆவலுடன் அந்த நீரில் சிறிது பருகினார். அது ஏதோ ஒருவிதமான நாற்றம் வீசவே, மேலும் பருக முடியவில்லை. தணிவாக எரிந்து கொண்டிருந்த விளக்கைப் பிரகாசமாக்கி அந்த ஒளியில் தம்ளர் தண்ணீரை ஆராய்வதற்காகத் தூக்கினார்; சட்டென்று அவருக்கு என்னவோ செய்தது; நெஞ்சை அடைத்தது. ''வீணா!'' என்று கத்தியவாறு கீழே சாய்ந்து விட்டார். அவர் கையில் இருந்த கண்ணாடித் தம்ளர் கீழே விழுந்து உடைந்து, அதிலிருந்த நீர் அனைத்தும் கொட்டிப் போயிற்று.

சச்சிதானந்தத்தின் அலறல் யாரையும் எழுப்பவில்லை. எல்லாரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் கண்ணாடித் தம்ளர் கீழே விழுந்த ஓசை கேட்டு முற்றத்தில் அரைத் தூக்கத்தில் இருந்த அந்த வீட்டில் வளர்ந்து வந்த பூனை அடுக்களைக்கு ஓடி வந்தது. எலியை எதிர்பார்த்து வந்த அதன் கண்களில் கீழே ஏதோ சிந்தியிருப்பது படவே, ஓடிச் சென்று அதை நக்கியது. இரண்டு வாய்தான் நக்கியிருக்கும். பிறகு அங்கேயே சுருண்டு விழுந்து விட்டது. பிணமாகக் கிடந்த சச்சிதானந்தத்துக்கு ஒரு துணை கிடைத்து விட்டது! (தொடரும்)



கால்கேட்டின் மூலம் பற்கள் சொத்தையாவதைத் தடுப்பதோடு

நாள் முழுவதும்

வாய் துர்நாற்றத்தையும் அகற்றுங்கள்!



ஏனெனில், கால்கேட் பற்பசை சொத்தையையும் துர்நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒரேதேய்ப்பில் ஒழிக்கிறது!


உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட்டுக்குத் தான் உண்டு.

இதன் விசேஷமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சேர்ந்திருக்கும் ஆதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர்மூலம் அடையலாம்-ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

வெண்ணிற பற்களைப் பெறவும், வாயில் நறுமணம் கமழவும், உலகிலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG. 2007 TAM.

அவல வடிவம்


காலை வெய்யில் அகிலத்தை மெருகிட்டது. ஒரே மினுமினுப்பு! வையம் வண்ண ஓவியமாகத் தோன்றியது.

அந்த இன்பத் தோற்றத்தின் ஒரு பகுதியாகிய கந்தபுரத்து நியாயவிலைக் கடை மூடியே கிடந்தது! ஏழு மணிக்குள் அங்கே ஏழெட்டுப் பேர்கள் கூடி விட்டார்கள். ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு பை இருந்தது. அந்தப் பைகள் எல்லாம் நியாயமான விலையில் கிடைக்கும் ஒரு படி அரிசிக்காகத் தவம் இருந்தன.

குருசாமி ஓட்டமாக ஓடி வந்தான். அவன் கையிலும் ஒரு பை இருந்தது. அவனுடைய ஆள் காட்டி விரலை ஆதாரமாகக் கொண்டு அந்தப் பை 'விர்... விர்...' என்று வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது.

''ப்பூ! இன்னும் கடையே திறக்கலையா? தூங்குமூஞ்சிப் பயலுவ! நீங்கள்ளாம் வந்து ரொம்ப நேரம் ஆச்சுங்களா சாரு...?''

அவனுக்கு யாரும் பதில் சொல்லவில்லை. அவன் உதட்டைப்பிதுக்கிக் கொண்டு பையை மேலும் வேகமாகச் சுற்றினான். பிறகு ஏதோ ஒரு சினிமாப் பாட்டை முணுமுணுத்தான். அதைத்தொடர்ந்து 'விஸ்...விஸ்' என்று நாக்கை மடித்து 'விசில்' ஊதியவாறே கடைத் திண்ணையின் ஒரு மூலைக்குச் சென்று குந்துக்காலிட்டு உட்கார்ந்து கொண்டான்.



அவனுடைய முகத்தில் முத்து முத்தாக நான்கைந்து பருக்கள் காய்ந்திருந்தன. நெற்றி அகலமானது. கோரை மயிர் எப்போதும் அதில் சரிந்திருக்கும். முழங்கால் வரையில் சுருட்டிய கால் சட்டை; முழங்கைக்கு மேல் சுருட்டிய மேற் சட்டை! கழுத்தை ஒரு கைக்குட்டை சுற்றிக் கொண்டிருந்தது. அவனுக்குக் கிட்டத்தட்ட பதினான்கு அல்லது பதினைந்து வயதுதான் இருக்கும். ஆனால் 'வெடவெட' வென்று வளர்ந்திருந்தான்.

சிறிது நேரம்தான் அவன் திண்ணைமீது உட்கார்ந்திருந்தான். பிறகு 'திடும்' என்று குதித்து எழுந்து வந்தான்.

''இனிமே கூட்டம் அதிகமா யிருக்கும். இப்பவே 'க்யூ' வரிசையா நின்னாத்தான் ஆச்சு! இல்லாட்டி ஒரே கசமுசா ஆயிடும். வாங்க சாரு! எல்லாரும் 'க்யூ' வரிசையா நில்லுங்க!''

அவன் கூறியது சரியாகப் படவே அனைவரும் வரிசையாக வந்து நின்றார்கள். குருசாமி தான் முதலாவது ஆள்! பன்னிரண்டு அணாக்களுடன் தயாராக நின்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த நியாய விலைக் கடை தன் விற்பனையைத் துவங்கியது.

''போடுங்க சாரு, போடுங்க! இன்னிக்கு நம்ம கையாலேதான் போனியாவுது!'' என்று கூறியவாறே தன் பன்னிரண்டணாவுக்கு உரிய ஒரு படி அரிசியை வாங்கிக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடினான்.

''ஏம்பா! கூட்டமில்லையா? சீக்கிரமா வந்திட்டியே!'' என்றுகேட்டு, குருசாமியிடமிருந்து அரிசியை வாங்கி வைத்தார் வீட்டுக்காரர்.

''நான்தான் 'பஸ்டு'! கூட்டம் இருந்தால் மட்டும் என்னாங்க? அதெல்லாம் நான் வாங்கிப்பிடுவேன். மனசு வைச்சேன்னா இன்னிக்கே

பத்து 'ரவுண்டு'ன்னாலும் அடிப்பேன். அந்த 'நேக்' நமக்குத்தாங்க தெரியும்!''

அவர் சிரித்தார். ''பக்கத்து வீட்டுக்காரர் கூட அரிசி வாங்க வேணுமின்னு சொன்னாரு. போய்க் கேட்டுப் பாரு!'' என்று கூறிய வாறே குருசாமியிடம் இரண்டணாவைக் கொடுத்து விட்டு உள்ளே சென்றார். குருசாமி அடுத்த வீட்டுக்கு வேகமாக ஓடினான்.

அடுத்த வீட்டுக்காரருக்கும் அரிசி வேண்டி யிருக்கிறது. ஆனால் 'க்யூ' வரிசையில் கால் கடுக்க நிற்பதற்கான பொறுமையோ, அவ காசமோ அவருக்கு இல்லை. மற்றக் கடை களில் வாங்கலாம் என்றால் ஒரு படி அரிசிக்கு ஒரு ரூபாய்க்கும் அதிகமாகத் தரவேண்டும். குருசாமிக்கு இரண்டணா கூலி கொடுத்தால் நியாய விலை அரிசியே கிடைத்து விடுமே!



அவரிடமிருந்தும் அரிசிக்கான பணத்தை வாங்கிக் கொண்டு நியாயவிலைக் கடையை நோக்கிச் சிட்டுப் போல் பறந்து சென்றான் குருசாமி. 'அம்மாடியோவ்! அதுக்குள்ளேயே எம்மாங் கூட்டம் சேர்ந்திடுச்சு!'

அவன் கொஞ்சம் நிதானித்தான். 'க்யூ'வின் இடையில் நுழைவதற்கு வழி கிடைக்குமா என்று அவன் விழிகள் நோட்டமிட்டன. ஆனால் மனசு மிரண்டது. 'என்னாத்துக்குக் கண்ணு வம்பு? எவனாவது 'லபோ,

வே. கோவிந்தராஜன்

லபோ'ன்னு கத்துவான். அப்புறம் கலாட்டா ஆயிடும்!'' என்று தன்னையே சமாதானப் படுத்திக் கொண்டு வரிசையின் கடைசியில் போய் நின்றான். அவனுடைய கையும் காலும் நிலையற்று அசைந்து கொண்டிருந் தன. விரல் நுனியில் பை சுழன்றது. எண்ணங்களும் நிலையின்றி அலைந்தன.

'சிங்கின் டீ குடிச்சிட்டு வருவமா? இல் லாட்டி நம்ப வண்டி ஓடாதே!'

'வேண்டாண்டா, கண்ணு! 'க்யூ' அனுமார் வால் மாதிரி நீளுது. இந்த இடத்தை விட்டா ஆபத்தாயிக்கும்!'


''வீட்டிலே கிழச் சனி என்ன செய்யும்?... பசியோடே முடங்கிக் கிடக்கும்...''

கிழச் சனியாகிய தன் பாட்டியின் நினைவு வந்ததும் அவனுக்கு என்னவோ போல் இருந்தது. சீக்கிரமாகச் சென்றால் அவளுக்குத் தின்பதற்கு ஏதாவது வாங்கித் தரலாமே. ஆனால் 'க்யூ' நகர்ந்தால்தானே?

எப்படியோ ஒரு வழியாக இரண்டாவது முறையும் குருசாமி அரிசி வாங்கி விட்டான்.

அவன் மூன்றாம் முறையாகத் திரும்பி வந்த போது கூட்டம் பன்மடங்கு அதிக மாகி விட்டது. இந்தத் தடவையும் வாங்கி விட்டால் மேலும் ஆறணா ஆகிவிடும். ஆனால் எப்படி வாங்குவது? குறைந்தது ஒரு மணி நேரமாவது நிற்க வேண்டுமே! மெள்ள அவன் 'க்யூ' வரிசையை நெருங்கி னான். கொஞ்சம் அப்பாவியாகத் தோற்ற மளித்த ஓர் ஆளுக்கு முன் 'டபக்' கென்று நுழைந்து நின்று கொண்டு, ''சலாம் சாரு! கொஞ்சம் தயவு பண்ணுங்க. அர்ஜண்டாப் போவணும்'' என்றான். அந்த ஆளும் சிரித்துக் கொண்டே, பேசாமல் இருந்தான். ஆனால் வரிசையின் மறு பக்கத்தி லிருந்து இதைக் கவனித்து விட்ட போலீசுக் காரர், வேகமாக வந்து குருசாமியின் காதைப் பிடித்துக் கொண்டார்.

''போடா, கழுதை, ஓடிப் போ! போய் எல்லாருக்கும் கடைசியிலே நில்லு. முதுகு எலும்பை முறிச்சிப் பிடுவேன்...ஏய்யா,



எதுக்காக அவனுக்கு இடையிலே இடம் தந்தீங்க ?''

குருசாமி வரிசையின் கடைசியில் வளைந்து நின்றான். வெய்யில் இலேசாகச் சுட்டது. வரிசை வேகமாக நகர்ந்தது. அதைவிட வேகமாக வளர்ந்து கொண்டும் இருந்தது.

மூன்றும் முறையும் குருசாமி அரிசி வாங்கி விட்டான். ஆனால் அவன் பையைத் தூக்கிக் கொண்டு மூச்சுத் திணற ஓடவில்லை. மெதுவாக நடந்து சென்றான். மெதுவாகத் திரும்பி வந்தான். அவன் கையில் ஆறணா இருந்தது. உள்ளத்தில் மகிழ்ச்சியின் மிதப்பு; வெற்றியின் எக்களிப்பு !

'வெந்து 'டீ' குடிப்பமா, அல்லது 'நாஷ்டா' பண்ணுவமா ?'

குருசாமி தேநீருக்கும் சிற்றுண்டிக்கும் இடையில் சிறிது நேரம் ஊசலாடினான். உள்ளம் மேலும் தொடித்தது.

'ஒரு கட்டுப் பீடி வாங்கிக் கிட்டா என்ன ? பத்து நாளாச்சே !'

அவன் நெஞ்சைச் சொடுக்கி முறுக்கினான். 'சே ! இந்தப் புத்தியைச் செருப்பாலே அடிக்கணும். பாவம் ! பாட்டி பசியோட இருக்கும். நமக்கு இதெல்லாம் என்னாத்துக்கு? நேரே வூட்டுக்குப் போவோம்.'

அவன் எவ்வளவோ இழுத்துப் பிடித்துப் பார்த்தான். ஆனால் எண்ணங்கள் திமிறிக் கொண்டே ஓடின. பிள்ளையார் கோயிலுக்குப் பின்னால் 'பேந்தா' விளையாடி எத்தனை நாட்களாயின ! 'உய்'யென்று 'விசி'லடித்துவிட்டு ஆட ஆரம்பித்துவிட்டால் குண்டுகள் அவன் கையுடன் பேசுமே ! ஆறணா கொஞ்ச நேரத்தில் பன்னிரண்டணாவாகி, பிறகு ஒரு ரூபாயாகக் கூட ஆகிவிடுமே !

'சே ! திருப்பியும் எதுக்கு இந்தத் தறிதலைப் பொழைப்பு? இனிமேல் நமக்கு அது வேண்டவே வேண்டாம் !'

அவன் வீட்டுக்குப் புறப்பட்டான். ஆனால் நினைப்பு மீண்டும் எங்கேயோ ஓடியது. 'வேண்டாண்டா கண்ணு! இருக்கிற காசும் பூடுச்சின்னா அப்புறம் வவுத்துக்கு ஈரத் துணி தான். பாட்டிக்கு இட்டிலி வாங்கிக்கிட்டுப் பேசாம போயிடலாம்.'

ஆனால் பாட்டி அவனுக்கு அந்த வேலையையும் வைக்கவில்லை. அவனைத் தேடிக்கொண்டு அவள் அங்கேயே வந்து விட்டாள்.

'' வா! வா ! நீயே வந்துட்டியா ? இட்டிலி வடை ஏதாச்சும் திங்கிறியா ?''

பாட்டி அவனை ஏற இறங்கப் பார்த்தாள். '' எம்மாம் பணம் வெச்சிருக்கே ?''

'' சும்மாவா ! காலையிலே இருந்து மூணு ரவுண்டு அடிச்சிருக்கேன் ! ஆறணா !''

'' இன்னும் ஒனக்கு அந்தக் கோணல் புத்தி போவலியே! ஆறணாவுக்கும் அரைப்படி அரிசி வாங்கிறதை விட்டுப்பிட்டு, இட்டிலி வடையைத் தேடுறியே ! போடா ! ஓடுறு !''

குருசாமி ஓடினான். ஓட்டமாக ஓடினான். இரண்டு பேர்கள் 'பில்'லு எழுதினார்கள். இரண்டு பேர் அரிசியை அளந்தார்கள். எந்த வரிசையில் நின்றாலும், வேர்வை சொட்டச் சொட்ட மக்கள் இரண்டு வரிசைகளாக நின்று கொண்டிருந்தனர். குறைந்தது இன்னும் இரண்டு மணி நேரமாவது நிற்க வேண்டும்.

அவன் மலைத்தான். எவ்வளவு நேரம் வெயிலில் நிற்பது? ஆனால் வேறு வழி? காலையிலிருந்து யார் யாருக்கோ வாங்கிக் கொடுத்து விட்டு, இப்போது தனக்காக, தன் பாட்டிக்காக அரைப்படி அரிசி வாங்காமல் விடுவதா ? எப்படியாவது வாங்கியேதான் தீர வேண்டும்!

அவன் இரண்டு வரிசைகளையும் நன்றாகப் பார்வையிட்டான். எல்லாரும் ஒருவரோடொருவர் முட்டிக் கொண்டு நெருக்கமாக நின்று கொண்டிருந்தார்கள். எங்கேயும் நுழைய வழியில்லை. அதோடு போலீசுக்காரர் வேறு அங்குமிங்கும் வட்டமிட்டுக் கொண்டிருந்தார். அப்படியானால் வரிசையின் கடைசியில் நிற்க வேண்டியதுதானா ? தனக்காக இல்லாவிட்டாலும் தன் பாட்டிக்காகவாவது நின்றுதானே ஆக வேண்டும் !

அந்தப் பாட்டிதான் அவனுக்காக என்னென்ன செய்திருக்கிறாள் ! அவனை வளர்ப்பதற்காக எவ்வளவு சிரமப்பட்டிருப்பாள் ! அவன் குண்டு விளையாடுவதையும், சீட்டாடுவதையும் பொறுத்துக் கொண்டு அவன் காசு திருடுவதையும் மன்னித்துவிட்டு அவனுக்குச் சாப்பாடு போடுவாளே! கொஞ்ச நாட்களாக அவன் ஒழுங்காக இருப்பதில்தான் அவளுக்கு எவ்வளவு பெருமை ! தெரிந்தவர்களிடம் எல்லாம், 'பேரன் நல்ல பிள்ளையாகிவிட்டான்' என்று எவ்வளவு மகிழ்ச்சியோடு கூறுவாள்! ஒரு 'நல்ல பிள்ளை' வெய்யிலுக்காகப் பயந்து அரிசி வாங்காமல் இருக்கலாமா ?

குருசாமி 'விடு, விடு' என்று நடந்து சென்று வரிசையின் கடைசியில் நின்றான்.

தன் பிடரியில் யாரோ கை வைப்பதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினான் குருசாமி. பழைய போலீஸ்காரர் !

குருசாமிக்குக் கோபம் வந்தது. எதற்காக அந்தப் போலீஸ்காரன் திரும்பவும் தன்னிடம் வம்புக்கு வர வேண்டும் ? ''கையை எடு சாரு. நான் ஒண்ணும் குறுக்கே நுழையலே, யாரை வேணுமானாலும் கேட்டுக்குங்க !''

'' நீ வாடா இப்படி. இது வரைக்கும் இன்னிக்கு எத்தனை தடவை நீ அரிசி வாங்கினே?''

குருசாமி விழித்தான்.

'' ஓர் ஆளுக்கு ஒரு படிதானே கணக்கு. நீ பாட்டுக்கு வாங்கிக்கிட்டே இருக்கியே. என்ன சங்கதி. சொல்லுடா, அரிசியை வெளியே கொண்டுபோய் என்ன விலைக்குத் தள்ளினே?''


குருசாமி மேலும் விழித்தான்.

'' மரியாதையா சொல்லுறியா? உதை வாங்குறியா ? கையைக் காட்டு, எவ்வளவு காசு வெச்சிருக்கே ?''


குருசாமி கையைப் பின்னால் மறைத்தான். 'பளார்' என்று பிடரியில் ஓர் அடி விழுந்தது. அவன் நிலை குலைந்துபோனாலும் கீழே விழாமல் சமாளித்துக் கொண்டான்.

'' பிச்சுப்பிடுவேன் படவா ! கொண்டு போய் 'லாக்-அப்' பண்ணிடுவேன் !''

குருசாமியின் கையிலிருந்த ஆறணாவை அவன் 'வெடுக்' கென்று பிடுங்கிக் கொண்டான். '' சர்க்கார் அரிசியையா விக்கிறே ? இந்தக் காசைச் சர்க்காருக்குக் கட்டிப்பிட்டு உன்னையும் ஜெயிலிலே போடணும். இந்தத் தடவை உன்னை மன்னிச்சி விடறேன். ஓடிப் போ ! திரும்பிப் பார்க்காமல் ஓடு !''



ஊட்டமும்
ஊக்கமும்
ஒருங்கே பெற
ராகோமடைன்
புத்துணர்ச்சி
அளிக்கும்
சிறந்த பானம்
AN IDEAL
FOOD BEVERAGE
பைன் கெமிகல்ஸ் ஒர்க்ஸ், மைசூர்



TEXMO
SINGLE
PHASE
MOTORS
MANUFACTURED BY:
TEXMO INDUSTRIES.
METTUPALAYAM ROAD, COIMBATORE. 2.
3 பேஸ் மோட்டார்களும் (1 H.P. முதல் 10 H.P. வரை)
வீடுகளுக்கு ஏற்ற பம்பு செட்டுகளும் கிடைக்கும்
விசேஷ அம்சங்கள் : * அதிக சக்தி வாய்ந்தது * பால்பேரிங்குகள் பொருத்தப்பட்டது * விற்பனைக்கு அனுப்புவதற்கு முன்பு பூராவும் பரிசோதிக்கப் படுகிறது * பூரண உத்தரவாத முடையது
சென்னை ஆபீஸ்: 17, தம்புசெட்டித் தெரு, சென்னை - 1 போன்: 55297
RPS

குருசாமி திகைத்துத் திணறி நின்றான். அவனுக்கு எதுவுமே ஓடவில்லை. அவனுக்குத் தோன்றியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். உடனே அங்கிருந்து ஓடிப் போக வேண்டும். போலீஸ் மீண்டும் அதட்டியது. "என்னடா முழிக்கறே? இந்தப் பக்கமே இனி தலையைக் காட்டக் கூடாது. ஓடு!"

குருசாமி ஓடினான். கொஞ்ச தூரம் ஓடி, 'சட்'டென்று நின்று திரும்பிப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன. பிடரியில் அடி வாங்கிய உறுத்தல். கைக் குட்டையை எடுத்து முகத்தையும் கழுத்தையும் துடைத்தான். திணறல் நின்றது. திகைப்பு நீங்கியது. அவனுக்கே உரிய துறுதுறுப்பு இயல்பாக அவனை வந்து அடைந்தது.

அவன் கூறினான். "இரு பேய்! கல்லெடுத்து உன் மண்டையை நல்லா ஒடைச்சுப் போடுறேன்!"

போலீஸ்காரர் முறைத்தார். குருசாமி மேலும் கொஞ்ச தூரம் ஓடிப் போய் நின்று கொண்டான். ஒரு காலையும் ஒரு கையையும் தூக்கித் தூக்கிக் கூத்தாடினான்.

"கோமாளிப் பயல்! காசைக் கொடுத்திட்டுக் கூத்தாடுறான்" என்றார் ஒருவர்.

"எல்லாமே கூத்தா தானுங்களே இருக்கு. இருக்கிற சட்டம், நீதி, ஒழுங்கு எல்லாம் ஏழைகளை அடக்கி வைக்கத்தான் இருக்கே ஒழிய அவைகளாலே உண்மையான பலன் இருக்கா? மூட்டை மூட்டையா அரிசியைப் பதுக்கி வைக்கிறான், பிறகு கொள்ளை லாபத்துக்கு விக்கிறான். இது பகிரங்கமாகத்தான் நடக்குது. ஆனால் சட்டமும் நீதியும் கண்ணை மூடிக்கிட்டுத்தானே இருக்கு! இப்போ இந்தப் பையன் அரைப்படி அரிசி வாங்கறதுலேதான் குடி முழுகப் போகுதோ!" என்று அலுத்துக் கொண்டார் மற்றொருவர்.

"அப்படி இல்லிங்க! அந்தப் போலீஸ்காரருக்கு அரிசி வாங்கப் பணம் வேண்டியிருந்திருக்கும். யாரைப் பிடிக்கலாம்னு சுத்தியிருப்பாரு. அந்தப் பையன்தான் கிடைத்தான்......" என்றார் முன்னவர்.

பின்னர் பதில் கூறுமுன் அங்கு ஒரு சிறு குழப்பம் உண்டாகிவிட்டது. காலையிலேயே அரிசி வாங்கிச் சென்ற நான்கைந்து பேர் திரும்பி வந்து, அரைக்கால் படி அரிசி குறைவதாகப் புகார் செய்து, படியை உடனே பரிசோதனை செய்ய வேண்டும் என்று பிடிவாதம் செய்தார்கள். பேச்சு வளர்ந்து குழப்பம் அதிகமாகுமுன் போலீஸ்காரர் குறுக்கிட்டார். "நீங்கள் போங்கய்யா! படியை நான் சோதனை போட்டுப் பார்க்கச் சொல்றேன். உம்... போங்க, போங்க, எத்தனை பேர் காத்துக்கிட்டிருக்காங்க? அவங்களுக்கெல்லாம் அரிசி போடுவதா? உங்ககிட்டே பேசிக்கிட்டு இருக்கிறதா? நகருங்க...."

நிலைமை ஒழுங்காயிற்று. போலீஸ்காரர் கடைக்குள் நுழைந்தார். "வாங்க சார்!" என்று அவரை வரவேற்ற கடைச் சிப்பந்தி, "பையை இப்படிக் கொடுங்க" என்று வாங்கி அதில் இரண்டு படி அரிசியை அளந்து விட்டு, "கொண்டு போங்க. 'பில்' அப்புறம் போட்டு வைக்கிறோம்!" என்றான். அதன் பொருள் போலீஸ்காரருக்குப் புரியாததல்ல. அளப்பவன் அளவைக் கொஞ்சம் இழுத்துப் பிடித்தால் மூட்டை மூட்டையாகக் கூட அரிசியைச் சுருட்ட முடியும் என்பதும் அவருக்குத் தெரியும். "சரி நான் வரேனுங்க" என்று சொல்லிவிட்டுக் கடையை விட்டு வெளியே வந்தார். குருசாமியிடமிருந்து பறித்த ஆறணா அவர் கையிலேயே இருந்தது.

குருசாமி தூரத்தில் இருந்தவாறே ஏதோ ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தான். கிழவி கூச்சலிட்டாள். "டேய், பயலே! உனக்குத் திரும்பவும் கோணல் புத்தி வந்துடுச்சாடா?... இங்கே வாடா, டேய்..."

கிழவியைப் பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. போலீஸ்காரர் அவளை அணுகினார்.

"அந்தப் பையன் ஒனக்கு என்ன ஒறவும், கிழவி?" என்று கேட்டார்.

"என்னுடைய பேரப் பிள்ளைங்க. கொஞ்ச நாளா ஒழுங்காத்தான் இருந்தான். இன்னைக்கி என்னமோ கிறுக்கு வந்திடுச்சி."

கிறுக்கு வந்ததற்குக் காரணம் தான்தானே என்ற எண்ணம் அவர் நெஞ்சைக் குத்தியது.

"அரிசியை நீதான் வாங்கச் சொன்னியா, இல்லாட்டி விக்கறத்துக்கு வாங்க வந்தானா?"

"சத்தியமா நான்தானுங்க வாங்கச் சொன்னேன். காலையிலேருந்து இன்னும் பச்சைத் தண்ணிகூடக் குடிக்கலீங்க." இதைக் கூறும் போது கிழவியின் குரல் தழுதழுத்தது. அவளுக்கு உண்மையிலேயே தாங்க முடியாத பசி!

போலீஸ்க்காரர் ஆறணாவை எடுத்துக் கிழவியிடம் தந்தார். "மணி பத்துதான் ஆகுது. இன்னும் இரண்டு மணி நேரத்துக்கு அரிசி போடுவாங்க. வாங்கிக்கிட்டுப் போ!" என்றார்.

கிழவியின் கையிலிருந்த காசை, குருசாமி 'வெடுக்'கென்று பிடுங்கினான். "சனியன்! கிழட்டுச் சனியன்! எல்லாம் உன்னாலதான். பேசாமல் இட்டிலி வாங்கித் தின்னிருக்கலாமே!"

"நல்ல மனுசனானதாலே காசைக் குடுத்துப்பிட்டாரு. இன்னொரு பயலா இருந்தா கொடுத்திருப்பானா? எதையாச்சும் சொல்லி மாட்டிக்கிட்டு உதை வாங்காதே. ஜெயில்லே உன்னே புடிச்சுப் போட்டுப் பூட்டிடுவான்!"

"ஹூம்......சிறைச்சாலே என்ன செய்யும்? இந்தா! ஓரணா வைச்சுக்க. என்னமோ ஒண்ணுமோ வாங்கிக்கோ. வடையோ, பொரி கடலையோ, வெத்தலையோ, பாக்கோ, சுண்ணாம்போ எதுவோ ஒண்ணுன்னாலும் வாங்கிக்கோ. அது உன் இஷ்டம். நான் போறேன்......திரும்பி வரேம்..."

குருசாமி தன் கையிலிருந்த பாக்கிப் பணத்தைச் சினிமாவுக்குச் சென்று செலவழித்து விட்டான். சினிமா பார்த்துவிட்டுத் திரும்பியபோது அவன் மனம் கனத்தது.

குருசாமி மெள்ள நடந்தான். பசி அவனை எரித்தது. பிள்ளையார் கோவில் பின்புறமும் ஆற்றங்கரை அரச மரமும் ஒரு கணம் அவன் எண்ணத்தில் மின்னி மறைந்தன. இருட்டுக் குடிசையில் முடங்கிக் கிடக்கும் பாட்டியின் தோற்றம் அவனை வழிமறித்தது. அவனுக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது.

உச்ச நிலைக்கு விருத்தியடைந்துள்ள உன்னத விற்பனை.

லோமா உங்கள் கேசத்தை கருமை
யுடன் விளங்கச் செய்வதுடன் அதை
எழிலுடன் பிரகாசிக்கவும் செய்கின்றது.
அதனால்தான் பெரியோரும்,
சிறியோரும், ஆடவரும், பெண்டிரும்,
எல்லோரும் ஒருமுகமாக, இந்தியாவிலும்,
மற்றும் வெளிநாடுகளிலும்
லோமாவையே விரும்பி வாங்குகிறார்கள்.

லோமா

கேசத்தைக் கருமையாக்குவதில்
பாரினில் புகழ்பெற்றது.





பூரண ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாத்வாலா அஹமதாபாத்—1
ஏஜெண்டுகள் :
ஸி. நரோத்தம் அண்டு கோ. பம்பாய்—2

TAM.

சென்னை ஏஜண்டுகள் ஜே. பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள் சிர்குல் கதீர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

பிறந்த மண்

'தடக்...தடக்...தடக்...'

விருத்தாசலம் சந்திப்புக்கு விடை கொடுத்து விட்டு, திருச்சி நோக்கி விரைந்து கொண்டிருந்தது எக்ஸ்பிரஸ்.

கைக் கடிகாரம் மூன்றரைக்கு மேல் காட்டியது. ரயில்வே கால அட்டவணையின் படி, வண்டி இந்நேரம் டால்மியாபுரத்தைக் கடந்திருக்க வேண்டும். இடையே, விழுப்புரத்துக்கு அருகில் ஏனோ தாமதமாகிவிட்டது.

ஜன்னலோரமாக உட்கார்ந்திருந்த நான், வெளியே தலை நீட்டிப் பார்த்தேன். மறு விநாடி, 'சரக்' கென்று தலை உள்ளே வந்து விட்டது. அவ்வளவு குளிர். மார்கழி மாதம். பனிக்குக் கேட்க வேண்டுமா? விடி வெள்ளியின் வெண்கதிர்கள் போல், குவலயத்தைக் கவ்விக் கொண்டிருந்தது பனிப்படலம்.

உள்ளத்தில் இனந்தெரியாத ஓர் உணர்வு. ஆதியும் அந்தமுமற்ற சிந்தனைத் தொடர். என்றோ மறைந்து போன சம்பவத் தொகுப்பின் நிழலாட்டம் என் உள்ளக் கவரில் அப்படியும் இப்படியும் ஆடிக் கொண்டிருந்தது.

ஆயிற்று: இன்னும் இரண்டு மணி நேரத்தில் பிறந்த மண்ணை மிதிக்கப் போகிறேன். உற்றார், உறவினர், வீடு வாசல் என்றெல்லாம் உறவு கொண்டாட வகையில்லா விட்டாலும், என்னைப் பெற்ற மண் என்ற ஒரே உண்மையும் பந்தமும் போதாதா?

ஒன்றல்ல, இரண்டல்ல— அயோத்தி, ராகவனுக்கு விடை கொடுத்தாற் போல் —எனக்கும் நான் பிறந்த மண் விடை கொடுத்தனுப்பிப் பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்று, அந்தக் காவேரிக் கரைக்குச் சலாம் போட்டு விட்டு ஓடியவன், இன்றுதான் திரும்புகிறேன்.


பஞ்சுக்குப் பதில் பணத்தாள்களை அடைத்துப் படுத்துறங்கும் பம்பாய் சேட்டுகளிடம் கைகட்டி வேலை பார்த்தாகி விட்டது. சொந்த ஊரின் நினைவு தலைதூக்கியது. பார்த்துக் கொண்டிருந்த வேலைக்கு ஓலை கொடுத்து விட்டு, ஏதோ கையில் சேர்த்து வைத்திருந்த பணத்துடன் வண்டியேறி விட்டேன்.


"இந்தாங்க, தம்பி!... கொஞ்சம் ஜன்னலைப் போடுறீங்களா?... ஒடம்பு வெட வெடத்துப் போகுதுங்களே!..."

பெட்டியின் மறு ஓரத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது. தாமிரபரணி வாடை வீசும் பேச்சு. உள்ளமும் உணர்வும் சிலிர்த்துக் கொண்டன. பதில் ஒன்றும் பேசாமல், வலக் கையால் கண்ணாடி ஜன்னலைப் பொருத்தினேன். ஜன்னலிலிருந்து கையை எடுக்கும் போது, புறங்கையின் மீது என் பார்வை எதேச்சையாய் ஓடியது.

கையின் மையத்தில் ஒரு வடு. தீப்பட்ட புண் ஏற்படுத்திய தழும்பு.

இடது கையினால், அத்தழும்பை மெதுவாக ஆசையுடன் தடவிக் கொடுத்தபடியே, பின்புறம் சாய்ந்து கொண்டேன். கண்கள் இலேசாக மூடிக் கொண்டன. விழிக்கும் இமைக்கு மிடையே அம்மா தோன்றினாள். மாநிறமாக இருந்தாலும், முகத்தில் ஒரு தேஜஸ். உதட்டில் எப்போதும் புன்சிரிப்பு. தலைகொள்ளாத கோடாலி முடிச்சு. அருளே வடிவான அந்தப் பார்வை.





என் தாயார் — என்னை ஈன்றெடுத்த அந்தத் தெய்வம் — என்றென்றும் தன்னை என் நினைவில் இருத்திக் கொள்வதற்காக ஏற்படுத்திய அந்த வடுவின் வரலாறு.

* * *

திருச்சி மாவட்டம் என்றாலே, உடனே எல்லோர் உள்ளத்திலும் எழும் நினைவு, திருவரங்கமும் திருவானைக்காவலும் தான்.

இரண்டும், இரண்டு உயர்ந்த தலங்கள், வைணவமும் சைவமும் வையத்தாருக்கு ஒன்றுதான் என்பதை அறிவுறுத்துவதே போல், இரு தலங்களும் ஒன்றையொன்று ஒட்டிக் கொண்டிருந்தன.

பிரபஞ்சத்தில் பிறந்தபோதே பெற்றவருக்குப் பிரியா விடை கொடுத்துவிட்டு, பெற்றவளின் அளவுக்கு மீறிய சலுகையுடன் ஆரம்பத்தில் வளர்ந்த அடங்காப் பிடாரி நான். ஊர்ச் சண்டையெல்லாம் வீட்டு வாசலுக்கு இழுத்து வந்து, உள்ளே புகுந்து விடுவேன். அம்மா அனைவருக்கும் சமாதானம் சொல்லி அனுப்பி விட்டு உள்ளே வருவதற்குள், மாடி ஏறி, வீடுகள் தாண்டி, தெருக் கோடி போய் விடுவேன் நான்.

"அட, பழிகாரா!... உன்னைப் பெற்றதற்கு ஒரு பெரிய பாறாங்கல்லாகப் பார்த்துக் கட்டிண்டு, காவேரியிலே இறங்காமல் போனேனடா!.." என்று அம்மா கூறாத நாட்களே கிடையாது.

ஒரு சமயம்.

இதேபோல் மார்கழி மாதம்தான். திருவரங்கத்தில் உத்சவம் அமர்க்களப்படும். இருபது நாள் பெருவிழா. சமயபுரம், மண்ணச்சநல்லூர், லால்குடி, அரியலூர் முதலிய சுற்றுப்புறங்களிலிருந்தெல்லாம் ஜனங்கள் 'ஜே ஜே' என்று கூடி விடுவார்கள்.

இந்த உற்சவம் வந்து விட்டால், நான் வீட்டில் இருப்பதேது? எந்நேரமும் கொட்டகை வாசம் தான். எனக்கென்று ஒரு கோஷ்டி. வாய் மூடிக் கொண்டு போவோரையும் வலுச் சண்டைக்கு இழுக்கும் கும்பல்.

அவ்வருஷம், வழக்கம்போல் ஒரு நாள் கொட்டகையைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தேன். மூங்கிலினால் ஊதுகுழல் செய்து அடுக்கி வைக்கப்பட்டிருந்த கடை ஒன்று கண்ணில் பட்டது. அருகில் சென்றேன். ஏதோ பை நிறையப் பணம் வைத்திருப்பது போல் ஒவ்வொரு ஊதலாக வாயில் வைத்து இஷ்டப்படி ஊதிப் பார்த்தேன்.

"இந்தாப்பா, தம்பி!... வாங்கறதா இருந்தால் எடுத்துப் பாரு!... இல்லேன்னு, வியாபாரத்தைக் கெடுத்துக்கிட்டுக் குந்திக்கிட்டிருக்காதே!..."

கடைக்காரன் சாதாரணமாகத்தான் சொன்னான். இடது கையில் வைத்திருந்த ஒரு குழலை விசிறி அடித்துவிட்டு எழுந்தேன்.

'பிலஹரி'





திருச்சி மாவட்டச் சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற கதை

“சரி தானய்யா!....என்னவோ பிரமாதப் புல்லாங் குழல் செய்துட்டே!... யாருக்கு ஐயா வேணும் உன் மூங்கில் கம்பு!...” என்றபடியே சடசென்று ஓட்டம் பிடித்தேன். முதுகுக்குப் பின்னால் வலது கையில், ஒரு பெரிய ஊதுகுழல்!

“போய்! போய்!.. அதோ திருடிக்கிட்டு ஓடறான் பாருய்யா!.. பிடிங்கையா! பிடிங்கையா!..” என்று கடைக்காரன் குரல் எழுந்ததும், ஓரிருவர் துரத்தத் தொடங்கினர். நானா அகப்படுவேன்? நாலுகால் பாய்ச்சலில் ஒரே விநாடியில் கோபுர வாசலைக் கடந்து தெருவுக்குள் வந்து விட்டேன்.

ஆனால் சுவாமி தரிசனம் செய்வதற்காக வந்து கொண்டிருந்த அம்மா என்னைப் பார்த்து விட்டாள். நானும் விக்கித்துப் போய் நின்று விட்டேன்.

அடுத்த விநாடி, பின்னால் ஓடி வந்தவர்கள் என்னைப் பார்த்து விட்டார்கள்.

“முளைச்சு மூணு இலை விடல்லே; அதுக்குள்ளே இந்தப் பொழப்பை ஆரம்புச்சுட்டியா, மூதேவி!” என்றபடியே தலையில் இரண்டு குட்டு குட்டிவிட்டு, கையிலுள்ள குழலை எடுத்துச் சென்று விட்டனர்.

அம்மா என்னைக் கடந்து சென்று விட்டாள். என்னைப் பார்த்ததாகவோ தெரிந்ததாகவோ ஏனோ காட்டிக் கொள்ளவில்லை.

நேரே வீட்டுக்குப் போக விருப்பமுமில்லை; துணிவுமில்லை. பகல் முழுதும் ஊர் சுற்றி விட்டு, இரவு ஒன்பது மணிக்கு வாசற் திண்ணையில் ஒடுங்கிக் கிடந்தேன். எப்போது கண்ணயர்ந்தேனோ தெரியாது, வலது கையில் ஏதோ ‘சுர்ர்’ என்று உறைக்கவே அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தேன்.

புகையைக் கக்கும் ஒரு கரண்டியைக் கையில் பிடித்துக் கொண்டு, “எந்தக் கையடா திருடித்து, கழிசடை! எந்தக் கையடா அது?... இன்னொரு இழுப்பு இழுத்துடறேன்!” என்றபடியே அம்மா நெருங்கினாள்.

“இனிமேல் இல்லேம்மா! இனிமேல் இல்லேம்மா! ஐயையோ, எரியறதே! தாங்க முடியல்லியே!” என்று துடிதுடித்தேன்.

கரண்டியை வீசி எறிந்து விட்டு, சாவதானமாக உள்ளே சென்றாள் அம்மா. மறுவிநாடி எண்ணெய்ப் புட்டியுடன் வெளிப்பட்டாள். கரண்டி பட்ட இடத்தில் தேங்காய் எண்ணெயை அம்மா தேய்க்கும்போது, எரிச்சல் உயிரை எடுத்து விட்டது. புழுவாக நெளிந்து விட்டேன்.

“ஏன்டா, பாவி! ஒழுங்கா இருந்து தொலையக் கூடாதாடா? அப்பனை முழுங்கிட்டேன்னு, இருக்கிற நிலபுலன்களை யெல்லாம் விற்றுப் படிக்க வைச்சா, ஏன்டா இப்படி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கணும்?” என்றவாறே என் தலையை மார்பில் பதித்துக் கொண்டாள் அம்மா. அவள் கண்கள் உகுத்த நீர் என் உச்சந் தலையை நனைத்தது.

பதினெட்டாம் பெருக்கு.

திருச்சி ஜில்லாவில், காவேரிக்கரையில் அமைந்துள்ள எல்லா ஊர்களிலும் ஒரே அமர்க்களம்தான்.

பொங்குமாங்கடல் போல் சீறி எழுந்து விடுவாள் பொன்னித் தாய். நுங்கும் நுரையுமாக, கரையிலுள்ள பச்சைப் பயிர்களை யெல்லாம் வாரி அடித்துக் கொண்டு அவள் ஓடி வரும் அழகைப் பார்க்கத்தான் எவ்வளவு கூட்டம். படித்துறையில் காலை நீட்டிக் கொண்டு, வெள்ளத்தை ரசித்துக் கொண்டிருந்தேன்.

எதிரே உறையூர்ப் படித்துறை. அதற்குக் கிழக்கே வானளாவி நிற்கும் உச்சிப் பிள்ளையார் கோவில் மலை. இடது கைப்புறம் சுமார் நாலு பர்லாங்கு தூரத்தில் ஆற்றைக் கடக்கும் வண்டிப் பாலம். பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன காட்சிதான்.

“ஐயோ! ஐயோ! குழந்தை விழுந்துடுத்தே! அதோ, போறதே! அதோ போறதே!” என்ற குரல் என் செவிகளைத் துளைத்தது. அவ்வளவுதான்; மறு விநாடி, மின்சாரம் பாய்வது போல் இழுக்கும் அந்தச் சுழுவளி இழுப்பிலே வெகு சிரமத்துடன் நீந்திக்கொண்டிருந்தேன். எப்படியோ உயிரைப் பணயம் வைத்து, குழந்தையை மீட்டு விட்டேன். மறுபடியும், தட்டுத் தடுமாறிய படியே கரையில் கால் வைத்ததும், அப்படியே படுத்து விட்டேன். என்னைச் சுற்றிலும் ஒரே கூட்டம்.

“எவ்வளவு தைரியம், சார்! ஓடற தண்ணியிலே குதிச்சு ஒரு குழந்தையைக் காப்பாத்தியிருக்கானே!”

“பாவம்! யார் பெத்த புள்ளையோ? அறியாத வயசு! தொப்புனு என்னமா குதிச்சான்?....என்னமா குதிச்சான்?”

“அடடே! ‘இது’தானா? யாருடான்னு பார்த்தேன்! ஏன் குதிக்காது? குரங்கு ஜென்மம் ஆச்சே!”

“இந்தக் கத்தாரிதானா? இதுதானே ‘இது’க்கு வேலை! வீட்டுக்கு அடங்கி, ஒடுங்கி, படிக்கிற பையனா இருந்தால் இப்படிப் பயம் இல்லாம ஒரு காரியம் செய்யுமா?”

மெதுவாக எழுந்து நின்று, ஒரு முறை சுற்றிப் பார்த்தேன். மனித ஜென்மங்களா அவை? நாய் விற்ற காசு குரைக்காது என்பது உண்மையானால், நான் செய்த காரியமும் நல்லதாக ஏன் உலகம் எடுத்துக் கொள்ளவில்லை? மௌனமாக வீட்டை நோக்கி நடையைக் கட்டினேன்.

வாசலில் உலர்த்தியிருந்த விறகுக் கட்டைகளைத் திண்ணையில் அடுக்கிக் கொண்டிருந்தாள் அம்மா. வழக்கமாக என் வேலை அது. இன்று நான் ‘டிமிக்கி’ கொடுத்து விட்டதால், அம்மாவின் தலையில் அந்தப் பொறுப்பு விழுந்து விட்டது. ரொம்பவும் சாது போல், வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தேன்.

“ஏன்டா, பாவி!... இப்படி வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிறே?....மறு விநாடி, அம்மா கையிலுள்ள சிறிய விறகுக் கட்டை ‘விர்’ரென்று பாய்ந்து, பாதத்தைத் தாக்கியது. அப்படியே, வேக வைத்த கிழங்கின் தோல் உரிவதுபோல், சதை நழுவிவிட்டது. காலைப் பிடித்துக்கொண்டு, கீழே உட்கார்ந்து விட்டேன். நேத்து ராத்திரி வாசல் முனிசிபாலிட்டி விளக்கை உடைச்சுட்டேன்னு, சித்தே முந்திதான் அவன் கூச்சல் போட்டுட்டுப் போனான்!...‘உன்பிள்ளை வெள்ளத்திலே விளையாடறான்டீ’ன்னு பக்கத்து வீட்டுப் பாட்டி இப்போத்தான் சொல்லிட்-

டுப் போனு!...நீ பிறக்கல்லேன்னு எந்தக் கோவிலிலேடா நான் தபஸ் பண்ணினேன்?'' அழுகையும் ஆதங்கமுமாக அம்மா அருகில் வந்தாள்.

அந்தப் புண் ஆறுவதற்கு ஆறு வாரங்களுக்கு மேலாகி விட்டது. சாதாரணப் புண் குழிப் புண்ணுக மாறி, புரையோடிக் கடைசியில் ரண சிகிச்சை செய்யும் அளவுக்கு வளர்ந்தது அது. ஏற்படுத்திய வடுதான் இதோ—

திடீரென்று ஒரு குலுக்குக் குலுக்கி, வண்டி நின்றது. சுய உணர்வு அடைந்தேன்.

'' என்ன ஸ்டேஷன். ராவுஜி! எட்டிப் பாருமேன்!''

'பிக்ஷாண்டார் கோவில்' என்ற பெரிய கரியெழுத்துக்கள் கண்ணைத் துளைத்தன.

பழைய ஸ்டேஷனுகவா இருக்கிறது? எத்தனை, எத்தனை மாறுதல்கள்? அப்போது ஒரே ஒரு சின்ன அறை மாதிரி காட்சியளித்த ஸ்டேஷன் கட்டிடம் இப்போது பெரிதாகி யிருந்தது.

எனக்கும் இந்த ஸ்டேஷனுக்கும் உள்ள உறவு இது மாத்திரமல்ல; என்றென்றும் என் உள்ளத்தில் அழியா இடம் பெற்ற ஸ்டேஷன் இது. காரணம்—

அப்போது, நான் பள்ளிச் சிறுவனுக இருந்த போது, திருச்சி ஜங்ஷனிலிருந்து காலை பத்தரை மணிக்கு ஒரு ஷட்டில் லால்குடி செல்லும். எங்கள் பள்ளிக்கூடத்தின் அண்மை யிலேதான் ஸ்டேஷன். பள்ளிக்கு ஒழுங்காகப் போவது என்பதுதான் என் அகராதியில் கிடையாது. சரியாக, வாரத்துக்கு இரண்டு மூன்று தடவைகள். அந்த வண்டியில் ஏறி விடுவேன், டிக்கெட் இல்லாமல்.

ஒரு சமயம்—

வழக்கம்போல் படிக்கட்டில் நின்றபடியே, 'ஜம்'மென்று பிக்ஷாண்டார் கோவில் ஸ்டேஷனில் வந்திறங்கினேன். தரையிலே குதித்து வேறு பக்கம் நகருவதற்குள், வலுவான கரம் ஒன்று என்னைப் பற்றியது. திரும்பிப் பார்த்தேன். புது ஸ்டேஷன்மாஸ்டர்!

சற்றுக் குள்ளமான உருவம். கரிய நிறம். நெற்றியிலே பட்டை பட்டையாக விபூதிக் கோடுகள். அதன் மையத்திலே, பழைய காலணு அளவு, சந்தனப் பொட்டு. அந்த வெள்ளை உடுப்புக்கும், அவர் கரிய நிறத்துக்கும் வெகு பொருத்தம்! பயத்துக்குப் பதில் சிரிப்புத்தான் எழுந்தது என் முகத்தில்.

'' டிக்கெட் இருக்கா, தம்பி—?''

'' டிக்கெட்டா? அப்படீன்னு?—'' ஏதோ ஆச்சர்யத்தைக் கேட்டு விட்டதுபோல், வினவினேன்.

ஒரு சில வினடிகள் என்னையே உற்றுப் பார்த்தார் ஸ்டேஷன் மாஸ்டர்.

'' எத்தனுவது படிக்கிறேடா, குழந்தை?''

'' ஒன்பதாவது, சார்!''

'' வயசு என்ன ஆகிறது?''

'' பதினைந்து இருக்கும், சார்!''

'' இந்த வயசிலே நான் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செஞ்சுட்டேன்டா, தெரியுமா?''

நான் பதிலே பேசவில்லை, வகுப்புக்கு இரண்டு வருஷங்கள் வீதம் குத்தகை எடுப் பவன் நான்.

'' உனக்கு அப்பா இருக்காராடா?''

'' இல்லே சார்! அம்மா மாத்திரம்தான்!''

'' நினேச்சேன்! பொம்மனுட்டி வளர்க்கிற புள்ளேங்கறது முகத்தைப் பார்த்தாலே தெரி யறது! நானே ரெண்டு தடவை உன்னே இந்த இடத்திலே பார்த்திருக்கேன். போனுப் போறதுன்னு விட்டுட்டேன்! இதோ பாருடா, குழந்தை! அம்மா கஷ்டப்பட்டுப் படிக்க வைக்கறு. நல்லபடியா, ஒழுங்கா படிச்சு முன்னுக்கு வர வேண்டாமாடா?''

விக்கித்து நின்று விட்டேன். 'தத்தாரி, போக்கிரி, குரங்கு ஜென்மம்' என்றெல்லாம் தான், இதுவரை என்னே உலகம் நினைத்து, ஒதுக்கித் தள்ளியது. ஆனல், இதோ ஒரு ஜீவன்—நான் முன்பின் பார்த்துப் பழகி யறியாதவர், எவ்வளவு அன்புடன் பேசுகிறார்.

அன்று எங்களிடையே ஆரம்பித்த உறவு, நாளா வட்டத்தில் வலுவடையத் தொடங் கியது. வாரத்துக்கு ஒரு முறை, அதுவும் விடுமுறை நாளாகப் பார்த்து, இந்த ஸ்டே ஷன் வந்துவிடுவேன். ஒரு சில சமயம், மணி அடிப்பது, அவருக்காக விசில் கொடுப்பது முதலியவைகூட நான் செய்வதுண்டு.

'' ஏன்டா, பயலே! ஒருநாள் வீட்டுப்பக்கம் வாயேன்டா! கோட்டையிலே ஆண்டார் தெருவிலே தானேடா இருக்கேன்!'' என்று அடிக்கடி அவர் சொல்வதுண்டு. ஏனே நானும் போகாமலே இருந்தேன்.

ஒருநாள் மிகவும் பலவந்தம் செய்து அழைத் தார். நானும் அவர் வீட்டுக்கு வருவதாக ஒப்புக்கொண்டேன்.

'' இன்னிக்கு ஸ்கூல்லே ஸ்பெஷல் கிளாஸ், அம்மா!'' என்று வீட்டில் ஒரு வெடியைப் போட்டுவிட்டுக் கிளம்பி விட்டேன்.

மலேக் கோட்டை அடிவாரத்தை அடைந்த வுடன்தான், ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டு எண்ணைக் கேட்காதது நினைவுக்கு வந்தது. இக்கோடியிலிருந்து அக்கோடிவரையில் ஆண் டார் தெருவில் நடை பயின்றதுதான் மிச்சம். அவர் வீட்டைக் கண்டுபிடிக்க என்னவோ முடியவில்லை. அதற்காக, வந்ததற்கு வீணுகத் திரும்பலாமா? மலேக் கோட்டையில் ஏறத் தொடங்கினேன்.

அன்று ஏனே கூட்டம் அதிகமில்லை. ஓரிருவர் தொலைவில் வந்து கொண்டிருந்தனர். ஒரே ஒரு பெண் குழந்தை—சுமார் ஆறு அல்லது ஏழு வயதுதான் இருக்கும்—எனக்குச் சமமாகப் படியேறி வந்து கொண்டிருந்தாள். குட்டிச் சுவருக்கு ஆகிறுப் போல், எனக் கென்னவோ பதினைந்து வயதாகி விட்டது. அந்தப் பெண் குழந்தையை ஏன் யான் வம்புக்கு இழுக்க வேண்டும்? சற்றுக் களேத் தாற்போல், அந்தப் பெண் ஒரு படியில் உட்கார்ந்து கொண்டாள்.

'' என்ன பாப்பா! கால் வலிக்கறதா?''

'' என்ன சொன்னே? எனக்கா கால் வலிக்கும்? உனக்குத்தான் கால் வலிக்கும், தெரிஞ்சுக்கோ!'' வெடுக்கென்று கூறினுள் அந்தக் குழந்தை. நான் சும்மா இருந்து தொலைத்திருக்கக் கூடாதா?

'' அப்படீன்னு எழுந்து நில்லேன் பார்ப் போம்! யார் முதல்லே உச்சிக்குப் போறேன்னு பார்க்கலாம்!'' என்றேன்.

மறு விநாடி இருவரும் இரண்டு படி களுக்கு ஓர் அடி வீதம் மேலே நோக்கி ஓடத்

தொடங்கினேனும். ஆயிற்று; இன்னும் பத்துப் பதினைந்து படிகள்தான் பாக்கி. அடிவாரத்திலிருந்து வேர்க்க விறுவிறுக்க வந்ததினுலோ என்னவோ, என் கால்கள் கெஞ்சின; வேகம் தடைப்பட்டது. எனக்கு முன்னதாக இரண்டு படிகளுக்கு அப்பால் சென்று கொண்டிருந்த அந்தப் பெண்ணின் காலைச் சடேரென்று இழுத்து விட்டேன், ஆத்திரத்துடன்.

அவ்வளவுதான்; அதன் பிறகு நடந்தது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. அப்படியே மட மடவென்று, ஏறி வந்த படிகள் வழியே அந்தப் பெண் உருண்டு சென்ற காட்சி இன்னும் என் கண்களை விட்டு அகலவில்லை.

"ஐயோ! பிருந்தா! பிருந்தா!" என்று ஒரு சிலர் கூவிக் கொண்டே ஓடி வந்தனர். மறுவினாடி, சிட்டாகப் பறக்கத் தொடங்கிய வன்தான்; அடுத்த பத்தாவது நிமிஷம் அம்மா மண்டபப் பாலத்திலே ஊரை நோக்கி ஓடிக் கொண்டிருந்தேன்!

அச் சம்பவத்துக்குப் பிறகு, ஒரு வாரம் வீட்டை விட்டு அகலவில்லை. உள்ளத்தில் ஒரே திகில். அந்தப் பெண்ணின் கதி என்ன வாயிற்றோ, யார் கண்டது?

பத்து நாட்களில், ஸ்கூல் பைனல் பரீட்சை குறுக்கிட்டு விட்டது. என்னவோ ஒப்புக்கு எழுதி வைத்தேன். ஆனால், ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம், நான் தேர்வு பெற்றதுதான்.

ஏதோ இதற்காகவே காத்துக் கிடந்தது போல், அம்மா கண்ணை மூடிவிட்டாள்.

பெற்றெடுத்த அந்தத் தெய்வம் போன பிறகு, பிறந்த மண்ணில் இனி எனக்கு யார் இருக்கிறார்கள்?

ஊர் கசந்தது. உலகம் கசந்தது. ஏன், நானே எனக்குக் கசப்பாகி விட்டேன். எங்கேயாவது, கண் காணாத இடத்துக்கு, நம்மவர் கண்ணில் படாத இடத்துக்குப் போகத் தீர்மானித்து ஒரு நாள் இரவு, உள்ளங்காலில் ஒட்டிக் கொண்டிருந்த காவேரி மண்ணை உதறிவிட்டுக் கிளம்பி விட்டேன். அன்று சென்ற என்னை, என் பிறந்த மண் இவ்வளவு வருடங்கள் கழித்து ஏனோ அழைத்திருக்கிறது.

அந்தி வேளை.

உச்சிப் பிள்ளையார் கோவிலின் சின்னஞ் சிறிய பிராகாரத்தின் ஒரு மூலையில் என்னை மறந்து நின்று கொண்டிருந்தேன். உணர்வுக்கும் உள்ளத்துக்கும் குளுமை தரும் இந்தச் சுற்றுப்புறக் காட்சிகளைக் கண்டுதான் எத்தனை நாட்கள் ஓடிவிட்டன?

"வாம்மா! இத்தனை நேரம் உனக்காகத் தான் காத்திண்டிருந்தேன்!"

திரும்பிப் பார்த்தேன். கோவில் குருக்கள் படிக்கட்டுகளின் பக்கம் நின்று கொண்டிருந்தார். அடுத்த நிமிஷம், கையில் சின்னஞ் சிறிய ஓலைப் பெட்டியில் பூஜைக்கு வேண்டிய உபகரணங்களுடன் ஒரு பெண் படி ஏறிச் சந்நிதிக்கு எதிரில் வந்து நின்றாள்.

"அப்பாவுக்கு உடம்பு சரியில்லே, மாமா! அதான் நான் மாத்திரம் வந்தேன்!" என்றபடியே கையிலுள்ள தட்டை, குருக்களிடம் கொடுத்தாள் அவள்.

இளம் வயதுதான். கூர்மையான விழிகள். முகத்திலே ஓர் அடக்கம். பளிங்கு போன்ற நிறம். அடர்த்தியான அளகபாரம். சாதாரண வாயில் புடவையும் தலையில் வைத்திருந்த ஒற்றை ரோஜாவும் பொலிவைக் கொடுத்தன!

அர்ச்சனை முடிந்தது. கற்பூரத்தட்டை ஏந்திக் கொண்டு வெளியே வந்தார் குருக்கள். தீபச்சுடரைக் கண்களில் ஒற்றிக் கொண்டு, பிரதட்சணம் வருவதற்காக இடது புறம் திரும்பி இரண்டு அடி எடுத்து வைத்தாள் அந்தப் பெண். என் இதயத்தில் ஏதோ ஒன்று 'சுள்' ளென்று குத்தியது. இவ்வளவு அழகைக் கொடுத்த ஆண்டவன், காலில் மாத்திரம் ஏன் ஊனத்தைப் படைத்தான்?

"வரேன், மாமா! மழை வரும் போலிருக்கு! இன்னும் எத்தனை வெள்ளிக்கிழமை வரணுமோ?" என்று கூறிப் புறப்பட்டாள்.

"போயிட்டு வாம்மா! கவலைப்படாதே! விக்னேசுவரர் கண் திறக்காமலா இருப்பார்!"

"திறப்பார்! திறப்பார்! தனக்கு 'ஒரு வழி' செய்துக்கும் போது, எனக்கும் 'ஒரு வழி' செஞ்சு வைப்பார்!"

வேதனையுடன் கூறிவிட்டு, இறங்கி விட்டாள் அவள். அந்தப் பேச்சின் உள் அர்த்தம் எனக்கு விளங்காமல் இல்லை. கண் பார்வையிலிருந்து அவள் உருவம் மறைந்ததும், குருக்களிடம் சென்றேன். "சுவாமி! தவறாக எண்ணக் கூடாது!... இப்போ வந்தாளே ஒரு பெண்....அந்தப் பெண்ணின் காலையும் பேச்சையும் கேட்டவுடன் எனக்கு...." என்று இழுத்தான்.

"என்னவோ அப்பா! பெண் விளையாட்டம் தங்க விக்கிரகம் மாதிரி இருக்கா! ஆனால் வர வரனெல்லாம் அந்தக் காலைப் பார்த்துட்டுத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஓடுகிறார்கள்! அந்தப் பெண்ணும் நாலு வருஷமா வெள்ளி தவறாமல்தான் கோவிலுக்கு வரா! வழி பிறக்கல்லியே!" என்றார் குருக்கள்.

இதயம் கனக்க, மௌனமாகப் படியிறங்கத் தொடங்கி விட்டேன்.

"சார்! சார்!"

ஏதோ யோசனையுடன் தெருவோடு சென்ற நான், அந்த வீட்டுத் திண்ணையை நெருங்கிச் சென்றேன்.

"சார்! நீங்கள்...நீங்கள்..." கொஞ்சம் தயங்கினார் அவர். ஒரு சில வினாடிகள் அவரையே உற்றுப் பார்த்தேன். உற்சாகம் பீறிட்டுக் கிளம்பியது எனக்கு. ஆதுரத்துடன் அவர் கைகளைப் பற்றிக் கொண்டேன்.

"ஆமாம், சார்! நான்தான்; நானேதான்" கரகரத்த குரலில் கூறினேன். அவர் உள்ள நெகிழ்வை அந்த முதிர்ந்த முகமே காட்டி விட்டது. பழைய ஸ்டேஷன் மாஸ்டர்தான்!

"எவ்வளவு உசந்து எப்படி ஆயிட்டேடா நீ! இன்னிக்குக்கூட உன்னைப் பற்றித்தான் என் வீட்டிலே சொல்லிண்டிருந்தேன். அந்த மூனிசிபாலிட்டி விளக்கு வெளிச்சத்திலேதான் உன் மூஞ்சி பளிச்சுனு தெரிஞ்சுது! எதுக்கும் கூப்பிட்டுப் பார்க்கலாமேன்னுதான்."

இருவரும் திண்ணையில் உட்கார்ந்தோம். பேசுவதற்கா விஷயமில்லை? என்னைப் பற்றி ஒன்றுவிடாமல் சொன்னேன்

"என்னவோடா! பழையபடி இல்லாமல், இப்போவாவது பொறுப்பா இருக்கியே. அது போதும். வயசானா எல்லாம் சரியாப் போய் விடும்னு எனக்கு அப்பவே தெரியும்!" என்றவர் உட்பக்கம் திரும்பினார்.

"இந்தாம்மா, பிருந்தா! இப்படிக் கொஞ்சம் வாயேன்!"

சற்றைக்கெல்லாம், கண்ணாடி வளையல் குலுங்கும் ஓசை கேட்டது. பின்பக்கம் இருட்டில் ஒரு பெண் வந்து நின்றாள்.

"அடுப்பு மூட்டிச் சாதம் வடிம்மா! நான்கூட அடிக்கடி சொல்வேனே, அந்தப் பையன்தான் இவன்!" என்றார். தலையசைத்து விட்டு, அவள் உள்ளே திரும்பும்போது, என் இதயம் நடுநடுங்கியது.

மலைக்கோட்டையில் பார்த்த அதே பெண்! காலைச் சாய்த்து நடக்கும் அந்தப் பெண்தான்!

என் முகக் குறியிலிருந்து, என் உள்ளத்தை உணர்ந்து கொண்டார் அவர். வேதனை கவ்வியது அவர் வதனத்தில்.

"நான் செய்த பாவமப்பா! பிறக்கும்போது நன்றாகத்தான் பிறந்தாள்! நடுவிலே ஏற்பட்ட ஊனம் இது! மலையிலிருந்து உருண்டு விழுந்தவள் பாதாளத்துக்குப் போயிருந்தால், எலும்புகூடக் கிடைக்காமல் போயிருக்கும்! பெரியவா செஞ்ச புண்ணியம், நடுவிலேயே யாரோ பிடிச்சு நிறுத்திட்டா! கால் மாத்திரம் இப்படி. நீதான் இவளையெல்லாம் பார்த்ததுகூடக் கிடையாதே!"

சம்பந்தா சம்பந்தமில்லாமல், சொல்லிக்கொண்டே போனார் அவர். ஆனால், உண்மையின் உருவம் எனக்குத் தெரிந்துவிட்டது.


பதினைந்து வருஷங்களுக்கு முன்பு — இதே மலைக்கோட்டையில் நான் செய்த அந்தப் பாவ காரியம் என் உள்ளத்தில் நிழலாடியது. என் உடல் சிலிர்த்தது.

சற்றைக்கெல்லாம், கையில் காப்பித் தம்ளருடன் வெளி வந்தாள் அவள்.— பிருந்தா! திண்ணையில் தம்ளரை வைத்துவிட்டு, மௌனமாகக் குனிந்த தலையுடன் உள்ளே சென்ற அவள் உருவம் எனக்கொரு உறுதியைக் கொடுத்தது.

"சார்! வருத்தப்படாதீர்கள். எங்கே இந்த பெண் என்னை விட்டு விடுமோ என்று இதுவரை எண்ணியிருந்தேன்! மறுபடியும் ஒரு காரணமாகத்தான் என் பிறந்த ஊர் என்னை அழைத்திருக்கிறது. உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால், வரும் தையிலேயே ஒரு நாள் பாருங்கள்! உத்தமர் கோவிலில் ஆடம்பரமில்லாமல் பிருந்தாவை நான்..."

நான் முடிக்கவில்லை. உணர்ச்சி வயமான அவர், என் கைகளைப் பிடித்துக் கொண்டு விக்கித்து உட்கார்ந்துவிட்டார்.

ஊனமேற்படுத்திய நானே, உறவையும் உண்டாக்கிக் கொள்ள உறுதியெடுத்ததை ஆமோதிப்பதேபோல், உச்சிப் பிள்ளையார் ஆலயமணி நாதம் கம்பீரமாகக் காற்றில் அலைமோதி வந்தது.



சிரிக்காதே!

சன்மானம்!

கச்சேரி செய்த வித்வான்: தயவு செய்து சன்மானம் தேங்காய் மூடிகளாகக் கொடுத்து விடாதீர்கள்...!

காரியதரிசி: பணம் கொடுப்பதற்கில்லை; தேங்காய் மூடிதான் கொடுக்க எங்களால் முடியும்!

வித்வான்: தேங்காய் மூடிகள் வேண்டாம்! முழுத் தேங்காயாகவே கொடுத்து விடுங்கள். நான் தேவைப்படும்போது உடைத்துக் கொள்கிறேன்!

சர்வக்ஞர் தேவை!

"நான், மிருதங்கம், கடம், கஞ்சிரா, மோர்சிங் எல்லாம் வாசிப்பேன்; எனக்கு ஒரு கச்சேரியில் சான்ஸ் கொடுங்கோ!"

"எல்லாம் ஒரே சமயத்திலேயே வாசிப்பீர்களா? அப்படின்னு ஒரு சான்ஸ் கொடுக்கிறேன்."

சங்கீத ஞானமு.

சங்கீத விழாவுக்குத் தலைமை தாங்கும் ஒரு பெரிய மனிதர்:

"எனக்குச் சங்கீதத்தைப் பற்றி எதுவுமே தெரியாது. என்னை ஏன் கூப்பிட்டார்கள் என்று எனக்கே புரியவில்லை. வேறு இரண்டு சங்கீத விழாக்களில் பேச வேண்டி இருப்பதால் என் பிரசங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்!"

அவஸ்தை!

கச்சேரிக்குக் கிளம்பினார் பாகவதர். "அடாடா, கிளம்பும்போது யாரோ தும்முகிறார்களே. உள்ளே வாருங்கள்" என்றாள் மனைவி. பாகவதர் உள்ளே போகக் கிளம்பினார். "அடடா! இன்னொரு தும்மல்! உள்ளேயும் போகவிட மாட்டார்கள். வெளியேயும் போகவிட மாட்டார்கள் போலிருக்கே!" என்றார் பாகவதர்.

வியாக்கியானம்!

"ஏன் சார் கச்சேரியில் பல்லவி பாடுகிறார்கள் என்று சொல்லுகிறார்களே, பல்லவின்னு என்ன?"

"எனக்குப் புரிந்ததை, நீங்க ஏதோ தெரியாமல் கேட்கிறீரே என்று சொல்லுகிறேன். அனுபல்லவியும், சரணமும், இல்லாமலிருந்தால் அதுதான் பல்லவி!"

அதுவா காரணம்!

"என்ன சார்! அந்தக் கொட்டகையில் ஓடும் தமிழ்ப் படம் 'போர்' தூக்கம் தான் வரும் என்று சொன்னார்கள். நிறைய கூட்டம் வந்திருக்கிறதே."

"ஓ! அவர்களெல்லாம் தூக்கம் வராமல் பாடுபடுகிறவர்கள். டாக்டர் யோசனையின் மேல் எல்லாரும் தூங்குவதற்கு இங்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்!"

போனசு ஆண்டு
1959

இன்றே

'இலாபத்துடன்கூடிய'

பாலிசியினைப் பெறுவீர்

விரைவில் இரண்டாம் மதிப்பீடு

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனின் இரண்டாவது மதிப்பீடு 31 டிசம்பர் 1959ல் செய்யப்படும். மதிப்பீட்டு நாளில் உள்ள 'இலாபத்துடன் கூடிய' நடைமுறையில் இயங்கும். தகுதியான பாலிசிகள் அனைத்தும், அந்த மதிப்பீட்டின் விளைவாக வெளியாகின்ற இலாபத்தில் பங்குபெற உரிமை உள்ளவை ஆகும்.

31 டிசம்பர் 1957 அன்று வரை செய்யப்பட்ட கார்ப்பொரேஷனின் முதல் மதிப்பீடு காட்டிய மிகுதித்தொகை, கீழ்க்காணும் வீதப்படி கார்ப்பொரேஷன் வழங்கிய 'இலாபத்துடன் கூடிய' பாலிசிகளுக்கு போனசாக உதவப் போதுமானதாக இருந்தது.

என்டௌமென்ட் காப்புறுதிகள் : (Endowment Assurances,	காப்புத்தொகை (Sum Assured) ஆயிரத்திற்கு ஆண்டுக்கு ரூ. 14
முழு ஆயுள் காப்புறுதிகள் : (Whole Life Assurances)	காப்புத்தொகை ஆயிரத்திற்கு ஆண்டுக்கு ரூ. 17½

முக்கியமானது : 31 டிசம்பர் 1959க்குள், குறைந்த தொகைக்குக் 'கட்டி முடிப்பு'ச் செய்த பாலிசிகள் (Paid-up Policies) அல்லது காலாவதி யான பாலிசிகள் போனசு பெறத்தகுதி உடையனவாகா.


பாலிசியைப் பாதுகாப்பாக வைத்துப் பேணுங்கள். அப்போதைக்கு அப்போது செலுத்தவேண்டிய பிரீமியங்களைத் தப்பாது ஒழுங்காகச் செலுத்துங்கள். இரண்டாவது மதிப்பீட்டின் விளைவாகக் கிடைக்க இருக்கும் போனசுக்கு உங்கள் பாலிசியைத் தகுதியுள்ளதாக்க உறுதிகொண்டு வழிகாணுங்கள்.

நினைவிலிருத்துங்கள் 1959 போனசு ஆண்டு

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

பலூன் வெடித்தது







சுபப்ரா

ரமணய்யா குளிரில் நடுங்கியவாறு நடைபாதையில் அமர்ந்திருந்தான். காற்றில் அசைந்து கொண்டிருந்த விளக்குச் சுடர் அவனது இருப்பைப் பிரகடனப்படுத்தியவாறு வாடிக்கைக் காரர்களுக்கு அழைப்பு ஒளி விடுத்துக் கொண்டிருந்தது. 'ஒற்றைக் கண்' ராக்ஷஸன் போல் டைனமோ விளக்குடன் வரும் சைக்கிள்களையெல்லாம் அவன் சட்டை செய்வதில்லை. 'மினுக் மினுக்' என்று எரியும் எண்ணெய் விளக்கு ஏந்தி வரும் வாகனங்கள் தூரத்துப் புள்ளியாக வரும் போதே அவனைக் கவர்ந்து விடும்.

வானம் கறுத்து, விளக்கு ஏற்றிய பிறகு சூடு பிடிக்கிற வியாபாரம் அவனுடையது. எத்தனை ஊர்திகளுக்கு அவன் விளக்கு ஏற்ற உதவுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனது சம்பாத்தியம் பிரகாசிக்கும். அவனது குடிலில் அடுப்பு எரிய முடியும். போகிற போக்கில் சைக்கிள் சொந்தக்காரர்கள் தங்கள் விளக்குகளில் எண்ணெய் நிரப்பிக் கொண்டால் மூன்று நயா பைஸாக்களாக அவனது பெட்டி நிறையும்.

இரவுக் கல்லூரி மாணவர்கள் திரும்பி விட்ட சைக்கிள் ஓசை தேய்ந்து அதிக நேரமாகி விட்டது. இனி இரண்டாம் ஆட்டம் சினிமாவாடிக்கைகள்தாம்.

அதிலும் கூட இனி அகால வேளையில் போலீஸ் நடமாட்டம் இராது என்று துணிந்து போகிற சக்கரசாரதிகளும், டைனமோ போர்வழிகளும் போக எஞ்சியவர்களில் வீட்டில் எண்ணெய்திரிபோடாத ஞாபக மறதிப் புள்ளிகள் ஒன்றிரண்டு நேரிடுவதும் உண்டு!

வியாபார நம்பிக்கை ஊட்டியபடி நெருங்கும் பலர், நெருப்புக்குச்சி செலவுனின்றி, எரிகின்ற விளக்கைப் பொதுவுடைமையாகக் கருதி, தங்களுடைய விளக்கை ஏற்றிச் சென்று விடும் அனுபவம் தான் அதிகம்.

முட்டைக் கைகளால் வளைத்துக் கொண்டு உடம்பின் உஷ்ணத்தைத் தேக்கி, புறக்குளிர் பாதிக்காதவாறு ஏதோ நேரத்தைப் போக்கிக் கொண்டிருந்தான் ரமணய்யா. நடைபாதைக்கல்லின் சில்லிப்பு, ஆசனமாகிக்கிடந்த சாக்கு மடிப்பை மீறி அவனைத் தாக்கிக் கொண்டிருந்தது.

ஒரு காற்றடிக்கும் பம்பு வாங்கிப் போட்டால் மளமளவென்று நாலு காசு பார்க்கலாம். அதைப்பெறுவதற்குரிய 'முதல்' கிடைத்தால் மாதாந்திரமாக 'வாஷர்' செலவு மட்டும்தான்! பஞ்சர்பாக் கூலி

யில் கடை வைத்திருக்கும் ரஹீம் ஆறு மாசத்தில் முதல் எடுத்து விட்டதாகக் கேள்வி. ரமணய்யாவின் தாயார் காயலாகி, மருந்துக்குக்கூட வழியின்றிச் சோர்ந்து கிடக்கும் போது காற்றடிக்கும் கருவி வாங்குவது பற்றிய கற்பனை நடவாத காரியம்தான்.

இத்தனை சிறிய வயதில் அவன் வாழ்க்கை எவ்வளவு அவலமாகி விட்டது!

• • •

ரமணய்யாவின் தந்தை நாகய்யா செகந்திராபாத் ரயில்வே இலாகாவில் 'நான்காம் வர்ண' உத்தியோகஸ்தனாகப் பணியாற்றி வந்தான். ரஸாக்கர்கள் கலவரம் நடந்து கொண்டிருந்த சமயம், ஒரு நாள் மாலை வல்லகூடா ஸ்டேஷனில் வண்டிக்குக் காத்திருக்கும்போது அவன்மீது கத்திக் குத்து விழுந்து விட்டது. பிளாட்பாரத்திலேயே உயிர் போய்விட்டது.

ஐந்து வயதுக் குழந்தையுடன் நாகய்யாவின் மனைவி பாலம்மா வயிறு வளர்க்கப் படாத கஷ்டமில்லை. ரயில்வே காரியாலயத்தில் தனக்கு 'ஸ்வீப்பர்' உத்தியோகம் கொடுக்கும்படி விண்ணப்பித்தும் பயனில்லை.

ரமணய்யா எட்டாவது வயதை எட்டிப் பிடிக்கு முன்பே குடும்பபாரம் அவனது இளம் தோள்களை அழுத்த ஆரம்பித்து விட்டது. 'லைட் ஹவுஸ்' தியேட்டரில் அவனது ஒன்று விட்ட மாமா செந்திரய்யா 'சைக்கிள் ஸ்டாண்டு' குத்தகை எடுத்திருந்தான். சைக்கிள்களை வாங்கி, அடையாள வட்டு வழங்குவது, காட்சி முடிந்ததும் வட்டும் காசும் பெற்று வாகனத்தைத் திருப்புவது முதலான பணிகளில் மாமனுக்கு உதவியாக இருந்தான். இந்தச் சில்லறை வேலைக்கு மாமன் ஒழுங்காகச் சம்பளம் என்று போட்டுத் தராவிடினும் ஏதோ 'படி' அளந்து வந்தது உண்மை. ஒரு நாள் சைக்கிள் மாறி வழங்கப்பட்டதனால் ஏற்பட்ட நஷ்டத்தின் விளைவாக ரமணய்யாவின் சீட்டைக் கிழித்து விட்டான்.

இறுதியில் சீம எண்ணெய் வியாபாரத்தில் அவனது கவனம் சென்றது. பாட்டிலாக மண் எண்ணெயை வாங்கி, இன்னும் சில பட்ட ரகத்தையும் கலந்து, பத்து சைக்கிள் விளக்குகளுக்கு நிரப்பினால் அவனுக்கு நாலணா தேறும். அதற்கு ஆறு மணி நேரம் கொட்டுக் கொட்டென்று விழித்துக் கொண்டு வியாபாரம் புரியவேண்டும். கிடைக்கிற பணத்தை ஒரு காசு செலவழிக்காமல் தாயாரிடம் கொடுப்பதில் அவனுக்குத் திருப்தி.

அப்துல் போல் அவனுக்கும் சைக்கிள் ரிக்ஷா ஓட்டிச் சம்பாதிக்க வேண்டுமென்று கொள்ளை ஆசை. ரூபாய்க் கணக்கில் தாயாரிடம் கொண்டு வந்து கொடுத்து, நோவு நொடியின்றி அவளைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது அவனது லட்சியக் கனவு. வாடகை ரிக்ஷாவை வலிக்கும் பலம் தனது கால்களுக்கு இல்லை என்று கூட அவன் பொருட்படுத்தவில்லை. வயதின் காரணமாகத் தனக்கு 'லைசென்ஸ்' வழங்க மாட்டார்கள் என்ற தடைதான் தனக்குக் குறுக்காக நிற்பதாக அவன் எண்ணினான். வருமானத்தைப் பெருக்கி, வாழ்வை வளமாக்கி, தாயைப் பாதுகாக்க எந்தவிதமான உடல் சிரமத்தையும் மேற்கொள்ளத் தயாராக இருந்தான் இளைஞன் ரமணய்யா.

• • •

ரமணய்யா தனது நடைபாதைக் கடையை மூடிவிட்டுக் கிளம்பிவிட்டான். தூக்குக்காய்ப் பெட்டியை அருகு மரத்தின்மீது ஏற்றி விட்டு, எண்ணெய்ச் சீசா - சிம்னி விளக்கு சகிதம் புறப்பட்டு விட்டான்.

'ரமணய்யா, வீட்டுக்குப் போறியா?' சையது ரிக்ஷாவை நிறுத்தி நாலு நிலக்கடலையை வழங்கினான்.

''சையதண்ணே, இன்னைக்குச் செழிப்போ?''

''நாம்பல்லி ஸ்டேஷன் சவாரி கிடைச்சது. போய் வாரேன். என்ன பாய், எக்ஸிபிஷன் போனியா?''

''என்னண்ணே, கலாட்டா பண்ணிறே!''

''தமாஷா இல்லையடா. வருத்துப் பாட்டுக்குத்தான். கரீம் பாய், 'இரண்டு தலைப் பொண்ணு' ஸ்டால் வைச்சிருக்காராம். வாசல்லே ஆட்கள் சேகரிக்க 'ஆலி' பொம்மை ஆடணுமாம். மணிக்கு நாலணா தருகிறாராம். போறியா?''

''கசக்குதா பாயி? நாளைக்கே அழைச்சிக்கிட்டுப் போறியா?''

''ஹுஷாலா; நாளைக்கு சினிமா சவாரி முடிச்சிக்கிட்டு இங்கு வர்றேன்.''

பரதநாட்டியப் பெண்ணின் சலங்கை ஒலியுடன் ரிக்ஷா நகர்ந்து விட்டது. ரமணய்யாவின் மனத்தளத்தில் சந்தோஷம் நடனமாடியது. நாளைய ஆட்டம் முழுதாக அவன் கையில் ஒரு ரூபாயைக் கொண்டு தந்தால், தாயாரை வைத்தியரிடம் அழைத்துச் செல்லலாம்!

குடிசையில் நுழைந்த ரமணய்யா எண்ணெய்ச் சீசாவை மூலையில் வைத்து விட்டுத் தன் தாயாரை அணுகினான். விளக்கின் மென் திரியிலே சற்றே ஓட்டிக் கொண்டிருந்த சின்னஞ் சிறு சுடர் குடிலின் இருட்டைப் போக்கப் போதுமானதாக இல்லை. ஒளியில் கூடவா பற்றுக்குறை!

''அம்மா!''

''ஏண்டா, நாயினு! இவ்வளவு நேரம் ஆயிடுச்சா?'' வழக்கமான கேள்வி; ஆனால் அன்பின் விளிப்பு அது.

''இந்தாம்மா!'' என்று கூறியவாறு அன்றையச் சம்பாத்தியமான முப்பது காசுகளை அவளிடம் தந்தான். அவளது கைகளை ஸ்பரிசித்த அவன் திகைத்து விட்டான். மீண்டும் மாலை ஜுரம் வந்திருக்கிறது.

''சோறு பொங்கி வைச்சிருக்கேன். சாப்பிடு ராசா! அடுத்த வீட்டு ஆயா ஆவக்கா தொக்கு கொடுத்தனுப்பிச்சது பாரு!''


''ஏம்மா, நீ சாப்பிடலே?''


''எனக்கு வாந்தி எடுக்க வருது. நாயினு!''

அவளது உணவில் குறுக்கிட்டது ஜுரமல்ல; பையன் மேலிருக்கிற பாசம்தான் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது. 'இருக்கிற உணவை உழைக்கிற மகனுக்குப் படைப்போம்' என்ற பரிவு காட்டிய தியாக புத்தி தான் அதற்குக் காரணம்.


'இறைவா! இத்தனை அன்பு செலுத்தும் தாய்க்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? நிறையச் சம்பாதித்து, அவள் வயிறு வாடாமல் பார்த்துக் கொள்ளும் பாக்கியத்தைக்


ஜீவசக்தி நிரம்பியது ...
மைவிடல் குடும்பத்தினர் அனை வருக்கும் அதிக உற்சாகம் தருகின் றது. அநேக வைடமின் சத்துக்களுடன் கூடிய மைவிடல் ஸிரப் குழந்தை களின் வைடமின் சத்துக்குறைபாடு களை நீக்கி குழந்தைகள் ஆரோக்ய முடன் வளர உதவுகிறது.
மைவிடல்
சாராயப் பொருள் சேராதது
அநேக வைடமின் கூடிய ஸிரப்
டிரேட் மார்க்
MYVITEL
ஸ்ரீ மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிட்., பெங்களூர்-3.


உணவருந்த
பயப்பட வேண்டாம்
ஹ்யூலட்ஸ்
மிக்சர்
உணவிற்குப் பின் வரும் வயிற்று வலியை நிரந்தர மாகப் போக்குகிறது.
ஸி. ஜே. ஹ்யூலட் அண்டு ஸன்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்
96/A, நைனியப்ப நாயக் தெரு.
மதராஸ்-3
CJH/835 a



விநயம்
வேகம்
திறமை



அநேகமாக நீங்கள் எப்பொழுதுமே உங்கள் அலுவல்களை அவசரத்துடன் செய்யவேண்டியிருக்குமென எங்களுக்குத் தெரியும். அதனால் பெட்ரோல் பம்பில் செய்யப்பட வேண்டிய வேலைகளை அதிசீக்கிரமே செய்யவேண்டியதாக இருக்கும். ஆகையால்தான் எங்கள் ஏஜெண்டுகளின் பயிற்சியளிக்கப்பட்ட சிப்பந்திகள் உங்கள் காருக்கு வேண்டிய தேவைகளை அமைதியாகவும், வேகமாகவும், ஒழுங்காகவும் செய்து கொடுக்கின்றனர்.

மேலும் எங்களுடைய விநயமான ஆசார உபசாரங்கள், நீங்கள் பர்மா-ஷெல் ஸ்டேஷனுக்கு வரும்போது, உங்களை வரவேற்று முக்கியமான வாடிக்கைக்காரராகப் பெருமிதமடையச்செய்கிறதென்பது நிச்சயம்.



அதுதான்
பர்மா-ஷெல்லாரின் சேவை !

கொடு. அப்படிப் பாடுபடுவதற்காக இந்த உடலை எந்தவிதமாக வேண்டுமானாலும் வருத்தத் தயாராக இருக்கிறேன்' என்று பிரார்த்தித்து விட்டுப் படையலை இரு பங்காகப் பங்கிட்டான் ரமணய்யா.

"ஒரு பிடியாவது உண்டால்தான் எனக்குச் சோறு இறங்கும். நீயும் வா" என்று அழைத்தான் மகன்.

பாலம்மா எழுந்து பையனின் சம்பாத்தியத்தை மூலையில் இருந்த திருப்பதி வெங்கடாசலபதி படத்தருகே வைத்து வணங்கினாள். முதிர்ச்சி அடையாத தனது மகன் சிறுகச் சிறுகச் சேர்த்த காசுகள் என்ற பெருமிதத்தோடு ஒரு தகர டப்பியில் வைத்து மூடினாள். 'நாளையப் படி அளப்பதற்கு நாங்கள் எவ்வாறு உதவப்போகிறோம்?' என்ற வெட்கத்தோடு அந்தக் காசுகளும் டப்பிக்குள் தங்களை மறைத்துக் கொண்டன.

மறுநாள் ரமணய்யா நடைபாதைக் கடையை மூடிவிட்டுச் சையதுடன் புறப்படுவதற்குள் மணி எட்டாகி விட்டது.

மின்சார விளக்குகள் செய்யக்கூடிய இந்திரஜாலவித்தைக்கு இலக்கணமாக இருந்தது அந்தப் பொருட்காட்சி. இந்திய கலாசாரத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருந்த ஆசார வாயில் வழியாகச் சாரிசாரியாகக் கூட்டம் சென்ற வண்ணம் இருந்தது. வாசலில் நின்ற தொண்டர்களுக்கு ஏதோ போக்குக் காட்டிவிட்டு உள்ளே நுழைந்தனர் இருவரும். சிறுவர் கேளிக்கை மைதானத்தருகே கரீம்பாய் ஸ்டாலைக் கண்டு பிடிப்பதற்குள், விளையாட்டு ரயில் இரு வட்டம் வந்து விட்டது.

"என்ன, தம்பி! வேலை செய்யவா வந்தீங்க? வேடிக்கை பார்க்க வந்தீங்களா? இன்னிப் பொழுதுக்கு ஆளு இருக்குது. நாளைக்குப் பொழுதோட வந்திடு."

விநாயக முகம் படைத்த பிரும்மாண்டமான ஆளி ஆடி ஆடி எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தது. ஆனால் ரமணய்யாவுக்கு அது தனது தாமத வரவைக் கண்டு பரிகசிப்பது போலத் தோற்றம் அளித்தது. உள்ளிருந்து ஆட்டுவிக்கும் கூலியை அவன் பார்க்கவில்லை; ஆனால் அவன்மீது ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது!

"நீ வேணும்னு சுற்றிப் பார்த்துவிட்டு வா. நான் இங்கே பேசிக்கிட்டிருக்கேன்!"


விழிகளை அகல விரித்தபடி ரமணய்யா கூட்டத்துக்குள் நகர்ந்தான். புதியதொரு நகரமே சிருஷ்டிக்கப்பட்டதுபோல் இக்குத் தெரியாதபடி எங்கெங்கும் கடைகள்; அவை எத்தனை எத்தனை வகை!

'எந்நேரமும் காநேரம்' என்று விளம்பரப் படுத்திய தேநீர் ஸ்டாலின் சன்னலில் கோப்பைகள் உராயும் ஓசை பலமாக இருந்தது. வயிற்றின் வாதனையை அடக்க, 'அரை கப் பருகலாமா?' என்று அருகில் சென்றவனை 'கப் இரண்டணா' என்ற விலை விளம்பரப் பலகை தடுத்து நிறுத்தியது.

எச்சிலைக் கூட்டி விழுங்கியபடி வழி நடந்தவனை அரசாங்க விவசாய இலாகா வருந்தி அழைத்தது. கூட்டுறவு முறை நாட்டுக்கு அளிக்கும் நலம் பற்றி எழுதியிருந்த ஆயிரமாயிரம் 'விவசாய உண்மைகள்' அவனுக்கு விளங்கவில்லை. உரமுள்ள விளை நிலம் தந்த மிகப்பருத்த மக்காச் சோளக் கதிர் ஒன்று அவனது கவனத்தை ஈர்த்தது. நெருங்கிப் படர்ந்த அதன் முத்துக்கள் இரு ஜீவன்களுக்கு ஒரு வேளைப் பசிக்கு ஈடு கொடுக்கும். கூட்டம் குறைந்த நேரத்தில் அவனது கை அதன் பக்கமாக நகர்ந்தது. இன்னும் இரண்டொரு விநாடிகளில் குறிப்பு அட்டை கதிரின் தோழமையை இழந்து தனிமையை அனுபவித்திருக்கும்.

"சீ, பாலம்மாவின் புதல்வனா நான்! இத்தனை நாட்கள் இல்லாமல் இப்பொழுது எங்கிருந்து திருட்டுப் புத்தி வந்தது? நெறியற்ற முறையில் வயிறு வளர்க்கும் சிறுமையை, மறந்தும் என் தாயார் எனக்குப் புகட்டியது இல்லையே!"

அறிவு பசியை வெல்ல, அவனது கை பின் வாங்கியது. சர்க்காரது விவசாய இலாகா ஸ்டாலில் இருக்கும்போது அல்லவா இந்தப் 'பறிமுதல்' எண்ணம் அவனுக்குத் தோன்றியது. அது அந்த மண்ணின் விசேஷமோ?



பாட்டி: டேய் மணி! என் விசிறிக் கட்டையைக் காணோமே! யாரோ எங்கேயோ எடுத்து வைத்திருக்கா. நீ அதைப் பார்த்தாயோ?

மணி: நேற்றைக்கு அம்மா அதை என் முதுகிலே வச்சா, நான் பார்த்தேன். அப்புறம் என் கண்ணில் படலே!

• • •

பல வர்ணப் பலூன்கள்; 'காஸ் ஸிலிண்டரி'ல் தேங்கிக் கிடந்த ஜலவாயுவைப் பகிர்ந்து கொண்டு விண்ணிலே பறக்க முற்படும் பலூன்கள்; கைக்கயிற்றைத் தளர்த்திப் பாத்திரத்தில் பாயத் தயாராக இருக்கும் உயர்ஜாதிப் புரவிகள் போல், பிணைப்பு நூலைப் பிய்த்துக் கொண்டு வானத்தை முட்டுவதற்குத் தயாராக இருந்த அழகான பலூன்கள்! ஜலவாயு விளையாட்டுப் பொரு

ளுக்கும் உதவும் வண்ணம் விஞ்ஞானம் எப்படி அடிமையாகி விட்டது!

மெல்ல மெல்ல ரமணய்யா பலூன்காரனை நெருங்கினான். எப்பொழுதோ ஒரு தடவை அவனது தகப்பன் அவனுக்கு வெறும் காற்றடைத்த பலூன் வாங்கித் தந்த நினைவு! அதற்குப் பிறகு இத்தகைய விளையாட்டுப் பொருள்களை வாங்கி ஆனந்திக்கும் அனுபவம் இன்றியே அவனது பாலப் பருவம் கழிந்து விட்டது. இவற்றில் மிகப் பெரிய ஒன்றை வாங்கித் தனது கடையின் அஸ்திவார ஜாதிக் காய்ப் பெட்டியில் பிணைத்து விட்டால் அந்தக் கவர்ச்சியே வாடிக்கைகளை இழுக்குமே! சையது தனது ரிக்ஷாவை மணி மணியான ஆடம்பரப் பொருள்களால் அலங்கரித்திருக்கிறான். சரிதான்: இங்கு முழுவேளைச் சோற்றுக்கு வழியில்லை, விளம்பரப் பொருளாமே? கையிலுள்ள இரண்டணாவைத் தாயாரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நாளை கரீம் பாயின் ஸ்டாலில் வேலை கிடைத்தால்......!

பலூன்காரன் ஸிலிண்டர் வாயில் பலூன் ஒன்றை இறுகப் பிடித்து, குழாயைத் திறந்தான். சுருங்கிக்கிடந்த ரப்பர் பொருள் புதுப் பணம் படைத்தவன் போல் 'குபு குபு' என்று பருத்து, ஓர் உருவமும் பெற்று விட்டது. வெறும் காற்று புகுந்தால் பலூன் மண்ணிலே புரளுகிறது: ஜலவாயுவைப் பெற்றாலோ விண்ணிலே சாடத் துடிக்கிறது.

அதோ மற்றொரு பலூன் வாயு ஆகாரம் செய்த வண்ணம், உப்பிக் கொண்டே...... அடேயப்பா, இன்னுமா விரிகிறது?

'படார்!' காதைத் துளைத்து உடலை அதிர வைக்கும் ஒலி பலூன் வெடித்த சத்தமா? அல்லது பூமியின் அதிர்ச்சியா? கண் இமைக்கும் கணப் பொழுதில் நடந்து விட்டது. ஸிலிண்டர் வெடித்து எங்கும் வாயுப் படலம்! பக்கத்திலிருந்த குழந்தைகள் இருபதடி உயரம் பறந்து, வெடித்த பலூன் போல் சடலமாக வீழ்ந்தனர். ஜலவாயு வெறும் பலூனை மட்டுமல்ல; உடலையே ஆகாயத்தில் தூக்கி விடும் என்பதை நிரூபித்துவிட்டதே! ஸிலிண்டரின் துகள் ஒன்று ரமணய்யாவின் நெற்றிப் பொட்டைத் தாக்கி, அவனை வீழ்த்திவிட்டு, எதிர் வளையல் கடைக்குள் நுழைந்துவிட்டது.

ரமணய்யாவைச் சேர்த்து நான்கு உயிர்கள் பலி. இருவருக்குக் காயம். தொழிற் பொருட்காட்சியில் பிணக் குவியலும் இடம் பெற்றது. தீயணைக்கும் படையினர், போலீஸார், காட்சி நிர்வாகிகள், பார்வையாளர் - எல்லோரும் ஓடிவந்து சூழ்ந்தனர். சையது தனது சிநேகிதனது உடலை அடையாளம் கண்டான். பணம் சம்பாதிக்க வந்த இளைஞன் இப்பொழுது பிணமாகிவிட்டானே!

பாலம்மாவின் துக்கம் எல்லைக்குள் அடங்கவில்லை. அன்று புருஷனின் மறைவு தந்த துயரத்தை விட, மகனின் மரணம் இன்று அளித்த சோகம் பன்மடங்கு அதிகம். அவளது உதிரத்து ஒரு ஜீவன், இவ்வுலக வாழ்க்கையின் ஒரு பிணைப்பு-இன்று மடிந்து கிடந்தது.

மறைந்தவர்களுக்காக ஒருநாள் பொருட்காட்சி மூடப்பட்டது. 'ஸிலிண்டர்'களுக்கு 'லைசென்ஸ்' வழங்கும் முறை போலீஸ் அதிகாரிகள் பரிசீலனைக்கு ஆளாகியது; பொருட்காட்சியின் தலைவராகப் பணி புரிந்த மந்திரியார் சிரமத்தைப் பொருட்படுத்தாது, பாலம்மாவின் சிறு குடிலுக்குக் காரில் வந்து, நேரிடையாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

பாலம்மாவுக்கு ரூபாய் ஐந்நூறு நஷ்டஈடுத் தொகை தருவதாகப் பொருட்காட்சிக் கமிட்டியில் அங்கீகரிக்கப்பட்டது!

தந்தையின் மறைவுக்குப் பிறகு, முதிர்ச்சி பெறாத இளந் தோள்களில் குடும்ப பாரம் வீழ்ந்த பொழுது, இமைப்பொழுது சோராது, குடும்பத்தின் வறுமையையும் தாயின் துயரத்தையும் துடைக்கமுயன்ற சிறுவன் ரமணய்யா இருந்தபொழுது சிறுகச் சிறுகப் பொருள் தேட முயன்றான்: சிறு துளி போதாது, ரூபாயாகத் தாய்க்குச் சம்பாதித்து அவளது நோயைப் போக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு பொருட்காட்சியின் எல்லைக்குள் நுழைந்தான். 'எனது உடலை வருத்தியேனும் என் தாயைக் காப்பாற்றுவேன்' என்று சொன்னானே, அது எவ்வளவு உண்மையாகி விட்டது! காலனோடு கலந்தாவது நிதிக் குவியலைத் தேடி விட்டான்: இருந்தபோதும், இறந்தபோதும் தாயின் பாதுகாப்பே அவனது செயலாக இருந்து விட்டது!

* * *

குடிசையில் முடங்கிக் கிடந்த பாலம்மாவை எழுப்பி நஷ்டஈட்டுத் தொகையைப் பெறக் காரியாலயத்துக்கு வரும்படி வேண்டினார், நிர்வாகி ஒருவர். இன்னும் ஒரு சில மணி நேரங்களில், வருங்கால அவளது வாழ்க்கையைச் சுகமான இடத்தில் நடத்திச் செல்லக்கூடிய செல்வம் கிடைத்து விடும்: ஆனால் அது தனது புத்திர செல்வத்தின் சவக்குழியில் பூத்த மலரல்லவா?

அவள் எழுந்து வெங்கடாசலபதி படத்தருகே சென்றாள். அன்று ரமணய்யா சம்பாதித்து வந்த நிக்கல் காசுகளில் எஞ்சியவை அந்தத் தகர டப்பாவில் கிடந்தன. அவற்றை எடுத்து நீர் பெருகும் கண்களில் ஒற்றிக் கொண்டாள். ரூபாய் நாணயத்தின் பின்னங்கள்தாம் அவை: ஆனால் அவற்றை உயிரோடு உலவும் அவளது மகன் கொண்டுவந்து அவளது கைகளில் வைத்தபோது அவளுக்கு ஏற்பட்ட ஆனந்தம் எத்தகையது! ஆனால் இன்று அவளைத் தேடி வரும் பெருஞ் செல்வமோ அவளது நெஞ்சைப் பிழிந்து, சோகப் புலம்பலுக்கு ஆளாக்கி விட்டது! இந்தச் சில்லறை நாணயமும் சரி; வரப்போகும் நிதியமும் சரி, இரண்டுமே பாசமே உருவாகி இன்று காலபாசத்துக்கு ஆளாகிவிட்ட அவளது மைந்தன் உடலை அர்ப்பணித்து ஈன்ற பொருள்கள் தாம்! ஆனால் அவள் உயிர் வாழ மூச்சு இழையாக விரும்பியது மகன் என்னும் பிராணவாயுதான்; ஜலவாயு தந்த நஷ்டஈடு அல்ல!

* * *

புத்திரசோகம் மறுநாள் ஒரு பலி கொண்டு விட்டது. பொருட்காட்சியின் நிர்வாகக் கூட்டம் நஷ்ட ஈட்டை என்ன செய்வது என்று விவாதித்துக் கொண்டிருந்தது!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10
Managing Editor, T. Sadasivam.



பளபளப்பான
நீண்ட கரும்
கூந்தலழகுக்கு...
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
இப்பொழுது அழகான இப் புதுமாதிரி சீசாவில்
ரோஜா அல்லது மல்லிகை
மணத்துடன் கிடைக்கிறது.
ERASMIC PERFUMED COCONUT HAIR OIL
ECHO. 4A—50 TM
லண்டனிலுள்ள இராஸ்மிக் கோ. லிட்., சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெடுகுல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

REGISTERED No. M. 4372
Registered as a Newspaper in Ceylon